Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 40 ரூபா • தீபம் 160 • 07.10.2018

சூரியன் பதிப்பகம்

சூரியன் பதிப்பகம் தற்போது புதிய முகவரியில்
காகிததாதிகள் விநியோகத்தர்கள்
புதிய கச்சேரி அருகாமை,
523, திருநகர் வீதி, கிளிநொச்சி 077-2882142



## குருப்பெயர்ச்சி பலன்கள் ஓர் பார்வை

# நிறைய துரோகிகளும்... கொஞ்சம் தியாகிகளும்

## கடற்படையின் சந்தேகத்தை கிளப்பிய படகு புலிகளுடையதா?



## காரைநகரில் ஒரு சிக்கல்!

## ஐந்து வருடமாக விக்னேஸ்வரனுடன் பேசவில்லை!

கிளிநொச்சி கனகபுரம் வீதியில் குடும்பத்துடன் சுவைத்து மகிழ்ந்திட
YARL AHI Ice Cream
யாழ் அகி ஐஸ்கிறீம்


ஒருமுறை விஜயம் செய்து சுவைத்துப் பாருங்கள்
திருமணநாள் மற்றும் பிறந்தநாள் பூப்புனித நீராட்டு விழாக்களுக்கும்
ஏனைய விழாக்களுக்கும் வாகன வசதியுடன் வழங்கப்படும்.
குறிப்பு : மேலதிக விபரங்களை அறிந்திட
www.yarlahi.comஐ பார்வையிடவும்.



இல:-46,உதயநகர் மேற்கு கிளிநொச்சி T.P:-021-7917585,0770232328


நோர்சி மீடியா நிறுவனத்தின்
❖ தீபம் தொலைக்காட்சி
❖ தீபம் வார இதழ்
❖ தீபம் இணையத்தளம் (www.deepamtv.asia)
ஆகிய ஊடகங்களில் உங்கள் பிரதேச செய்திகள், ஆலய நிகழ்வுகள், விளையாட்டு நிழ்வுகள் போன்றவை இடம்பெறவேண்டுமெனில்
தீபம்
DEEPAM TV
உலகத் தமிழர்களுக்கு ஒரு தொலைக்காட்சி
தீபம்
989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர், யாழ்ப்பாணம். (கல்வியங்காடு இலங்கை வங்கி கட்டிடத்தொகுதி)


TOPAZ Mall (Pvt) Ltd.
NO 1 TOPAZ
TOPAZ
No.01 Shop in Jaffna
திருமண பட்டுச்சேலை காஞ்சி புரம் பட்டுச் சேலை சுடிதார் மற்றியல்கள் மற்றும் ரெடிமேட் ஆடைகள்
ஆண்களிற்கான சூட் மற்றும் ரெடிமேட் ஆடைகள்
மிஸ் சுட்டி மிஸ் பியூட்டியாக வலம் வரும் சுட்டிச் சிறுமியர்களிற்கான பஷன் ஆடைகள்
We are Specialist in
Wedding suits, Wedding Sarees , Party Sarees, Wedding Frocks, Party Frocks and all kinds of Items
TOPAZ
No 72, Grand Bazaar
Jaffna
Tel 021 222 4743
Fax 021 222 7645
TOPAZ TAILORING
No 80/24, Kasthuriyar Road
Jaffna
Tel 021 222 4643
Email : topazagn@gmail.com
TOPAZ MALL
No 195, Power House Road
Jaffna
Tel 021 222 4933
021 221 9933
coustomer is king


TILKO hotels
TILKO
JAFFNA CITY HOTEL
TILKO JAFFNA CITY HOTEL
Mob : 077 780 393, 0777 696 443
Address: 70/6, K.K.S. Road, Jaffna, Sri Lanka
Tel: 021 222 5969, Fax: 021 222 7291
e-mail: tilko.tilak@gmail.com Web: www.cityhoteljaffna.com



என்றுதான் முன்னணி காத்திருந்தது.

எல்லா அரசியல் கட்சிகளிற்குமே ஒரு அரசியல் நிகழ்ச்சி நிரல் இருக்கும். எதிர்கட்சிகளை, போட்டி அணிகளை வீழ்த்துவது அதில் முக்கியமான ஒன்றாக இருக்கும். ஆனால் கட்சிகளின் அரசியல் நிரல் என்பது, தனியே எதிரணியை வீழ்த்துவதை மட்டுமே குறிக்கோளாக கொண்டதாக இருக்க முடியாது.

துரதிஸ்டவசமாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி அந்தவகையான அரசியலையே செய்கிறது. கடந்த உள்ளூராட்சி தேர்தல் சமயத்திலிருந்து இந்த வகையாக போக்கு அதிகரித்து செல்கிறது. யாழ் மாநகரசபை முதல்வர் வேட்பாளரை முன்னணி களமிறக்கியதே இப்படியான ஒரு உத்தியுடன்தான். தமிழ் தேசிய கூட்டமைப்பை, ஈ.பி.டி.பியை நோக்கி தள்ளிவிடும் உத்தியது.

திலீபன் நினைவேந்தல் சமயத்தில் முன்னணி தரப்பிலிருந்து ஆக்ரோசமான முன்வைக்கப்பட்ட இன்னொரு கோசம் திலீபனை நினைவு கூர கூட்டமைப்பிற்கு உரிமையில்லை என்பது.

தமிழ் அரசியலில் நீண்ட காலம் கோலோச்சிய தியாகி....

இப்படியான அரசியல் முன்னெடுக்கப்பட்டிருக்கிறதுதான். ஆனால், அப்போதெல்லாம் அதை முன்னெடுத்த தரப்புக்கள் செயற்பாட்டாளர்களாகவும் இருந்தார்கள். செயற்பாட்டுமுறைகளில் விமர்சனங்கள் இருந்தாலும், எல்லோருமே செயற்படுபவர்களாகவே இருந்தார்கள்.

தமிழ் அரசியல் வரலாற்றில் இப்பொழுதுதான் செயற்படுவர்கள் மீது செயற்படாத தரப்பு அதிகளவில் விமர்சனம் வைத்து அதையே ஒரு அரசியல் செயற்பாடாக மாற்றியமைக்க முயலும் பெரும்அரசியல் விபத்து நேர்ந்துள்ளது.

தமிழர்களின் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டதன் பிறகு, ஒரு "அரசியல் அந்தர" நிலைமை தோன்றியிருக்கிறது. தமிழர்களின் அரசியல் தீர்வுக்கான சாத்தியமான செயல்பூர்வ வழிமுறை எதுவென்பதை யாரும் கண்டடையவில்லை. ஒப்பீட்டளவில் தமிழ் தேசிய கூட்டமைப்பு மட்டும்தான் ஒரு வழிமுறையை பிரயோகித்துக் கொண்டிருக்கிறது. கூட்ட



## திலீபன், கஜேந்திரகுமார், சுமந்திரன், விக்னேஸ்வரன், இரா.சம்பந்தன்....

# நிறைய துரோகிகளும்... கொஞ்சம் தியாகிகளும்

தியாகி திலீபனின் நினைவேந்தலை தடைசெய்ய வேண்டுமென யாழ்ப்பாண பொலிசார் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணை முடிவடைந்த பின்னர், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சட்டத்தரணிகளும், கொள்கை பரப்பாளர்களும் களத்திலும், சமூக ஊடகங்களிலும் அதிதீவிரமாக இயங்கினார்கள். "இந்த வழக்கு சோடிக்கப்பட்டது", "புலிகளை நினைவுகூரலாமா என்ற விசயத்தை பேசாமல் தவிர்த்து விட்டார்கள்", "இந்த வழக்கில் நாம் நிராகரிக்கப்பட்டதில் கவலையில்லை, கூட்டமைப்பு எங்கே நிற்கிறதென்பதை காட்டிவிட்டோம்" இப்படி பலவிதமான அபிப்பிரா்யங்களை தெரிவித்தார்கள்.

திலீபன் நினைவுதினத்தை அதிகபட்சமாக தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு அழுத்தம் கொடுக்கும் ஒரு உத்தியாகத்தான் தமிழ் தேசிய மக்கள் முன்னணி கையிலெடுத்திருக்கிறதென்பதை இதன் மூலம் ஊகிக்க முடிகிறது.

அண்மைக்காலமாகவே முன்னணியின் எல்லா நகர்வுகளும், தமிழ் தேசிய கூட்டமைப்பை லொக் செய்ய வேண்டும் என்ற ஒரே நோக்கத்தையுடையதாகவே தெரிகிறது. திலீபன் நினைவுவிடத்தில் தொடங்கி, நீதிமன்றத்திற்குள் வழக்கு நடக்கும் இடம் வரை, கூட்டமைப்பை லொக் செய்ய ஏதாவது பொறிகள் தட்டுகிறதா துரோகி அரசியலின் நீட்சியை அப்படியே தொடர வேண்டுமென முன்னணி எதிர்பார்க்கிறது. ஆனால் ஒரு பலவீனமான பின்னணியிலிருந்து அந்த அரசியலை முன்னெடுக்க முனைகிறோம் என்பதை முன்னணி புரிந்து கொள்ள வேண்டும்.

திலீபனை நினைவு கூர தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு ஏன் தகுதியில்லையென்பதற்கு முன்னணி வழக்கமான சில காரணங்களை சொன்னார்கள். அரசுடன் இணைந்திருக்கிறார்கள், அரசுடன் இணைக்கமாக இருப்பதே ஒரு துரோகம் ஆகவே அந்த கட்சியும் துரோகிகள், ஆகவே அவர்களிற்கு தகுதியில்லையென்பது முன்னணியின் வாதம். திலீபன் நினைவேந்தலை தவிர்த்து, பொதுவாக அரசியல் களத்திலும் இதே வாதத்தையே முன்னணி வைக்கிறது.

முன்னணியின் இந்த போக்கை மிக எளிமையாக இன்னொரு விதமாகவும் புரிந்து கொள்ளலாம். அது இன்ன இன்ன காரணங்களால் தமிழ் தேசிய கூட்டமைப்பு பிழை விடுகிறது, ஆகவே நீங்கள் எங்களை ஆதரியுங்கள் என்பதே. அதாவது, குறிப்பிட்ட பிழைகளை விட்டதனாலேயே கூட்டமைப்பை தவிர்த்துவிட்டுதம்மை ஆதரிக்கும்படி கேட்கிறார்களே தவிர, முன்னணியின் நிலைப்பாடுகளிற்காக அல்ல.

தமிழ் அரசியல் வரலாறு முழுவதும் மைப்பை விமர்சிக்கும் எந்த தரப்பும் சாத்தியமான வழிமுறைகளைதையும் கண்டடையவில்லை. அல்லது, மக்கள் முன் வைக்கவில்லை.


அரசுடன் இணக்கமாக இருப்பது ஒன்றே, இனப்பிரச்சனைக்கான செயல்பூர்வ வழிமுறையல்ல. அப்படியென்றால், இராணுவ துணைக்குழுக்களாக இருந்த அமைப்புக்கள்தான் இனப்பிரச்சனை தீர்விற்கான ஆகச்சிறந்த தரப்புக்களாக இருந்திருக்க முடியும். ஈ.பி.டி.பி கூட முன்னர் அரசுடன் இணக்கமாக இருந்தது, வேலைவாய்ப்பை பெற்றுக்கொடுத்தது. ஆனால் இனப்பிரச்சனை தீர்வு விசயத்தில் அவர்களால் ஒரு அங்குலமும் அன்றைய அரசை நகர்த்த முடியவில்லை. தமிழ் தேசிய கூட்டமைப்பு அரசுடன் நெருக்கமாக இருந்தது, அபிவிருத்தி விசயத்திற்கு முன்னுரிமை கொடுக்கவில்லை ஆனால், புதிய அரசியலமைப்பு வரைபு நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் தருணத்தை நெருங்கியிருக்கிறது. இந்த விஞ்ஞானபூர்வ வித்தியாசங்களையே புரிந்து கொள்ள வேண்டும்.தமிழ்தேசியகூட்டமைப்பின் குறைகளை முன்னிறுத்துவதையே ஒரு அரசியல் செயற்பாட்டியக்கமாக கட்டியெழுப்ப முடியாது. முன்னர் அந்த தவறை ஈ.பி.டி.பி செய்தது. இப்போது தமிழ் தேசிய மக்கள் முன்னணி செய்கிறது.

தமிழர்களின் ஆயுதபலம் இல்லாமல் செய்யப்பட்டுள்ள நிலைமையில், சர்வதேச அழுத்தம் என்ற ஒரே துணையுடன் இனப்பிரச்சனை தீர்வுக்கான ஒரு முயற்சியில் கூட்டமைப்பு ஈடுபட்டுள்ளது. அரசுடன் இணக்கமான போக்கை காண்பிக்காமல் அதை எட்ட முடியாது. இந்த முயற்சியை, அரசுடன் கூட்டு வைத்ததாக கருத முடியாது. ஆனால் முன்னணி அப்படித்தான் கருதுகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகள் அரசுகளுடன் பல தடவை பேச்சுக்கள் நடத்தினார்கள். அந்த பேச்சு சமயங்களில் அரச வளங்களை புலிகள் பாவித்தார்கள். 1990 இல் பிரேமதாசாவிடம் புலிகள் ஆயுதம் வாங்கினார்கள். 1994 சந்திரிகா ஜனாதிபதியாகிய சமயத்தில் விடுதலைப்புலிகளின் வான்புலிகளின் தளபதி கேணல் சங்கர் கொழும்பு சென்று, வெளிநாட்டுக்கும் சென்று திரும்பினார். 2005 தேர்தல் சமயத்தில் மஹிந்த ராஜபக்சவிடம் பணம் பெற்றார்கள். இவையெதுவுமே தவறல்ல. ஆகச்சிறந்த விஞ்ஞானபூர்வமான அணுகுமுறை அதுதான். ஆனால் என்ன, 2005 அணுகுமுறை புலிகளிற்கு சறுக்கிவிட்டது. அதுவே வெற்றியளித்திருந்தால், வரலாறு வேறுவிதமாக மாறியிருக்கும்.

அரசிற்கு எதிராக போராடுகிறோம் என்பதற்காக, தென்னிலங்கை பக்கமே திரும்பி பார்க்காமல் புலிகள் போராடவில்லை. அரசிடமிருந்து

தொடர்ச்சி 6-ம் பக்கம்...



# ஐந்து வருடமாக சி.வி.விக்னேஸ்வரனுடன் பேசவில்லை!

**கா.விக்னேஸ்வரன் நேர்காணல்**
**நேர்காணல்: முரளி**

வடக்கு கிழக்கு மாகாணசபையின் முதலாவது செயலாளர்... நாடாளுமன்ற உறுப்பினர்... 1988 தொடக்கம் 2015 வரையான 27 வருடங்கள் தமிழ் அரசியல் அதிகார மையங்களுடன் நெருக்கமாக பயணித்த நிர்வாக அதிகாரி கலாநிதி கா.விக்னேஸ்வரன். அகில இலங்கை தமிழ் மகாசபையின் தலைவர். தமிழ் அரசியல்,நிர்வாக அலகில் நீண்டகாலம் பயணித்த அனுபவமுடையவர். அவருடைய நேர்காணலின் கடந்த வார தொடர்ச்சி.

**தீபம்: மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்திலும் தீர்வு முயற்சிகளில் பங்களித்தீர்கள். அவற்றிலும் ஏன் வெற்றிபெற முடியவில்லை?**

**கா.விக்னேஸ்வரன்:** சந்திரிகா குமாரதுங்காவின் தீர்வுத்திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படுவதற்கு முதல்நாள், சுதந்திரக்கட்சி மற்றும் ஆதரவு கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஒரு கலந்துரையாடல் நடத்தினார். "நாளை தீர்வுத்திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க போகிறேன். அது வெற்றி பெற உங்களின் சம்மதம் அவசியம். தீர்வுத்திட்டத்தை ஆதரிக்கும் அனைவரும் கையை உயர்த்துங்கள்" என்றார். எல்லோரும் கையை உயர்த்தினார்கள். மூலையில் இருந்த ஒருவர் மாத்திரம் கையை . உயர்த்தவில்லை. அதை சந்திரிகாவும் கவனித்தார். ஆனால் உயர்த்தப்பட்ட கைகளை கணக்கிடும் போது, உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையும், உயர்த்தப்பட்ட கைகளும் சமனாக இருந்தது. காரணம், பிரதமராக இருந்த சிறிமா இரண்டு கையையும் உயர்த்தியிருந்தார்.

இதற்கு பிறகு, "தீர்வுத்திட்டத்திற்கு எதிரான யாராவது இருக்கிறீர்களா?" என கேட்டார். அதற்கும் மூலையிலிருந்தவரின் கை உயரவில்லை. கையை உயர்த்தாமல் மூலையில் உட்கார்ந்திருந்தவர் மஹிந்த ராஜபக்ச.

அந்த காலகட்டத்திலும் அவர் தீர்வு முயற்சிக்கு தயாராக இல்லை. கட்சிகை கட்டுப்பாட்டில் எடுக்க வேண்டும், கட்சிக்குள் இருக்க வேண்டும் என்பதற்காக சுதந்திரக்கட்சியின் தீர்வு முயற்சிகளுடன் ஒத்துழைப்பவரை போல காண்பித்தாரே தவிர, தமிழர்களிற்கு தீர்வை தர தயாராக இருக்கவில்லை. அப்பொழுதே அவரைப்பற்றி எனக்கு தெரியும்.

மஹிந்த ஜனாதிபதியானதும், அவருடன் சேரப் போவதாக டக்ளஸ் தேவானந்தா சொன்னபோது, அப்படி செய்ய வேண்டாமென தடுத்தேன். ஆனால், அவர் அதை கேட்கவில்லை. இதன்பின் நான் அவரை விட்டு விலகி தனிக்கட்சி ஆரம்பித்தேன்.

முதலாவது கிழக்கு மாகாணசபை தேர்தலில் போட்டியிட்ட ஒரேயொரு தமிழ் கட்சி எங்களுடையதுதான். அகில இலங்கை தமிழர் கூட்டணியென்ற பெயரில் போட்டியிட்டோம். தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிகூட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில்தான் போட்டியிட்டது.

மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியானதும் சர்வகட்சி குழுவொன்றை அமைத்திருந்தார்.தீர்வுவரைபொன்றை தயாரிக்க நிபுணர் குழுவொன்றையும் அமைத்தார்கள். அந்த குழுவில் நானும் அங்கம் வகித்தேன். அந்த குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் வந்த அறிக்கையில் தீர்வாக சமஷ்டி தீர்வு திட்டமே வலியுறுத்தப்பட்டிருந்தது.

அதை மஹிந்த ராஜபக்ச ஏற்றுக் கொள்ளவில்லை. திஸ்ஸ விதாரணவிடம்,"ஒற்றையாட்சியை குறிப்பிட்ட அறிக்கையே எனக்கு தேவை" என மஹிந்த கூறியிருந்தார். அதன்பின்னர், ஒற்றையாட்சியை குறிப்பிட்ட அறிக்கையொன்றை சர்வகட்சி குழு முன்வைத்திருந்தது. ஆனால் நிபுணர்குழுவின் அறிக்கையில்,சமஷ்டி முறைமையே குறிப்பிடப்பட்டிருந்தது.

**தீபம்: மாகாணசபை செயற்பாடுகளில் நீங்கள் நிபுணர் என்பார்கள். மாகாணசபையில் நியமனம் முதல் பல விடயங்களில் ஆளுனரின் ஒப்புதல் தேவை. அவற்றையெல்லாம் எப்படி சமாளித்தீர்கள்? அந்த அனுபவங்களை கூறுங்கள்?**

**கா.விக்னேஸ்வரன்:** கிழக்கு மாகாணசபை தேர்தல் முடிந்ததும் பிள்ளையான் என்னை சந்தித்து. மாகாணசபையை நிர்வகிக்க தனக்கு உதவுவீர்களா என கேட்டார். சரியென்றேன். அந்த நேரம் ஜனாதிபதியாக இருந்த மஹிந்த, பிள்ளையானிடம் சொல்லியிருக்கிறார் என்னை மூன்று மாதம்தான் வைத்திருக்கலாம். அதற்கு மேல் வைத்திருக்க விடமாட்டேன் என்று. மூன்று மாதம்தான் எனக்கு நியமனம் தரப்பட்டது. அது முடிந்ததும், வேறு ஒருவரை கண்டுபிடியுங்கள் என ஜனாதிபதி கூறியிருக்கிறார். "எனக்கு ஆலோசகராக விக்னேஸ்வரன்தான் இருக்க வேண்டும். அல்லது வேறு யாருமே வேண்டாம்" என்று பிள்ளையான் கூறினார். தொடர்ந்தும் ஆலோசகராகத்தான் இருந்தேன். ஆனால் வேறு விதத்தில் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தது. சர்வகட்சிகுழுவின் நிபுணர்குழு வழங்கிய சமஷ்டிக்கான அறிக்கையின் பின்னணியில் நான் இருந்ததை மஹிந்த அறிந்திருந்தாலேயே என்னை பிள்ளையானின் ஆலோசகராக நீடிக்க விட அவர் விரும்பவில்லை.

அந்த சமயத்தில் நடந்த இரண்டு விசயத்தை குறிப்பிட வேண்டும். இந்திய அரசுடன் பேசி ஐந்து ரெயில் பஸ், பாடசாலைகளிற்கு கணினிகள் போன்ற உதவிகளை பெற்றேன். பத்து பேரூந்துகளையும் மாகாணசபையின் பயன்பாட்டிற்கு இந்தியா தந்தது. இதில் ஐந்து பேரூந்தை மாகாணசபைக்கு பாவிக்கவும், மிகுதியை பாடசாலைகள், ஆலயங்களிற்கு வழங்க பிள்ளையான் தீர்மானித்தார். அந்த ஐந்து பேரூந்திற்கும் சாரதிகளை நியமிக்க, அவர்களின் பெயர் விபரங்களுடன் நியமன கடிதங்களை மாகாண பொதுசேவைகள் செலாளரிற்கு அனுப்பினோம். அவர் நியமனம் வழங்கியிருக்கலாம்.

ஆனால் ஆளுனரிடம் அதை கொண்டு போய், நியமனம் வழங்க முடியாதென ஆளுனர் சொன்னதை அந்த கடிதத்தில் குறிப்பிட்டு, சிரித்துக் கொண்டு வந்து பிள்ளையானிடம் கொடுத்தார். பிள்ளையானுக்கு பயங்கர கோபம். உடனே என்னை வரச்சொன்னார். விசயத்தை சொல்லி, என்ன செய்யலாமென கேட்டார். இதே ஐந்து பேரையும் மூன்று நாளில் நியமித்து தருவதாக சொல்லிவிட்டு, கொழும்பிற்கு புறப்பட்டேன். இந்திய தூதரை சந்தித்து "நீங்கள் தந்த பஸ்சுக்கு டிரைவர்களையும் இந்தியாவிலிருந்தே தருவிக்க முடியுமா?" என்று கேட்டேன். அவருக்கு பயங்கர அதிர்ச்சி. டிரைவர்களையும் நாங்களா தர வேண்டுமென்றார்.

டிரைவர்களை நியமிக்கும் அதிகாரம் எம்மிடம் இல்லை, 'அது ஆளுனரிடமே இருக்கிறது என்பதை சுட்டிக்காட்டினேன். சிரித்து விட்டு, நிலைமையை சரிசெய்து தருவதாக சொன்னார். உடனே பசில் ராஜபக்சவிற்கு அவர் சொல்ல, பசில் ஆளுனருக்கு உத்தரவிட, அதே ஐவர் சாரதிகளாக நியமிக்கப்பட்டனர். 13ம் திருத்த சட்டத்தில் டிரைவர்களை நியமிக்கும் அதிகாரமும் மாகாணசபைக்கு கிடையாது.

பிரதம செயலாளராக பாலசிங்கம் என்பவர் இருந்தார். அவர் கவர்னருக்கு நெருக்கமாகவே இருந்தார். பிரதம செயலாளரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கே உரியது. ஆனால், முதலமைச்சரின் ஒத்திசைவுடன்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

செய்ய வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. அவரது பதவிக்காலம் முடியும் தறுவாயில், அவரை மீளவும் நியமிக்க ஒத்திசைவு தரவில்லையென முதலமைச்சர் ஒரு கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பினார்.

அப்படியிருந்தும் பாலசிங்கம் எப்படியோ அந்த நியமனத்தை பெற்றுவிட்டார். ஆளுனர் செயலாளரை தொடர்புகொண்டு, எமது கடிதம் கிடைத்ததா என்றேன். கிடைத்ததென்றார். அப்படியென்றால் என்ன அர்த்தம்? நீங்கள் என்ன கடிதத்தை எழுதினாலும், நாங்கள் நினைத்ததைதான் செய்வோம் என்ற மனநிலைதான். இப்படியான நியமனம் பெறும் அதிகாரிகள், அதன்பின் முதலமைச்சருக்கு நெருக்கமாக செயற்படுவார்களா? ஆளுனருக்கு நெருக்கமாக செயற்படுவார்களா?

**தீபம்: எல்லை மீள்நிர்ணய விவகாரங்கள் குறித்த விளக்க கூட்டங்களை யாழ்ப்பாணத்திலும் நடத்தியிருக்கிறீர்கள். எல்லை மீள்நிர்ணய அறிக்கையை ஏன் சிறுபான்மை கட்சிகள் எதிர்த்தன? அதன் உண்மையில் சிறுபான்மை கட்சிகளிற்கு பாதிப்பா?**

**கா.விக்னேஸ்வரன்:** உள்ளூராட்சி சபைகளிற்கான எல்லை மீள்நிர்ணய கூட்டங்களில் எமது கட்சி சார்பில் கலந்து கொண்டிருந்தேன். வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள எல்லா மாவட்ட கூட்டங்களிலும் கலந்து கொண்டிருக்கிறேன். அடுத்ததாக மாகாணசபை எல்லைநிர்ணய கூட்டங்களிலும் கலந்து கொண்டேன். நீங்கள் ஒரு மாவட்டத்தில் 5 வீதமானவர்கள், அந்த மாவட்டத்தில் 15 ஆசனங்கள்தான் என்றால் உங்களிற்கு ஒரு ஆசனமும் கிடைக்காது. 20 ஆசனங்கள் இருந்தால்தான் ஒரு ஆசனமாவது கிடைக்கும்.

5 வீதமானவர்களும் ஒரே புவியியல் அமைவிடத்தில் இருந்தால்தான் கிடைக்கும். இதுதான் இந்த விசயத்தின் அடிப்படை. இதில் சிறுபான்மை இனம், பெரும்பான்மை இனம் என பார்க்க முடியாது. தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் என்றுதான் பார்க்கலாம். இலங்கையின் முஸ்லிம் மக்களில் மூன்றில் இரண்டு பங்கினர் வடக்கு கிழக்கிற்கு வெளியில்தான் வசிக்கிறார்கள். இலங்கையில் எல்லா இடமும் பரவியிருக்கிறார்கள். இதனால் தொகுதிவாரியாக அதிக ஆசனங்களை அவர்களால் பெற முடியாது. இதுதான் இந்தவிவகாரத்தின் அடிப்படை. எல்லைமீள்நிர்ணய முறையால் சிறுபான்மை இனங்கள் பாதிக்கப்படுகின்றன என்று சொல்வது தவறு. வடக்கு கிழக்கிற்கு வெளியில் வசிக்கும் தமிழ், முஸ்லிம் மக்களும், வடக்கு, கிழக்கில் வசிக்கும் சிங்கள மக்களும் சிதறியிருப்பதால் ஆசனங்களை வெல்ல முடியாது. ஒரு பிரதேசத்தில் எத்தனை சதவீதம் இருக்கிறீர்கள், எப்படி பரந்து இருக்கிறீர்கள் என்பதில்தான் ஆசனம் பெறுவது தங்கியிருக்கிறது.

வடக்கில் இதனால் பெரிய பாதிப்புக்கள் கிடையாது. வன்னியில் சிங்கள மக்கள் குடியமர்த்தப்படுகிறார்கள்தான். ஆனால் ஆசனங்களை பெறுமளவிற்கு இன்னும் குடித்தொகை பெருகவில்லை. யுத்தகாலத்திலேயே வவுனியாவில் சிங்கள அரசாங்க அதிபர் ஒருவரை நியமித்து குடியேற்றங்கள் ஆரம்பித்துவிட்டன. மகாவலி எல் வலயத்தாலும் குடியேற்றங்கள் நடந்தன. சம்பத்நுவர என்ற நகரை உருவாக்கி, அதை அநுராதபுரத்திற்குள் கொண்டு வந்து விட்டார்கள். சம்பத்நகர் என்ற இடம் இருக்கிறதா? அது எந்த மாவட்டத்தில் இருக்கிறது என எல்லை நிர்ணய கூட்டத்தில் கேட்டிருந்தேன். யாரும் சரியாக பதிலளிக்கவில்லை. அது முல்லைத்தீவிற்குரிய பிரதேசம்.

இருந்தாலும், சிங்கள குடியேற்றங்களால் வடக்கு பாதிக்கப்பட்டதைவிட, கிழக்கில்தான் அதிகமாக பாதிக்கப்பட்டது.

நுவரெலியாவில் தமிழர்கள் 11 ஆசனங்களை கைப்பற்றலாம். ஆனால் கண்டியில், மாத்தளையில் ஒரு ஆசனத்தை கைப்பற்றுவதே சிரமம். யாழ்ப்பாணத்தில் ஐம்பதாயிரம் சிங்களவர்கள் இருந்தாலும், ஒரு ஆசனத்தையும் கைப்பற்ற முடியாது. இப்படி சிதறியிருப்பவர்களிற்கு விகிதாசார முறைமைதான் நன்மையளிக்கும்.

**தீபம்: கிழக்கு மாகாணத்தில் இனப்பரம்பல் திட்டமிட்டு சீர்குலைக்கப்படுகிறது, தமிழர்களின் நிலங்கள் பறிக்கப்படுகிறது என குற்றச்சாட்டுக்கள் உள்ளன. எப்படி அந்த பொறிமுறை இயங்குகிறது?**

**கா.விக்னேஸ்வரன்:** 1871ஆம் ஆண்டில் இலங்கையில் முதலாவது குடிசன மதிப்பீடு எடுக்கப்பட்டது. அன்று கிழக்கில் இருந்த சிங்களவர்கள் 250 பேர். அப்போது தமிழர்கள் 60 வீதத்திற்கும் அதிகமாக குடியிருந்தனர். தமிழர்களிற்கு அடுத்ததாக முஸ்லிம்கள் இருந்தார்கள். சிங்களவர்களை விட பறங்கியர், வெளிநாட்டவர்கள் அதிகமாக இருந்தார்கள். திரகோணமலையில் எப்பொழுதும் தமிழர்கள்தான் பெரும்பான்மையாக இருந்தார்கள். கந்தளாய், அல்லை திட்டங்களின் மூலம் தமிழர்களின் எண்ணிக்கையை குறைத்தார்கள். பண்டா செல்வா ஒப்பந்தத்தில் கூட இதைப்பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. திருகோணமலையில் இன்று முஸ்லிம்கள் 40 சதவீதம். தமிழர்களும், முஸ்லிம்களும் தலா 30 சதவீகம்.

திருகோணமலையிலிருந்து வெளியேறிய தமிழர்கள் இன்னும் அங்கு திரும்பி போகவில்லை. இந்தியாவிலேயே திருகோணமலையை சேர்ந்த 50,000 பேர் இருக்கிறார்கள். இவர்கள் திரும்பி வந்தால் இந்த பிரச்சனை வந்திருக்காது. தமிழர்கள் வெளியேற, சிங்களவர்கள் குடியேறியதுதான் திருகோணமலையின் பிரச்சனை. வெளியேறிய தமிழர்கள் திரும்பி வந்தால்தான் திருகோணமலையை காப்பாற்றலாம்.

அதேபோல மட்டக்களப்பிலும் நடந்தது. மட்டக்களப்பின் ஒரு பகுதியான அம்பாறையில் கல்லோயா, மகாவலி திட்டங்கள்மூலம் சிங்கள குடியேற்றங்களை செய்து, தனி மாவட்டமே ஆக்கினார்கள். இப்பொழுது மட்டக்களப்பிலும் மகாவலி ஊடாக சிங்களவர்களை குடியமர்த்தும் திட்டம் உள்ளது. மகாவலி வலதுகரை என்கின்ற மதுருஓயாவில் 60,000 சிங்களவர்களை குடியமர்த்துவார்கள் என நினைக்கிறேன். அதை தடுத்து நிறுத்த எமது கட்சி சில முயற்சிகளை செய்து கொண்டிருக்கிறது.

தமிழ் பகுதியில் முஸ்லிம் குடியேற்றங்கள் நடக்கவில்லை. ஆனால் தமிழர்களின் பெருமளவு நிலத்தை விலைகொடுத்து வாங்கி குடியேறினார்கள். அம்பாறையில் ஒரு பிரதேசசெயலாளர் பிரிவில் தமிழ் பிரிவு 1,2,3,4 என பிரதேசங்கள் உள்ளன. ஆனால் அங்கு இப்போது ஒரு தமிழர்களும் இல்லை. முஸ்லிம்கள் இதை குடியேற்றமாக செய்யவில்லை. தமிழர்கள் வெளியேறும்போது காணியை விலைகொடுத்து வாங்கியிருக்கிறார்கள்.

திருகோணமலையிலும், அம்பாறையிலும் தலா 120,000 தமிழர்கள்தான் வாழ்கிறார்கள். மட்டக்களப்பில் இருக்கும் தமிர்களால்தான் கிழக்கில் தமிழர்கள் பெரும்பான்மையாக உள்ளார்கள். கிழக்கில் தமிழர்கள் 39 சதவீதம், முஸ்லிம்கள் 38, மிகுதி சிங்களவர்கள்.

மகாவலி திட்டத்தின் கீழ் இதுவரை குடியேற்றப்பட்ட மக்களில் 1.5 வீதமானவர்களே தமிழர்கள். 2.5 வீதமானவர்கள் முஸ்லிம்கள். மிகுதி 96 வீதமானவர்களும் சிங்களவர்களே.

**தீபம்: நீண்டகாலமாக வடக்கு கிழக்கில் இயங்கிய அதிகார, நிர்வாக மையங்களில் இணைந்து செயற்பட்டு வந்திருக்கிறீர்கள். பின்னர் ஏன் ஒதுங்கினீர்கள்?**

**கா.விக்னேஸ்வரன்:** 2005 இல் எமது கட்சி ஆரம்பிக்கப்பட்டது. கட்சி ஆரம்பிக்கப்பட்ட பின்னரே பிள்ளையான் கேட்டுக் கொண்டதால் கிழக்கு மாகாணசபையில் ஆலோசகராக இருந்தேன். என்னை பொறுத்தவரை எமது மக்களிற்கு சேவை செய்ய கிடைக்குழ் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் வீணாக்கமாட்டேன்.

வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனும் றோயல் கல்லூரிதான். என்னைவிட இரண்டு வயது கூடியவர். ஒரு வகுப்பு சீனியர். தன்னுடைய ஆலோசகராக வருவீர்களா என முதலமைச்சராக வருவதற்கு முன்னர் என்னை கேட்டார். 2013 செப்ரெம்பர் 13ம் திகதி யாழ்ப்பாணத்திலுள்ள விருந்தினர் விடுதியொன்றில் இரண்டரை மணித்தியாலங்கள் பேசினோம். ஆலோசகராக இருப்பதில் சிக்கலில்லை, ஆனால் தமிழ் மக்களிற்கு என்ன செய்ய போகிறோம் என்ற திட்டத்தை தயாரிக்க வேண்டுமென்றேன். என்ன செய்ய வேண்டுமென கேட்டார். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட விதவைகள் 54,000 பேர் வடக்கில் உள்ளனர், இவர்களிற்கு வாழ்வாதாரம் கொடுப்பது எங்களின் முதல் கடமை. இளைஞர்கள் வெளிநாட்டிற்கு சென்று கொண்டிருக்கிறார்கள், அவர்களிற்கு இங்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும், பின்தங்கியுள்ள கல்வியை மேம்படுத்த வேண்டும் என்றேன். இவற்றை செய்ய 13ம் திருத்தத்தில் அதிகாரம் உள்ளது. ஒரு நிகழ்ச்சி திட்டம் தயாரிப்போம் என்றார். நானே பத்திற்கும் மேற்பட்ட வரைபுகளை தயாரித்து கொடுத்தேன்.

திரும்பவும் கொழும்பில் சந்தித்து பேசினோம். மின்னஞ்சலில் தகவல் அனுப்புகிறேன், யாழ்ப்பாணத்திற்கு வந்து விடுங்கள் என்றார். சிலநாள் கழித்து ஒரு மின்னஞ்சல் வந்தது. அனந்தியை நான் பிரதியமைச்சராக நியமிக்கலாமா என கேட்டிருந்தார். பிரதியமைச்சரை நியமிக்க முடியாதென பதில் அனுப்பினேன்.

ஒக்ரோபர் நடுப்பகுதியில் கொழும்பிற்கு போனபோது முதலமைச்சர் வீட்டுக்கு போன் பண்ணினேன். முதலமைச்சர் ஸ்கைப்பில் பேசிக் கொண்டிருப்பதாக், உதவியாளர் சொன்னார். உதவியாளர்கள் சொல்லியும் முதலமைச்சர் சத்தமில்லாமல் இருந்து விட்டார். மீண்டும் மதியம் தொலைபேசியில் அழைத்தேன். உதவியாளர்கள் எடுத்தார்கள். ஐயாவிடம் சொன்னீர்களா என்றேன். ஓம், ஐயா எதுவும் சொல்லவில்லையென்றார்கள். இன்று இரவு கொழும்பிலிருந்து புறப்படுகிறேன், அதற்குள் சந்திப்பதென்றால் அழைப்பை எடுக்க சொல்லுங்கள். இதுதான் எனது கடைசி அழைப்பு. இனி நான் அழைப்பேற்படுத்த மாட்டேன்“ என சொல்லியிருந்தேன். அதன்பின் அவரும் அழைக்கவில்லை. நானும் அழைக்கவில்லை.

**திருகோணமலையிலிருந்து வெளியேறிய தமிழர்கள் இன்னும் அங்கு திரும்பி போகவில்லை. இந்தியாவிலேயே திருகோணமலையை சேர்ந்த 50,000 பேர் இருக்கிறார்கள். இவர்கள் திரும்பி வந்தால் இந்த பிரச்சனை வந்திருக்காது. தமிழர்கள் வெளியேற, சிங்களவர்கள் குடியேறியதுதான் திருகோணமலையின் பிரச்சனை.**



3-ம் பக்க தொடர்ச்சி...

உணவு, மருந்து உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளையும் ஓரளவிற்கு பெற்றார்கள். எது இலக்கு என்பதே புலிகளிற்கு முக்கியமாக இருந்தது. அதை அடைவதற்கு என்ன உத்திகளை பாவிக்கிறோம் என்பது விவகாரமல்ல. ஜனாதிபதியாக இருந்து மஹிந்த ராஜபக்ச மீது குண்டு தாக்குதல் செய்ய புலிகள் ஒரு முயற்சி செய்ததாக இராணுவப் புலனாய்வுத்துறை கண்டறிந்தது.

அதற்கு உடந்தையாக இருந்ததாக இராணுவ உயரதிகாரியான லெப்.கேணல் ரஞ்சித் பெரேராவையும் கைது செய்தனர். மிக நீண்டகாலம் சிறையிலிருந்த அவர், கடந்த வருடம் தான் விடுதலையாகியிருந்தார். விடுதலைப்புலிகளுடன் தொடர்பிலிருந்ததாக ஏராளம் சிங்களவர்கள், இலங்கைச்சிறைகளில் இருந்தார்கள். தென்னிலங்கை இராணுவ, அரசியல் இலக்குகளை குறிவைப்பதற்கு சிங்களவர்களின் துணையை நாடவே மாட்டோம், தனியே தமிழர்களின் துணையுடன்தான் அதை செய்வோம் என புலிகள் நினைத்திருந்தால், அவர்களும் வெறும் அறிக்கை அமைப்பாகவே இருந்திருப்பார்கள். உத்திகளிற்கு முக்கியத்துவம் கொடுக்காமல்,இலக்கில் முக்கியத்துவம் கொடுப்பதே அவசியம்.

ஒரு காலத்தில் தமிழர்கள் மத்தியில் தோன்றிய இடதுசாரிய அமைப்புக்களும் இதேவிதமான போக்குடன் உத்திகளிற்கு முக்கியத்துவம் வழங்கி தூய்மைவாதமே பேசினார்கள். அந்த அமைப்புக்கள் அனைத்துமே வழக்கொழிந்து விட்டன. ஆயுத இயக்கங்கள் தோற்றம்பெற்ற போது, இடதுசாரிய தாக்கத்துடன் பல இயக்கங்கள் தோன்றின. புலிகள், ரெலோ இரண்டு அமைப்பும்தான் ஓரளவிற்கு அந்த செல்வாக்கில்லாமல் வளர்ந்த இயக்கங்கள். உத்திகளில் தூய்மைவாதம் பேசிய அமைப்புக்கள் பேரியக்கங்களாக வளர முடியவில்லை.

இதேபோன்ற ஒரு உத்தியையே கூட்டமைப்புஇன்றுகடைப்பிடிக்கிறது. எல்.எவ் துரோகி .... ஈ.பி.டி.பியும் துரோகி. ஆன முன்னணியும், முதலமைச்சரும் மட்டுமே தியாகிகள் என அவர்கள் கருதுகிறார்கள்.

இது இன்னொரு விதத்தில் இன்னும் செயற்படாதவர்கள் மட்டுமே இந்த விசயத்தில் "கன்னி கழியாமல்" இருப்பதாகவும் அர்த்தப்படும். செயற்பட ஆரம்பிக்கும்போதுதான் உத்திகளின் அவசியமும், தேவையும் புரியும்.


**தமிழ் தேசிய மக்கள் முன்னணி உள்ளடக்கம் ரீதியாகவும். அரசியல்ரீதியாகவும், உத்தி ரீதியாகவும், அணுகு முறைரீதியாகவும் தன்னை மீள்பரிசீலனை செய்து கொள்ள வேண்டும். தமிழர்களிடம் மட்டுமல்ல, உலகெங்குமே தூய்மைவாதம் வெற்றியளிக்கவில்லை. அது பாஸிசத்திலேயே முடிவடைந்தது.**

இதுவே யதார்த்தபூர்வ உத்தி. புலிகள் பாவித்த..கூட்டமைப்பு பாவிக்கும்இந்த உத்திகளிற்கு மாறான, தூய்மைவாத கருத்துக்களை தமிழ் தேசிய மக்கள் முன்னணி முன்வைக்கிறது. அதாவது, வரலாற்றிலிருந்து கற்றுக்கொள்ளாத ஒரு போக்கில் முன்னணி பயணிக்க முயற்சிக்கிறது. அதனால்தான் முன்னணி இன்று சகட்டு மேனிக்கு துரோகிகளை உருவாக்கிறது. தமிழரசுக்கட்சி துரோகி... புளொட் துரோகி... ரெலோ துரோகி... ஈ.பி.ஆர். செயற்படாமல் அறிக்கை விடுபவர்களாகவும், பிழை பிடிப்பவர்களாகவும் இருக்கும்வரை செயற்பாட்டு உத்திகளின் தேவையிருக்காது. தியாகிகளாக கன்னிகளாக நீடிக்க இது சுலபமான வ்ழி. இந்த தியாகிகள் செயற்பட ஆரம்பிக்கும்போதே கன்னி கழிய தொடங்கும்.

புலிகளை இலங்கை அரசியலமைப்பையே, இலங்கை "சிஸ்டத்தையே" ஏற்காமல் வேறுவழியில் பயணித்தவர்கள். அவர்களே, தேவையான சந்தர்ப்பத்தில் அரசுடனும், இராணுவ அதிகாரிகளுடனும், சிங்கள் தனிநபர்களுடனும் இணைந்து செயற்படும் உத்தியை பாவித்தார்கள். ஆனால் எந்த சந்தர்ப்பத்திலும் அவர்களின் இலக்கு மாறவில்லை.2005 ஜனாதிபதி தேர்தலில் புலிகள் பணம் வாங்கினார்கள் என்ற ஒரே காரணத்திற்காக, அப்போது புலி எதிர்ப்பார்கள் கூக்குரலிட்டார்கள். மஹிந்தவிடம் விலை போனதாக புலம்பெயர் தேசங்களில் புலி எதிர்ப்பாளர்கள் கூட்டம் போட்டு பேசினார்கள். ஆனால் புலிகள் யார் என்பதை வரலாறு எழுதியது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி உள்ளடக்கம் ரீதியாகவும். அரசியல்ரீதியாகவும், உத்தி ரீதியாகவும், அணுகு முறைரீதியாகவும் தன்னை மீள்பரிசீலனை செய்து கொள்ள வேண்டும். தமிழர்களிடம் மட்டுமல்ல, உலகெங்குமே தூய்மைவாதம் வெற்றியளிக்கவில்லை. அது பாஸிசத்திலேயே முடிவடைந்தது. அதி தூய்மைவாதம் உலகத்தின் எதிரி. முன்னணி அதை புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழர்களிற்கு தெரிவுகளற்ற ஒரே அரசியல்தலைமையும் அவசியமில்லை. அது சுவாரஸ்யமுமற்றது. முன்னணி தன்னை உள்ளடக்கரீதியாக செழுமைப்படுத்தி விரைவில் முழுமையான அரசியல் தரப்பாக அரங்கிற்கு வருவதே, தமிழ் அரசியலையும், ஜனநாயகத்தையும் செழுமைப்படுத்தும். தனது பலவீனம் எதுவென்பதை கண்டறிந்து, அதை சரிசெய்யாத பட்சத்தில், அரசவையில் பிழை பிடிக்கும் புலவர் பாத்திரத்திற்கு அப்பால் வெறெந்த வரலாறும் அதற்கு கிட்டால் போய்விடும்..






▶ சர்வதேச சிறுவர் தினத்தினை முன்னிட்டு யாழ் ஒஸ்மானியக்கல்லூரியில் முன்பள்ளி சிறார்களில் சிறுவர்தின நிகழ்வுகள் கல்லூரியில் முன்திடலில் நடைபெற்றது. நிகழ்வுக்கு பிரதம அதிதியாக யாழ் மாநகர சபை முதல்வர் இமானுவேல் ஆனோல்ட கலந்துகொண்டு ஆரம்பித்துவைத்தார்..



▶ தலவாக்கலை கிரேட்வெஸ்டன் தோட்டத்தின் லூசா பிரிவில் பெய்த கடும் மழையினால் கற்பாறைகள் சரிந்து விழுந்ததன் காரணமாக அப்பகுதியில் வசிக்கும் சுமார் 300 குடும்பங்களை சேர்ந்தவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர். சுமார் 2000 அடி உயரம் கொண்ட மலையிலிருந்து பாரிய கற்பாறைகள் சரிந்து விழுந்ததன் காரணமாக அப்பகுதியின் அடிவாரத்தில் வசித்த 300ற்கும் மேற்பட்ட குடும்பங்களை சேர்ந்த 1000ற்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து தற்காலிகமாக தோட்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திலும், முன்பள்ளியிலும் மற்றும் உறவினர்கள் வீடுகளிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.




▶ மருதமுனை ஈஸ்டன் யூத் விளையாட்டுக்கழகத்தின் 45வது ஆண்டு நிறைவை முன்னிட்டு அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ள மின்னொளி உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி2018' மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டுத் தொகுதியில் நடைபெற்றது.



தீபம் லென்ஸ்

# சமுர்த்தி பணத்தில் நடந்த அரசியல்?

பிரபலாதன்



கடந்த 2015 ஆண்டு 100 நாள் வேலைத்திட்டம் ஆரம்பித்போது, வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சராக சஜித் பிரேமதாச பதவியேற்றார். பிரதி அமைச்சராக அமீர் அலி நியமிக்கப்பட்டிருந்தார்

அக்காலப்பகுதியில் ஹம்பாந் தோட்டை மாவட்டத்தை கருத்தில் கொண்டு சஜித் பிரேமதாசவால் திரிய சவிய என்ற திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஏழை மக்கள் தமது வாழ்வாதாரம் மற்றும் வீட்டுவசதி தேவையினைபூர்த்தி செய்துகொள்ளும் முகமாக சமுர்த்தி வங்கிகள் ஊடாக 4 வீத வட்டியில் ரூபா 100,000 வரையான கடன் திட்டத்தை கொண்டதே இந்த திட்டம். சமுர்த்திப் பயனாளிகள் அல்லாத ஏழை மக்களும் பயன் பெறும் வகையில் 3 ஆண்டுகளுக்குள் கடனை திரும்ப செலுத்தும் முறையில் குறித்த திட்டத்தினை நடைமுறைப்படுத்தியிருந்தார். இக்கடன் திட்டமானது சமுர்த்தி வங்கிகளில் உள்ள சேமிப்புக்களை பயன்படுத்தியே வழங்கப்பட வேண்டும் எனவும் 80 வீதத்திற்கு அதிகமான கடன்கள் சமுர்த்தி வங்கிகளில் வழங்கியிருந்தால் மேலதிக பணம் சமுர்த்தி திணைக்களத்தினால் வங்கிகளுக்கு மீள வழங்கப்படும் எனவும் கூறப்பட்டிருந்தது.



எனினும், இந்த கடன்திட்டம் மட்டக்களப்பில் ஒரு அரசியல் நிகழ்ச்சியை போலவே நடத்தப்பட்டது. பிரதியமைச்சர் அமீர் அலி, நாடாளு மன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் மேடைகளை அலங் கரித்தனர். பிரதேசசெயலக ரீதியாக நிகழ்வுகள் நடத்தப்பட்டன. சுற்றுநிருபங் களை மீறி சமுர்த்தி வங்கியல்லாத, பொது மண்டபங்களிலும் ஏனைய இடங்களிலும் அரசியல் கூட்டமாக நடத்தப்பட்டு கடன் வழங்கப் பட்டிருந்தன.

அவ்வாறு ஒரு நிகழ்வு போரதீவு பற்றில் இடம்பெற்றபோது முன்னாள் நாடாலீளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராசா, சமுர்த்தி வங்கிகளில் உள்ள கருப்பு பணத்தினை தாங்கள் கண்டு பிடித்து பிரதி அமைச்சரின் உதவியுடன் கடன் வழங்குவதாகவும் பேசியிருந்தார்.

மாவட்டத்தில் உள்ள சமுர்த்தி வங்கிளின் எண்ணிக்கை 29. இந்த வங்கிகளில் திர்ய சவிய் திட்டத்தில் 4500 பயனாளிகள் கடன்பெற்றனர். இவர்களிடமிருந்து அறவிட வேண்டியுள்ள தொகை 96830000.00. இந்த 29 வங்கிகளில் 15 வங்கிகளிலேயே அதிகளவில் பணத்தை மீள பெற முடியாமல் உள்ளது. இந்த 15 வங்கிகளில் கடன் பெற்ற 450 பயனாளிகளில் இருந்து, அறவிட முடியாதுள்ள கடன் தொகை 9.5 மில்லியன் ரூபா!

இது சமுர்த்தி திணைக்கள புள்ளிவிபரங்களில் குறிப்பிடப்பட்டது. ஆனால் அறிக்கையில் காண்பிக்கப்படாத கடன் தொகை இன்னும் அதிகமானது. சமுர்த்தி வங்கிகளின் வருட இறுதி இலாபத்தில் தாக்கம் செலுத்தும் என்பதனால் சமுர்த்தி முகாமையாளர்களினால் இவை மறைக்கப்படுகின்றது.

இக்கடன் திட்டத்தினை சமுர்த்தி பயனாளிகள் அல்லாதோருக்கு வழங்குவதில் தயக்கம் காட்டிய சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள் சிலர் சமுர்த்தி பணிப்பாளர் மற்றும் அரசியல்வாதிகளால் இடமாற்றங் களுக்கும், பழிவாங்களுக்கும் உட்பட்டதாக குற்றம்சுமத்தியிருந்தனர்.

இதில் சமுர்த்தி பயனாளிகள் அல்லாதோர் என மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 90 வீதமான நபர்கள் பிரதி அமைச்சரின் இணைப்பாளர்கள், அமைப்பாளர்கள் மற்றும் அரசில் தெரிவுகளே. உள்ளூர் அரசியல் பிரமுகர்களாலும் பெயர்ப்பட்டியல் வழங்கப்பட்டதுடன், குறித்த பெயர்ப்பட்டியல்கள் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரால் நேரடியாக சமுர்த்தி வங்கி முகாமையாளர்களுக்கு அனுப்பப்பட்டு, அவர்களிற்கு முன்னுரிமையளிக்கும்படி கோரப்பட்டிருந்தது.

இந்த சந்தர்ப்பத்தை சாதகமாக்கி கொண்ட சில சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் சில சமுர்த்தி உத்தியோகத்தர்களும் தங்கள் உறவினர்கள், வெளிநாட்டில் பணிப் பெண்களாக சென்றவர்கள், மற்றும் சமுர்த்தி வங்கிகளில் பயிலுனராக வேலை செய்யும் பிள்ளைகள் போன்றவர்களின் பெயர்களையும் இணைத்து, தங்களால் முடிந்த அளவில் கடன் பெற்றுள்ளனர். ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிர்வில் வேறு திணைக்களங்களை சேர்ந்த ஆசிர்யர்களும், சமுர்த்தி கடன்களைப் பெற்று தற்போது வரை திரும்ப செலுத்தாமல் உள்ளனர்.

சமுர்த்தி வங்கிகளின் பெயரில் உள்ள நிலையான வைப்பு முதலீடுகளை மீளப்பெற்று குறித்த கடனினை வழங்குமாறு சமுர்த்தி பணிப்பாளர் அக்காலத்தில் அறிவுறித்தியிருந்தார்.

இவ்வாறாக ஏழைகளின் பல வருட சேமிப்பு பணத்தினை அரசியல்வாதிகள் தங்களின் அரசியல் தேவைக்காக பயன்படுத்தியதன் விளைவாக தற்போது கணக்குகளில் காட்டப்பட்டதற்கு அமைவாக 9.5 மில்லியன் ரூபாவும் கணக்குகளில் காட்டப்படாமல் இன்னும் 8 மில்லியன் ரூபாய்களும் தற்போது சமுர்த்தி வங்கிகளில் மீள அறவிட்டுக் கொள்ள முடியாத நிலையில் உள்ளன. எதிர்காலத்தில் இந்த தொகை இன்னும் அதிகரித்து செல்ல வாய்ப்பு உள்ளது.

இதிலும் பிரதியமைச்சர் அமீர் அலியின் பிரதேசத்தில் உள்ள ஓட்டமாவடி சமுர்த்தி வங்கியில் வழங்கப்பட்ட கடனில் அறவிட முடியாமலுள்ள தொகை 3.5 மில்லியன். அங்கு 533 பயனாளிகளிற்கு 47,770,000 ரூபா வழங்கப்பட்டது.


மட்டக்களப்பில் திரிய சவிய திட்டத்தில் வழங்கப்பட்ட கடனை வழங்கபல முயற்சிகளை மேற்கொண்ட அரசியல்வாதிகள் தொடக்கம் அரச அதிகார்கள் வரை 3 வருடங்கள் கடந்த நிலையிலும் கடனை அறவிட்டு ஏழைகளின் சேமிப்பு பணத்தினை பெற்றுக்கொள்ளாமல் மௌனம் காப்பதன் நோக்கம் என்ன?

அண்மையில் மட்டக்களப்பில் ஒரு சமுர்த்தி வங்கிக்கு தீ வைக்கப்பட்டிருந்தது. சமுர்த்தி மோசடிகளிற்கும் அந்த தீவைப்புக்கும் ஏதேனும் தொடர்புகள் உள்ளதா என்ற சந்தேகத்தை, அதிகாரிகளின் அசமந்தங்களே உருவாக்குகின்றன.

## சில வங்கிகளின் அறவிட முடியாத கடன்

ஓட்டமாவடி மேற்கு 3.5 மில்லியன்
ஓட்டமவாடி மத்தி 0.5 மில்லியன்
இருதயபுரம் 0.5 மில்லியன்
சந்திவெளி 0.7 மில்லியன்
கதிரவெளி 0.4 மில்லியன்
வாழைச்சேனை 0.6 மில்லியன்
எருவில் 1.5 மில்லியன்

# வடக்கு கிழக்கில் அழிவடையும் யானைகள்



காவலூரான்

"யானை இருந்தாலும் ஆயிரம் பொன் அது இறந்தாலும் ஆயிரம் பொன்" என்ற பழமொழி யானைக்கும் மனிதனுக்கும் இடையேயுள்ள நல்லுறவை சிநேகபூர்வ ஊடலை வெளிப்படுத்துகின்றது. யானையால் மக்கள் நன்றாக வாழ்ந்தார்கள். மக்கள் தமது தேவைகளிற்காக யானைகளை சிறப்பாகவே பயன்படுத்தினர். யானைகளின் பயன்பாடு போர்க்களம் தொடங்கி சமயம், கலாசாரம் மற்றும் கட்டடப் பணிகள் வரை வியாபித்திருந்ததனை வரலாற்றுப் பதிவுகளில் காண முடிகின்றது.

யானைகள் பல வரலாற்றுப் பதிவுகள் நிகழ்வுகளைக் கொண்டிருந்தாலும் இரண்டு சம்பவங்களைப் பதிவு செய்து விட்டுக் கட்டுரையைத் தொடர்வது பொருத்தப்பாடுடையதாக இருக்கும். எல்லாளன், துட்டகைமுனு யுத்தம் கந்துல என்ற பட்டத்து யானையுடன் துட்டகைமுனு எல்லாளனுடன் போருக்குச் சென்று போர்க்களத்தில் எல்லாளனுடைய வயதான யானையைத் தாக்கி யானை நிலை தடுமாறிய போதே எல்லாளன் மீது வேல் பாய்ச்சியதாக வரலாறு கூறுகிறது.

இராஜ இராஜ சோழன் தஞ்சைப் பெருங்கோவில் கட்டடப் பணிக்கு யானைகளைப் பயன்படுத்தியமை தஞசைப் பெருங்கோவில் விமான உச்சியில் வைக்க வேண்டிய கல்லை (80 தொன் எடை) யானைகளைப் பயன்படுத்தியே கொண்டு சென்று வைத்ததாக வரலாற்றுப் பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் பருத்தித்துறை வீதியும், நாவலர் வீதியும் சந்திக்கின்ற சந்தியான ஆனைப்பந்தி சந்தியுள்ளது. யாழ்ப்பாணத்து இறுதி மன்னன் சங்கிலியன் தனது யானைப் படைகளை இந்த இடத்தில் கட்டி வைத்ததால் காரணப் பெயராக ஆனைப்பந்தி உள்ளதென யாழ்ப்பாண வரலாற்று நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யானைக்கும் மக்களிற்கும் இடையே மோதல்கள் இடம்பெற்றாலும் அது சிறு சிறு சம்பவங்களாகவே இடம் பெற்றன. ஆனால் அண்மைய நாட்களில் யானைகள் தொடர்பாக வெளிவருகின்ற செய்திகள் மிகுந்த மனவேதனையளிப்பதாகவே உள்ளது. யானைகளின் இறப்பானது பல வழிகளில் இடம்பெறுகின்றது. அரிய வகை உயிரினமாக அறிவிக்கப்பட்டுள்ள யானைகளைக் கொல்வது சட்ட ரீதியான குற்றம் என்ற நிலையிலும் அதன் மீதான தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணமேயுள்ளன. யானைகளின் தாக்குதல்களில் பயிர் நாசம், உயிர் இழப்பு, சொத்தழிவு என மிகப்பெரும் அவலம் மக்களிற்கு ஏற்படுகின்றது.

இவ்வருடம் நடைபெற்ற புலமைப் பரிசில் ` பரீட்சை நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சை என இப் பரீட்சைக்கு சென்ற இரண்டு மாணவிகள் காட்டு யானையின் தாக்குதலில் காயமடைந்தனர். இம் மாத ஆரம்பத்தில் கொழும்பு நோக்கி சென்றவர்களின் வான் யானையுடன் மோதி விபத்து ஏற்பட்டதில் இளைஞர் பலியானதுடன் பலர் காயமடைந்தனர். இதே காலத்தில் மல்லாவி, தேறாறு, கண்டல் பகுதியில் வயல் காவலுக்குச் சென்ற வரை யானை தாக்கியதில் காயமடைந்தார். ஏக காலத்தில் அம்பாறையில் யானையின் தாக்குதலில் ஒருவர் பலியாகியுள்ளார்.

## 58 மக்களின் இறப்பு

கடந்த 7 மாத காலப்பகுதியில் இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் யானைகளின் தாக்குதல்களில் 58 பொது மக்கள் கொல்லப் பட்டுள்ளதாக வன விலங்குத் திணைக்களத்தின் யானைகள் புள்ளி விபரப்பிரிவு பிரதிப் பணிப்பாளர் யூ.எல்.தௌபீக் ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். உயிர் இழப்புடன் பலர் காயமடைந்தவர்களாகவும், பயிர் இழப்பு, சொத்தழிவு ஏற்பட்டதுடன் இதுவரை இதற்கான இழப்பீடுகள் எவையும் வழங்கப்படவில்லை என முல்லைத்தீவு மாணிக்கபுரம் பகுதியில் வசிக்கும் வயோதிபப் பெண் தெரிவிக்கின்றார். யானையின் தாக்குதலில் இவரது கைமுறிந்ததுடன் வாழைமரங்கள், தென்னைமரங்கள் மட்டுமன்றி தற்காலிக குடிசையும் துவம்சம் செய்யப்பட்டமை குறிப் பிடத்தக்கது.

## 154 யானைகள் உயிர் இழப்பு

பிரதிப்பணிப்பாளர் யூ.எல். தௌபீக்கின் ஊடக அறிக்கையில் வடக்கு கிழக்குப் பகுதியில் 154 யானைகள் இறந்துள்ளதுடன் பல யானைகள் காயமடைந்துள்ளன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த 7 மாத காலப்பகுதியில் அம்பாறைப் பகுதியிலேயே உயிர் இழப்புக்கள் அதிகமாக இடம்பெற்றுள்ளன. அம்பாறை தொடங்கி அம்பாந் தோட்டை வரையான நீண்ட காட்டுப் பகுதியில் பாணம் என்ற பிரதேசத்திலேயே குமண தேசிய வனம் அமைந்துள்ளது. இங்கு யானைகளே அதிகமாகவுள்ளன. குமண தேசிய வனத்தை விட்டு வெளிவரும் யானைகளே மக்களை தாக்குகின்றது. உயிர் இழப்பும், சொத்தழிவும் ஏற்படுகின்றது. இதுவே யானைகளின் தாக்குதலில் உயிர் இழந்தவர்களில் அதிகமானவர்கள் அம்பாறையை சேர்ந்தவர்களாகவுள்ளனர். கடந்த மாத இறுதியில் துப்பாக்கிக் குண்டுத் தாக்குதலில் படுகாயமடைந்த யானையை கிராம மக்கள் மீட்டு வனத்துறை அதிகாரிகளிடம் கையளித்தனர். அவர்களது பாதுகாப்பிலும் பராமரிப்பிலும் இவ் யானை உள்ளது.

## 18 யானைகள் வடக்கில் உயிர் இழப்பு


கடந்தஒருவருடகாலத்தில்வடக்கின் யாழ்ப்பாணம் தவிர்ந்த நான்கு மாவட்டங்களிலும் 18 யானைகள் உயிர் இழந்துள்ளன. யானைகளுக்கு வைக்கப்படுகின்ற வறக்க படாஸை யானைகள் அதிகளவில் உண்பதும், சட்டவிரோத மின்சார வேலியும் யானைகளின் இறப்புக்கு அதிகளவில் காரணமாகின்றது என வடக்கு மாகாணத்திற்குப் பொறுப்பான கால்நடை மருத்துவர் பீ.கிரிதரன் தெரிவித்துள்ளார். இச்சட்ட விரோத மின்சார வேலியினால் ஏனைய காட்டு விலங்குகள் அதிகளவில் உயிர் இழப்பதுடன் அண்மையில்


தொடர்ச்சி அடுத்தபக்கம்...

வவுனியா சூடுவெந்தபுலவு குளத்திற்கு மீன்பிடிக்கச் சென்ற தந்தையும் மகனும் சட்டவிரோத மின்சார வேலியில் சிக்கியே உயிர் இழந்தமையும் குறிப்பிடத்தக்கது.

**காடழிப்பு**

வன விலங்குகளின் வாழ்விடமான காட்டுப்பகுதி அழிக்கப்படுவதுடன், வன்னிப் பகுதியின் அடர்ந்த காட்டுப் பகுதியில் இராணுவத்தினரும் முகாம்களை அமைத்துள்ளனர். காடுகளை பொருத்தமற்றவகையில் அழிப்பதனால் மழைவீழ்ச்சி குறைவடைகின்றது. இதனால் காடுகளிலுள்ள நீர் நிலைகளில் நீர் வற்றி விடுகின்றது என நீண்டு செல்லும் செயற்பாடுகளுடன் காட்டில் ஏற்படுகின்ற அசாதாரண நிகழ்வுகள் (இராணுவத்தினர் முகாம்களை அமைத்தல், பயிற்சிகளில் ஈடுபடுதல், தேவையற்ற வெடி பொருட்களை அழித்தல்) வனவிலங்குகளின் சாதாரண வாழ்வியலை குழப்பி விடுகின்றது. வனவிலங்குகளின் வாழ்விடங்கள் அழிக்கப்படுகின்ற போது அவை மக்களின் வாழ்விடங்களை நோக்கி தமது நகர்வுகளை முன்வைக்கின்றன. இதனால் இரு பகுதியினருக்கும் இடையே மோதல்கள் ஏற்படுவதுடன் அவை உயிர் இழப்புக்களையும் ஏற்படுத்துகின்றன.





**எல்லைக் கிராம பாதுகாப்பு**

கிராமங்களின் எல்லைப் பகுதிகளில் பனை வடலிகளை நடுவதன் மூலமாக யானைகளின் இடையூறுகள் மற்றும் அச்சுறுத்தல்களில் இருந்து விடுபட முடியும் என பனை அபிவிருத்திச் சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ம.செல்வின் ஊடகங்களிற்கு கருத்துத் தெரிவித்துள்ளார். வடக்கில் யானைகளின் தாக்குதல்கள் பெரும் சிக்கலுக் குரியதாகவுள்ளதால் பாதிக்கப்படுகின்ற கிராமங்கள் எல்லைப் பகுதிகளில் பனை வடலிகளை நடுவது நாளடைவில் பெரும் பாதுகாப்பாக அமையும். எல்லைக் கிராமங்கள் விவசாய நிலங்களில் பனை வடலிகளை நெருக்கமாகவோ அல்லது இரண்டு வடலிகளுக்கு இடையில் சற்று பின்பாக ஒரு வடலியையோ நடுதல் வேண்டும்.

வடலிகள் வளரும் காலத்தில் மரங்களில் கருக்கு மட்டைகள் இருப்பதால் அவற்றுக்கு ஊடாக யானைகள் செல்ல முடியாது காலப் போக்கில் மரங்கள் வளர்ந்தாலும் பனை மரங்களை யானைகள் தாக்கினாலும் பனைமரம் ஓரளவு தாக்குப் பிடிக்கும். வடலி வளர்க்கும் செயற்பாடு யானைகளில் இருந்து பாதுகாப்பு பெறுவதுடன் பனை வளத்தையும் பாதுகாக்க முடியும். பல வழிகளில் பயன்தரவல்ல பனை மரங்கள் மக்களிற்கு பாதுகாப்பாயும் பெரும் பயன்தருவதாகவும் அமையும். இதனால் யானை மனிதர்களின் உயிர் இழப்புக்கள் தவிர்க்கப்படுவதுடன் ஆரோக்கியமான சமூகச் சூழலையையும் கட்டியெழுப்ப முடியும்.

**சரணாலயங்கள்**

பின்னவல யானைகள் புகலகம் அனாதை யானைகளைப் பராமரிக்கும் சரணாலயமாகவுள்ளது. சுமார் 60 வரையான யானைகள் உள்ளன. சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவரும் வகையிலுள்ள இவ் யானைகளைப் பராமரிப்பதற்கு சுற்றுலாப் பயணிகளிடம் இருந்து அறவிடுகின்ற பணமே செலவிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. கைவிடப்பட்ட குட்டிகள் , அனாதை குட்டிகள், காயமடைந்த யானைகள் உள்ளடங்குகின்றன. தென் கிழக்குப் பகுதியில் தெற்கு மற்றும் ஊவா மாகாணங்களிற்குரிய யால தேசிய வனம் 1900 களில் வனவிலங்கு சரணாலயமாக அறிவிக்கப்பட்டு 1938 இல் தேசிய வனமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

378 சதுரமைல் பரப்பில் உள்ள யால தேசிய வனத்தில் பிற தேசிய வனங்கள் 6, வன விலங்குகள் சரணாலயம் 3 உள்ளன. யானைகள் மற்றும் நீரியற் பறவைகளின் பாதுகாப்பு வலயமாகவுள்ளது. இலங்கையின் அரைகுறை வறள் வலய காலநிலை வலயத்தில் வடக்குக் கிழக்குப் பருவப் பெயர்ச்சியின் போதே மழை கிடைக்கின்றது. இவ்வாறான தரைத்தோற்ற அமைப்பும் மழைவீழ்ச்சியும் கொண்ட பிரதேசங்களிலேயே அனேக சரணாலயங்கள் அமைந்துள்ளன. இவ் வனங்களில் அரிய வகை பறவைகள் மற்றும் வனவிலங்குகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. இவற்றுடன் மாதுரு ஓயா தேசிய பூங்கா யானைகள் சரணாலயத்தையும் இதனுடன் இணைத்துக் கொள்ளுதல் பொருத்தமாக அமையும்.

ஆக யானைகள் வாழ்வதற்கென பாதுகாப்பு மிக்க இடங்கள் அரசாங்கத்ததால் அறிவிக்கப்பட்டு உரிய இடங்களும் யானை மற்றும் வனவிலங்குகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றமை நாம் மட்டுமன்றி நாடு அறிந்த உண்மை. வழி தவறும் யானைகள் காலநீட்சியில் காடுமாறி உணவு மற்றும் வாழ்விடங்களை தேடி அலைகின்றன. இவ் வேளையில் வீதிகளில் செல்வோர், விவசாய நிலங்களில் பாதுகாப்புக்கு இருப்போர், எல்லை கிராம மக்கள் என பலர் பல்வேறு வழிகளில் தாக்கப்பட்டு உயிர் இழப்பு ஏற்படுவதுடன் சொத்தழிவுகளும் ஏற்படுகின்றன.

வனத்துறை அதிகாரிகள், துறை சார்ந்தவர்கள் மக்களின் வாழ்விடங்களிற்கு அண்மையாக நடமாடும் யானைகளை நல்வழிப்படுத்தி சரணாலயங்களிற்கு அனுப்புவதால் யானைகள் பாதுகாப்பு பெறுவதுடன் மக்களும் பயமின்றி பாதுகாப்பாக வாழலாம். பல்வேறு சவால்களுடன் வாழும் எல்லைக் கிராம மக்களிற்கு பாதுகாப்பு வழங்குவது அரசினதும் துறைசார்ந்த அமைச்சினதும்பொறுப்பு மட்டுமன்றி கடமையும் கூட. மின்சார வேலிகளாலும் வறக்கபடாஸை யானைகள் அதிகளவில் உண்பதும் யானைகளின் இறப்புடன் ஏனைய வனவிலங்குகளின் இறப்பையும் அதிகரிக்கும். இவற்றை விட்டு பாதுகாப்பு மிக்க வழிவகைகளை கையாள்வதனால் யானைகளும் வாழும் நாமும் வாழலாம்.


# தீபம்

989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்

**தொடர்புகளிற்கு**

ஆசிரியர்பீடம் : 0214927562 விநியோகம், விளம்பரம் : 0214927542, 0768255563

அலுவலகம் : 0214927561 கருத்துக்கள், முறைப்பாடுகள் : 0768255562

செய்திகள் அனுப்ப : deepamdesk@gmail.com

# இந்தியப் படைமுகாமிலிருந்து இலங்கை அதிரடிப் படை ஊடாக கொழும்பு நாலாம் மாடி வரை



சென்ற இதழ் தொடர்ச்சி...

உள்ளே போனதும் எம்மை இறக்கி உள்ளே அழைத்துச் சென்றனர். ஓர் அதிகாரி வந்தார். அவர் என்னைக் கண்டதும் ஓங்கி எனது கன்னத்தில் அறைந்தார். அந்தப் பிரதேசத்தில் நானே தெரிந்தவனாகவும், நீண்ட காலமாக அதிகமும் தேடப்பட்டவர்களில் ஒருவனாகவும் இருந்தேன். அதனால்தான் அந்த அறை கன்னத்தில் விழுந்தது. மற்றவர்கள் எவரையும் படையினருக்குத் தெரிந்திருக்கவில்லை. இந்திய ஒப்பந்தம் நடைமுறையில் இருப்பது பற்றியும், இலங்கை அரசால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டிருப்பது பற்றியும் கைது செய்ய முடியாது என்றும் அவர்களுக்குக் கூறி வெளியில் விடுமாறு வாதாடினோம். அவர்கள் எம்மை விடுவதாயில்லை. சிறிது நேரத்தில் அந்த முகாமில் இருந்த மிகச் சிறிய முகாம்களுக்குள் என்னைத் தனியாகவும், ஏனையவர்களை ஒன்றாகவும் போட்டு அடைத்தனர். வயிற்றைக் குமட்டும் கழிவு நாற்றம் இந்தச் சிறிய சிறை அறைக்குள் வீசியபடி இருந்ததைச் சகிக்க முடியவில்லை.

அதிரடிப் படையினர் அடிக்கடி "உன்ட மகனைப் பிடித்தால் மரத்தில் கட்டித் தொங்கவிட்டுச் சுட்டுக் கொல்லுவோம்" என்று எனது வாப்பாவிடம் சொல்லி அனுப்புவது நினைவுக்கு வந்தது. என்னால் மற்றவர்களும் ஆபத்தில் மாட்டிக் கொண்டார்களே என்ற கவலை வேறு என்னை ஆட்கொண்டிருந்தது.

பேருந்தில் சென்றவர்களிடம் சைகை மூலம் தெரிவித்த செய்தி ஏறாவூரை எட்டியிருந்தது. எனது இளைய தம்பிகளும் தந்தையாரும் கைகளைக் கட்டிய வண்ணம் முகாமின் முன்னால் முகாமிட்டனர். தோழர்களும் வந்து நின்றனர் என்று பின்னர் கேள்வியுற்றோம். எமது மட்டக்களப்பு அலுவலகத்திலிருந்த தோழர்கள் மன்ரேசாவில் அமைந்திருந்த இந்தியப் படையின் பிரதேசத் தலைமை முகாம் பிரதானி பிரிகேடியர் தாரைச் சந்தித்து நாங்கள் கைது செய்யப்பட்டிருப்பதை முறைப்பாடு செய்திருந்தனர். ஆனால், மன்ரேசா முகாமில் இருந்து முறக்கொட்டாஞ்சேனை முகாமுக்கு எம்மை விடுதலை செய்யுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை கணக்கில் எடுக்கப்படவில்லை.

அன்றிரவு சிறைக் கம்பிகளினூடே வி16 இயந்திரத் துப்பாக்கியை நீட்டி என்னைச் சுடுவது போல பாசாங்கு காட்டி மிரட்டிய வண்ணமிருந்தனர். பொழுது புலர்ந்தது. முகாம் மைதானத்தில் ஒரு உலங்கு வானூர்தி வந்து தரித்தது. கைகளையும் கண்களையும் கட்டி எங்களை அந்த ஹெலிகொப்டரில் ஏற்றினர். மெல்ல மேலேறிய ஹெலி பறக்கத் தொடங்கியது. அமைதி ஒப்பந்தம் இருப்பதால் அடையாளம் தெரியாதபடி எம்மைக் கடலில் தள்ளிக் கொல்வதற்காக கொண்டு செல்கிறார்களோ என்று சந்தேகப்பட்டேன். ஆகவே கண்ணைக் கட்டியிருந்த துணியை முழங்காலால் மெல்லக் கண் சிறிதளவு தெரியும் வகையில் நகர்த்தினேன். கடலுக்குள் தள்ளினால் முன் பக்கம் வைத்துக் கட்டப்பட்ட கையையும் கட்டப்படாத காலையும் உபயோகித்து ஒரு சிப்பாயையாவது இழுத்துக் கொண்டே கடலுக்குள் விழுவது என்ற உறுதியான தீர்மானத்தில் இருந்தேன்.ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை.ஹெலி நேரடியாக மட்டக்களப்பு புதூர் விமான நிலையத்தில் தரையிறங்கியது.

புதூரைச் சேர்ந்த சிரேஷ்ட தோழர் சிறீ அண்ணனின் கண்களில் அகப்படமாட்டோமா என்ற ஏக்கம் வந்து போனது. நாம் நால்வரும் இறக்கப்பட்டு விமான நிலைய ஓடுபாதை அருகே ஒதுக்குப் புறமாக ஓரிடத்தில் குந்தவைக்கப்பட்டோம்.ஹிந்தி மொழி பேசியவாறு பலர் எம்மைக் கடந்து சென்றனர். அப்போது இங்கே நடமாடும்இந்தியப்படையினர் எம்மை ஏனென்றாவது கேட்கமாட்டார்களா என்ற எதிர்பார்ப்பு அன்று எமக்கிருந்தது.

4

விமான நிலைத்தில் வான்படையின் ஒரு வானூர்தி வந்து இறங்கியது. எங்களை கைகளும் கண்களும் கட்டப்பட்ட நிலையிலேயே வந்த விமானத்துக்குள் ஏற்றினர். கொஞ்சமாகத் தெரிந்த எனது ஒற்றைக் கண்ணால் உள் விமானத்தை நோட்டமிட்டேன்,பெரிய விமானமது. நிறைய இருக்கைகள் வெறுமனே கிடந்தன, சில படையினர் மட்டும் உள்ளே நடமாடினர். அது எம்மை அழைத்துப் போக வந்த விசேட தனி விமனம் என்பதை உணர்து கொண்டேன். கிளம்பிய விமானம் அடுத்த முக்கால் மணி நேரத்தில் கொழும்பு இரத்மலானை விமான நிலைத்தில் தரையிறங்கியது. இறங்கிய நாம் உள்ளே அழைத்துச் செல்லப்பட்டு கதிரைகளில் தூரத் தூர அமர்த்தப்பட்டோம். அடுத்த அரைமணி நேரத்தில் கடினமான சில காலணிகளின் சத்தங்கள் கேட்டன. சில வினாடிகளில் Who is Eravur Basheer? ஏறாவூர் பஷீர் யார்? என்று ஒரு கம்பீரமான குரல் கேட்டது. "நான்" என்றேன். பக்கத்தில் வந்தவர் "வாங்க போவம்" என்று தமிழில் அழைத்தார். அவர் அந்தக் காலத்தில் உதவி பொலிஸ் சுப்ரின்டனாக (ASP) இருந்து, பின்னர் சிரேஷ்ட பொலிஸ் சுப்ரின்டாகப் பதவி வகித்து ஓய்வு பெற்ற பின்னர் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்ட பொத்துவில் அப்துல் மஜீத் ஆகும். அப்போது அவர் குற்றப் புலனாய்வு அதிகாரியாக இருந்திருக்க வேண்டும். ஒரு பொலிஸ் ஜீப்பின் பின்புறம் ஏற்றப்பட்டு நானும் ஹரனும் இருக்கையிலும் மற்றிருவரும் கீழே தரையிலும் அமர்த்தப்பட்டோம். ஹரனின் தொடையில் விரலினால் நான்குஎன்றுஎழுதினேன். அவர் எனது தொடையில் ஒரு சரி அடையாளத்தை இட்டு ஓம் என்றார். குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குக் கொண்டு செல்லப்படுகிறோம் என்பதை ஊகித்திருந்தோம். ஜீப் கொழும்பில் ஒரு பெரிய கட்டடத்தில் வந்து நின்றது. இறக்கப்பட்டு கையில் பிடிக்கப்பட்டவர்களாக நாலாம் மாடிக்கு அழைத்துச் செல்லப் பட்டோம். அங்கு ஒரு அறையினுள் விடப்பட்டு கட்டுகள் அகற்றப்பட்டு கைகளில் விலங்குகள் மாட்டப்பட்டன. அவ்வலுவலகத்துக்குள் இரு உத்தியோகத்தர் மட்டும் இருந்தனர். கூட்டி வந்தவர்கள் விசாரணைக்காக ஆட்கள் வருவார்கள் என்று சொல்லிவிட்டுச் சென்றுவிட்டனர்.

இதற்கிடையில் கைது பற்றிய செய்திகள் ஊடகங்களில் வெளிவந்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. இந்தியப் படையால் முறக்கொட்டாஞ் சேனை அதிரடிப் படை முகாம் சுற்றி வளைக்கப்பட்டிருந்தது. மட்டக்களப்பில் அதிரடிப்படை அதிகாரிகளுக்கும் இந்தியப் படை அதிகாரிகளுக்கும் இடையில் விடுதலை பற்றிய பேச்சுவார்த்தைகள் நடந்திருந்தது. அன்றைய இந்திய உயர் ஆணையர் தீக்ஷித் ஜனாதிபதி யி.ஸி ஐச் சந்தித்து எமது விடுதலை பற்றிக் காரசாரமாக விவாதித்திருந்தார். இவர்களை விடுதலை செய்யாவிட்டால் புலிகள் அமைப்பு அவர்களது முக்கியத்தர்களான குமரப்பா,

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

புலேந்திரன் உட்படப் பன்னிரண்டு பேரையும் கைது செய்தமையால் மீண்டும் யுத்தத்தைத் தொடங்கியது போல ஈரோஸ் அமைப்பும் யுத்தத்தில் இறங்கலாம் என்றும் தீக்ஷித் ஜனாதிபதியிடம் கூறியதாகப் பின்னர் அறியக் கிடைத்தது. ஜே. ஆர், தீக்ஷித்திடம் “நீங்கள் என்ன இந்தியப் பிரதமரா?” என்று கேட்டதாகவும் “ஆம் இலங்கையில் நான்தான் இந்தியப் பிரதமரும் இந்திய இராணுவத் தளபதியுமாகும்” என்று சொன்னதாகவும் இராஜதந்திர வட்டாரங்களில் பேசப்பட்டது. இவ்வளவு சம்பவங்களும் இடம் பெற்றது உள்ளே இருந்த எமக்குத் தெரிந்திருக்கவில்லை.

இரவாகியும் விசாரணைக்கு எந்த அதிகாரிகளும் நாலாம் மாடியில் நாமிருந்த அறைக்கு வரவில்லை. பகலில் இருந்தவர்கள் செல்ல, இரவில் எமது அறைக்கு வேறு இரண்டு உத்தியோகத்தர் கடமை மாறி வந்தனர். உணவு தந்த பின்னர் சங்கிலியால் எமது கைகளைப் பிணைத்து ஜன்னல் கம்பிக்களோடு கட்டிவிட்டுத் தூங்கச் சொன்னார்கள். மேலதிகாரிகள் அனைவரும் சென்ற பின் சிறிது நேத்தில் ஒருவர் வந்து கட்டுகளை அவிழ்த்துவிட்டு சௌகரியமாகத் தூங்குமாறு தமிழில் பேசினார். அவர் ஒரு முஸ்லிம் உத்தியோகத்தராவார்.

காலையில் வந்து எழுப்பி முகம் கழுவுமாறு கூறினார்கள். செய்தோம். மீண்டும் எம்மிடம் வந்து உங்களை விடுதலை செய்யுமாறு உத்தரவு வந்திருக்கிறது என்று சொன்னார்கள்.

உடனே எனக்கொரு ஆசை பிறந்து. அது ஜேவிபி உறுப்பினர்கள் வேட்டையாடப்பட்டு வந்த காலம். கைது செய்யப்பட்டிருக்கும் ஜேவிபி உறுப்பினர்களைப் பார்க்கவேண்டும் என்ற எனது ஆசையை அந்த முஸ்லிம் உத்தியோகத்தரிடம் தெரிவித்தேன். ஏற்கனவே, அமைதிக்காலத்தில் ஈரோஸ் பதுளையில் மக்கள் விடுதலை முன்னணியுடன் பேசத் தொடங்கியிருந்தது.

5

எம்மை அழைத்துக் கொண்டு சென்று ஜேவிபி உறுப்பினர்கள் அடைக்கப்படிருந்த இடத்தைக் காட்டினர். ஒவ்வொருவரும் தனிக் 'குகையில்' அடைக்கப்பட்டிருந்தனர். ஒருவர் கால் நீட்டிப் படுக்கவோ, தலையை நிமிர்த்தி உட்காரவோ முடியாத இடமது. அங்கு காணப்பட்ட ஒருவரின் தலையிலும்மூக்கிலும்இருந்து வடிந்தஇரத்தம்காய்ந்து போய் இருந்தது. கைகள் கட்டப்பட்டிருந்ததால் அவர் துடைக்கக் கூட முடியாதிருந்தார். ஒரு சிலருடன் பேசி ஆறுதல் கூறினோம். ஒரு சில நிமிடங்கள்தான், மீண்டும் எம்மை எமது அறைக்கு கூட்டிவந்துவிட்டனர்.

காலை 10 மணி போல் எங்களை ஏற்றி வந்து மருதானைப் பொலிஸில் ஒப்படைத்தனர். அங்கிருந்த ஆவணம் ஒன்றில் எங்களிடம் கையொப்பங்களைப் பெற்றுக்கொண்டு வாகனம் ஒன்றில் ஏற்றி விமானப்படைத் தலைமைக் காரியாலய மைதானத்தில் இறக்கினர். அங்கே ஓர் உலங்கு வானூர்தி எங்களை மட்டக்களப்புக்கு ஏற்றிச் செல்லத் தயார் நிலையில் இருந்தது. தலைமைக் காரியாலய மைதானத்தைச் சுற்றி ஆயிரக்கணக்கானவர்கள் நின்றிருந்தனர் 'புலிகளைப்' பார்க்கும் ஆவலில். இன்றும் நம்ப முடியவில்லை அங்கு நின்றிருந்த ஒரு சிலர் கைகளை அசைத்து எங்களை வழியனுப்பியும் வைத்தனர்.

புதூர் விமான நிலையத்தில் வைத்து எங்களைக் கைது செய்தவர்களே இந்தியப் படை அதிகாரிகளிடம் எம்மை ஒப்படைத்தனர். இந்தியப் படையினர் எங்களை அவர்களது வண்டியில் ஏற்றி மீண்டும் மன்ரேசா முகாமுக்குக் கொண்டு சென்றனர். அங்கே பிரிகேடியர் தார் வரவேற்றார். உங்களுக்குப் பாரிய உயிரச்சுறுத்தல் உள்ளது. நீங்கள் வெளியே செல்ல முடியாது, இங்கேயே சில காலம் தங்கியிருக்க வேண்டும் என்று பிரிகேடியர் கூறினார். அதற்கிடையில் நூற்றுக் கணக்கான தோழர்கள் மன்ரேசா முகாமுக்குள் நுழைந்து விட்டனர். நாங்கள் முகாமில் இருக்க முடியாது என்று கூறிவிட்டு தோழர்களோடு சேர்ந்து முகாமைவிட்டு வெளியேறி எமது காரியாலயத்துக்குச் சென்றுவிட்டோம்.

ஹரன் ஈரோஸ் படைத்துறை ஆணையாளராக இருந்த முதன்மைத் தோழர், ஜீவனும் கேசரியும் முன்னணிப் போராளிகளாயிருந்தவர்கள். இவர்களையெல்லாம் கண்டு எவ்வளவு காலமாயிற்று என்று நினைக்கும் போது பெருமூச்சே துணை வருகிறது.

1989 இல் என்னைத் தோழர்கள் வலிந்து நாடாளுமன்ற உறுப்பினராக அனுப்பி வைத்தார்கள். அங்கு வேறுவிதமான அனுபவங்கள் கிடைத்தன. ஆயினும் ஆபத்துகளை எதிர்கொண்ட எனது வாழ்பனுபவங்கள் அபத்தங்களை எதிர்கொண்ட பிரமுகர் வாழ்வை விடவும் எத்துணை மேலானது.

1994 இல் நாடாளுமன்றக் குழு உறுப்பினராக மாநாடொன்றில் பங்கேற்பதற்காக பாரிஸ் சென்றேன். ஓர் அந்திப் பொழுதில் நான் தங்கியிருந்த நட்சத்திர விடுதி அறைக்குள் திபுதிபுவென சில சிங்களவர்கள் நுழைந்தனர். இன்று நான் முடிந்தேன் என்று எண்ணிய மறு செக்கன் கொம்றேட் என்று கூவிய வண்ணம் ஒருவர் ஓடிவந்து என்னைக் கட்டிப் பிடித்தார். அவரே நாலாம் மாடியில் காய்ந்த இரத்தக் கோடுகளோடு சந்தித்த ஜேவிபி தோழராகும். அன்று அவர் இரத்தினபுரி போக்குவரத்து சபை டிப்போவின் முகாமையாளராக இருந்ததாகவும், இடது சாரியத் தொழிலாளர் போராட்டங்களில் முதன்மை உறுப்பினராகக் கலந்து கொண்டமையால் கைது செய்யப்பட்டதாகவும் சொன்னார். அவரும் அவரது நண்பர்களும் வொல்க்ஸ்வெகன் வேன் ஒன்றில் என்னை ஏற்றிக்கொண்டு பாரிஸ் நகரைச் சுற்றிக் காட்டினர்.

நான் இன்னும் போராடத் தயார், பழைய முறையிலல்ல..முன்னைய அனுபவங்களை முறைப்படுத்தியவனாக பழைய தமிழ் முஸ்லிம் அரசியல் போக்கை மாற்றியமைக்கும் புதிய முறையிலான (New systematic) போராட்டத்துக்குத் தயார். ●

# குருப்பெயர்ச்சி பலன்கள் ஓர் பார்வை

ஜோதிட
கீர்த்தி விஸ்வானந்த ஐயர்



நவக்கிரகங்களில் முழு சுபக் கிரகம் குரு. அனைத்து வித செல்வங்களையும் தந்தருள்பவர் குரு. சப்தரிஷிகளில் ஆங்கிரஸ முனிவரின் மைந்தன் பிரகஸ்பதி. இவரே குரு. குரு பகவான். நவக்கிரகங்களில் குருவாக இருப்பவர் இவரே! குருப்பெயர்ச்சியாவதும் இவரேதான்!

இவர் தேவர்களுக்கு எல்லாம் குரு. தேவகுரு. நம் வாழ்வில் இரண்டு விஷயங்கள் மிக மிக முக்கியம். அதாவது தனம் என்று சொல்லக்கூடிய பணம். 2வது புத்திர சம்பத்து என்று சொல்லக்கூடிய குழந்தைச் செல்வம். இந்த இரண்டையும் அளிக்கக் கூடிய சர்வ வல்லமை பெற்ற கிரகம்தான் குரு.

குருபகவான் மேலும் பல்வேறு விதமான ஆதிக்கங்களைச் செலுத்த வல்லவர். ஞானம், கூர்ந்த மதிநுட்பம், மந்திரி யோகம், நிதித்துறை, நீதித்துறை, வங்கி, கல்வி, வேத உபதேசம் முதலானவை எல்லாம் எல்லாம் குருவின் அதிகாரத்துக்கு உட்பட்டவை. அவரது அருள் இருந்தால் இந்தத் துறைகளில் பிரகாசிக்கலாம். அவரின் அருள் இருந்தால்தான் இந்தத் துறைகளில் பிரகாசிக்கமுடியும்.

**குரு பார்வை அல்லது வியாழ அனுகூலம்:**

நம் வாழ்வில் சுபநிகழ்ச்சிகள் ரொம்பவே முக்கியமானதுதானே. உதாரணமாக திருமணம் அனைவரின் வாழ்க்கையிலும் முக்கியமானது. திருமணத்துக்கு மிக முக்கிய கிரகமே குரு பகவான்தான். குரு பார்வை என்று சொல்லப்படும் வியாழ அனுகூலம் திருமணத்துக்கு முக்கியமாக தேவைப்படுகிறது. அதனால்தான் திருமணத்தை, வியாழ நோக்கம் என்பார்கள். வியாழ நோக்கம் வந்து விட்டதா என்று பார்த்த பிறகே திருமண விஷயங்களை ஆரம்பிக்க முடியும்.

**குருவின் பலம்:**

குரு எந்த ஸ்தானத்தைப் பார்க்கிறாரோ அந்த ஸ்தானம் பலமும், விருத்தியும் அடைகிறது. குரு பார்வை சர்வ தோஷ நிவர்த்தி என்று புகழ்ந்து போற்றப்படுகிறது. குருவுக்கு 5,7,9 ஆகிய பார்வைகள் உள்ளன. அதாவது குரு இருக்கும் இடத்தில் இருந்து 5,7,9 ஆகிய இடங்களைப் பார்வையிடுகிறார். ஐந்தாம் பார்வையும், ஒன்பதாம் பார்வையும் சிறப்புப் பார்வைகள்.

நிகழும் மங்களகரமான கலியுகாதி சாலிவாகன சகாப்தம் 1940 பசலி 1428 கொல்லம் 1194ம் ஆண்டு ஸ்வஸ்தி ஸ்ரீவிளம்பி வருஷம் தக்ஷிணாயனம் வருஷ ரிது புரட்டாசி மாதம் 18ம் நாள் இதற்குச் சரியான ஆங்கிலத் திகதி 04.10.2018 கிருஷ்ணபக்ஷ ஏகாதசியும் வியாழக்கிழமையும் ஆயில்ய நக்ஷத்திரமும் ஸித்தி நாமயோகமும் பத்ரை கரணமும் சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் உதயாதி நாழிகை 40.00க்கு இரவு 10.05க்கு குரு பகவான் துலா ராசியிலிருந்து விருச்சிக ராசிக்கு மாறுகிறார். விருச்சிக ராசிக்கு வரும் குரு பகவான் தொடர்ந்து 1 வருட காலத்திற்கு இந்த ராசியில் சஞ்சாரம் செய்து அருளாசி

வழங்குவார். விருச்சிக ராசிக்கு வரும் குரு பகவான் தனுசு ராசிக்கு விகாரி வருடம் ஐப்பசி மாதம் 20ம் திகதி 05.11.2018 திங்கட்கிழமையன்று மாறுகிறார்.

தற்போது மாறக்கூடிய குருபகவான் விருச்சிக ராசியில் இருந்து தனது ஐந்தாம் பார்வையால் மீன ராசியையும் ஏழாம் பார்வையால் ரிஷப ராசியையும் ஒன்பதாம் பார்வையால் கடக ராசியையும் பார்க்கிறார். குரு பகவானுக்குஸ்தான பலத்தைவிடத்ருக் பலமே அதிகம். அதர்வது இருக்கும் இடத்தின் பலத்தை விட பார்க்கும் பலமே அதிகம். அதனால்தான் குரு பார்க்க கோடி நன்மை என்கிறோம். எனவே, குருவின் பார்வை பெறும் ராசிகள் பூரணமானப் பலன்களைப் பெறுகின்றன.

பொதுவாக ராசிகள் பெறும் பலன்களின் அளவுகள்:

நன்மை பெறும் ராசிகள்: ரிஷபம் கடகம் மீனம்

நன்மை தீமை இரண்டும் கலந்து பலன்கள் பெறும் ராசிகள்: சிம்மம் துலாம் விருச்சிகம் மகரம் கும்பம்

பரிகாரத்தின் மூலம் பயன்பெறும் ராசிகள்: மேஷம் மிதுனம் கன்னி தனுசு ●

# இப்படித்தான் முடிய வேண்டுமா முதலாவது மாகாணசபை?

அன்ரனி பாலசிங்கம்

வடமாகாணசபையின் பதவிக்காலம் இந்த மாதத்துடன் பூர்த்தியாகிறது. தமிழர்களின் முதலாவது வடக்கு மாகாணசபை, தீராத நோய் ஒன்றுடன் முடிவுக்கு வருகிறது. அந்த நோய் உட்கட்சி மோதல். அதனால் ஏற்பட்ட அமைச்சரவை சிக்கல். யார் அமைச்சர்கள், யார் அமைச்சர்கள் இல்லையென்ற பெரிய குழப்பத்துடன் முதலாவது வடமாகாணசபை முடிந்து போகும் என்றுதான் தெரிகிறது.

கடந்த யூலை மாதத்தில் இருந்து வடக்கு மாகாணசபை அமைச்சரவை சர்ச்சை நீடிக்கிறது. கிட்டத்தட்ட மூன்று மாதத்திற்கும் அதிகமாக சட்டபூர்வ அமைச்சரவை கூடாமல், மாகாணசபை இயங்கிக் கொண்டிருக்கிறது.

இந்த குழப்பம் சிங்கள ஆட்சியாளர்களால் ஏற்பட்டதல்ல. தமிழ் தேசியவாதிகள் குறிப்பிடும் ஒட்டுக்குழுக்களாலும் ஏற்பட்டதல்ல. தமிழர்களால் தமிழர்களிற்கு ஏற்பட்ட வீழ்ச்சியே இந்த அமைச்சரவை வாரிய குழப்பம்.

**கடந்த மாகாணசபை தேர்தலில் மக்கள் முதலமைச்சருக்கு அளித்த வாக்குகள், நம்பிக்கையில்லா பிரேரணையின்போது அவரது வாசஸ்தலத்தின் முன் திரண்ட இளைஞர்களால் முதலமைச்சர் தன் குறித்த அதிக பிரமைகளை ஏற்படுத்தி வைத்திருக்கிறார்.**

அமைச்சர் வாரியம் கூட முடியாமல் இருப்பதால், புதிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதில் எழும் சிக்கலை தவிர்க்க, சில மாற்று வழிகள் கடைப்பிடிக்கப்படுவதாக தெரிகிறது. மாகாண நிர்வாகத்தில் உயரிய அங்கம் சபைதான். சபைக்கான பொறுப்புக்கூறும் அங்கமே அமைச்சர்கள். ஆகவே, அமைச்சரவை சர்ச்சை எழுந்ததையடுத்து,நேரடியாகசபையின் அங்கீகாரத்திற்கு புதிய திட்டங்களை சமர்ப்பித்து அனுமதிபெறப்படுகிறது.


அமைச்சரவை குழப்பத்தால் நிர்வாகம் ஸ்தம்பிக்கும் அபாயம் ஏற்படாத போதும், அது ஒரு அரசியல் வீழ்ச்சியே.

வடமாகாணசபை உருவானது தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு மக்கள் வாக்களித்ததால் அல்ல. அது ஒரு மேலோட்டமான பார்வை. மாகாணசபை முறைமை அமைந்ததே, எண்ணிலடங்காத தமிழ் இளையவர்களின் உயிர் விலையால். ஆயுதப் போராட்டம் பெற்றுத்தந்த நடைமுறையில் உள்ள வாய்ப்பு மாகாணசபை முறைமைதான். தமிழர்களின் நீண்ட ஜனநாயக, ஆயுத போராட்டத்தில் கிடைத்த ஆகக்கூடிய பட்ச தீர்வு அதுதான்.

மாகாணசபை முறைமை உருவானதற்கு பின்னால், எல்லா இயக்கங்களையும் சேர்ந்த ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகளின் உயிர்த்தியாகம் உள்ளது.

இந்த பொறுப்புணர்வு மாகாணசபையை நிர்வகிக்கும் எல்லா தரப்புக்களிற்கும் இருக்க வேண்டும். எல்லா இயக்கங்களை சேர்ந்த இளையவர்கள் இதற்காக உயிரிழந்திருக்கிறார்கள். ஆகவே, எந்த கட்சியோ, கூட்டணியோ ஆட்சிக்கு வந்தாலும் அந்த பொறுப்புணர்விலிருந்து தப்பிக்க முடியாது.

மாகாணசபையை ஒரு அரசியல்



மேடையாக்க, உட்கட்சி மோதலின் களமாக்க அத்தனை ஆயிரம் பேர் உயிரிழந்திருக்கவில்லை. அந்த உயிரிழப்புக்களினால் பெறப்பட்ட மாகாணசபை முழுமையான அதிகாரமில்லாததாக இருக்கின்ற பட்சத்தில், அதை மேலும் மேலும் எப்படி வலுவானதாக்கலாம், அதற்கு அரசியல்ரீதியாக எப்படி உழைக்கலாம் என்று சிந்திப்பதும், செயற்படுவதுமே தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்கள் ஒவ்வொருவருடையதும் கடமையும், பொறுப்பும்.

ஆனால் வடமாகாணசபையில் அது நடக்கவில்லை. ஏன் இந்த சிக்கல்?

முதலமைச்சரை நோக்கி ஒரு தரப்பு கையை காட்டுகிறது. தமிழரசுக்கட்சியை நோக்கி இன்னொரு தரப்பு கையை காட்டுகிறது. ஆக, இந்த இரண்டு தரப்பு மோதல்தான் இன்றைய எல்லா சீரழிவிற்கும் காரணமென்பது தெரிகிறது.

மிக சுலபமாக தீர்க்கக்கூடிய அமைச்சரவை சர்ச்சை நீடித்துக் கொண்டு செல்வதற்கு ஒரேயொரு காரணம்தான் உள்ளது. அது, இரண்டு தரப்பின் ஈகோவும் விட்டுக்கொடுக்காதது.

ஒரு மனிதனின் ஆகப்பெரிய விருப்பம் என்னவாக இருக்கும்?

உயிரைப் பாதுகாப்பதுதான். அந்த உயிரையே இந்த இனத்திற்காக துறந்த ஆயிரக்கணக்கான இளையவர்களின் தியாகத்தில் விளைந்த இன்றைய அரசியல் அறுவடைகளின் மீது ஏறி நின்று, ஈகோ அரசியல் செய்வது ஆகப்பெரிய துயரம்.

எதன் விளைவுகளில் நின்று அரசியல் செய்கிறோம் என்ற பொறுப்புணர்வு, இன்றைய தமிழ் அரசியல் தலைவர்களிடம் இருக்க வேண்டும். தமிழ் தேசிய கூட்டமைப்பில், நீண்ட போராட்ட வரலாற்றையுடைய பல தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தமது பொறுப்புணர்வை புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த விவகாரத்தில் கூடுதல் பொறுப்புணர்வு முதலமைச்சரிடமே உள்ளது. அவர்தான் மாகாண நிர்வாகத்தின் முதலாவது பொறுப்பு சொல்ல வேண்டியவர். வெளியிலிருக்கும் காரணங்களிற்காக, மோதல் புள்ளிகளிற்காக் அவர் மாகாணசபையை சிக்கலாக்க முடியாது. அப்படி செய்வது அவர் தனது பொறுப்பை தவறவிடுவதற்கு சமனானது. எல்லா அழுத்தங்களையும் சமாளித்து, தனது பொறுப்பை நிறைவேற்றுவதே சிறந்த நிர்வாகிகளின் இயல்பு. அவருடன் மோதல், இவருடன் மோதல் என்ற காரணங்களிற்காக மாகாணசபை நிர்வாகத்தை சிக்கலாக்க முடியாது.

கடந்த மாகாணசபை தேர்தலில் மக்கள் முதலமைச்சருக்கு அளித்த வாக்குகள், நம்பிக்கையில்லா பிரேரணையின்போது அவரது வாசஸ்தலத்தின் முன் திரண்ட இளைஞர்களால் முதலமைச்சர் தன் குறித்த அதிக பிரமைகளை ஏற்படுத்தி வைத்திருக்கிறார். முதலமைச்சரின் இயல்பு, வாழ்க்கைமுறைகளினூடாக தன்னையொரு நீதிமானாக, வழிநடத்துபவராக கருதுகிறார். அவரது தனிப்பட்ட வாழ்க்கை முறையில் அவர் மேற்படி இயல்புகளையுடையவராக இருக்கலாம். அவருக்கு எதிராக எந்த ஊழல் குற்றச்சாட்டும் இல்லை. யாரையும் பழிவாங்கியதாக இல்லை. ஊழலுக்கு துணையிருந்ததாகவும் இல்லை. அவர் மிக உயர்வாக வாழ்வொழுக்கமுள்ளவர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இந்த வாழ்வொழுக்கமே ஒருவருக்கு நல்ல நிர்வாக திறனையும், தலைமை பண்புகளையும் கொடுக்காது. மோசமான வாழ்வொழுக்கமுள்ளவர்கள் சிறந்த நிர்வாகிகளாக இருந்திருக்கிறார்கள். தனது வாழ்வொழுக்கமே, ஒரு மக்கள் திரளை தன் பின்னால் அணிதிரட்டுமென முதலமைச்சர் நினைக்கிறார். அது தவறு.

சுருக்கமாக சொன்னால் மிகமிக எளிமையாக சொன்னால் இது கலவர பூமி. குழாயை திறந்தால் தண்ணீர் வராது. இரத்தம்தான் வரும். இது வன்முறைபூமி என்ற அர்த்தத்தில் இதை சொல்லவில்லை. இந்த அரசியல் அரங்கு எப்படியானது என்பதை சொல்ல அந்த வடிவேலு உதாரணத்தை குறிப்பிட்டோம். “அரசியலுக்கு”ண்டான அத்தனை அம்சங்களையும் கொண்டதாக தமிழ் அரசியல் மாறிவிட்டது. இதற்குள் எதிர்நீச்சலிட்டு பயணித்தாலே முதலமைச்சர் வெற்றியடையலாம். தனியே, தனது வாழ்வொழுக்கத்தால் உண்டான பிரதிமையை முன்னிறுத்தி அரசியல் செய்ய முடியாது. அது சிறந்த நிர்வாகத்தையும் ஏற்படுத்தாது.

எந்த சவால் வந்தாலும், வடக்கு நிர்வாகத்தை சிறப்பாக இயங்க வைக்க வேண்டியது முதலமைச்சரின் பணி. அதுவே, அவரது நிர்வாக திறனை புலப்படுத்தும்.

இளையவர்களின் உயிர்விலையால் உருவான மாகாணசபையின் ஆயுள் முடியும்போது,அதைசுமுகமாகமுடிக்க வேண்டியது முதலமைச்சரினதும், தமிழ் தேசிய கூட்டமைப்பினதும், சர்ச்சையில் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரினதும் பொறுப்பாகும்.

அதில் தவறினால் நீதித்துறையின் தீர்ப்பிற்கு அப்பால், வரலாற்றின் தீர்ப்பிலிருந்தும் அவர்கள் தப்பிக்க முடியாது.

## ஆட்டோ சங்கரின் கதை

# சப் இன்ஸ்பெக்டர் தொடங்கி வைத்த சாராய வியாபாரம்

### இந்தியாவை உலுக்கிய சீரியல் கில்லரின் மரண வாக்குமூலம்: 04



ஜெகதி ஆச்சரியத்தில் வாய் பொளந்தா!

"இத்தனையும் வாங்க ஏது பணம்?"

யார் கிட்டேயோ கடன் வாங்கினதா பொய் சொன்னேன்!

பலநாள் பட்டினி கிடந்த பொண்டாட்டி, பிள்ளைங்க வயிறார சாப்பிடுவது பார்த்து எனக்குக் கண்ணீர் ததும்பிச்சு.

புயல் மழையெல்லாம் ஓய்ஞ்சு வெயில் வரவரைக்கும் கடைவீதியிலே மாமூல் கேட்கறதுதான் வழின்னு தீர்மானிச்சேன். வேலைக்குப் போறதா வீட்டிலே பொய் சொல்லிட்டு கடைவீதி போவேன். ஒருநாள் விட்டு ஒருநாள் ஒவ்வொரு கடையிலும் மாமூல் கேட்பேன். தர மறுத்தால் கடை பெஞ்சிலே இருக்கிற இரு பிஸ்கட் பாட்டிலை மட்டும் கீழே போட்டு உடைக்கிறது. அரண்டு போய் பத்து, இருபதுன்னு மாமூல் நீட்டுவாங்க. வசூலான பணத்தையெல்லாம் நாடார்கிட்டேயே கொடுத்து வச்சு வாரக்கடைசியிலே மொத்தமா வாங்கிப்பேன்.

நான் இருந்த இந்திரா நகருக்கும் பக்கத்திலே இருந்த தரமணிக்கும் அப்ப . பெரிசா ஊர் சண்டை வந்தது. எங்க ஏரியாவிலே நான் வஸ்தாதா இருந்ததாலே இங்கே 'ராணுவ'ப்பொறுப்பு (!) எனக்கு வந்தது.

அடுத்த ஊர் ரௌடிகளைச் சமாளிச்சாதான் சொந்த ஊர்லே "தாதா' பதவி நீடிக்கும். இல்லையானா செல்லாக்காசு! எங்க பகுதியிலேயே பத்து,பதினைந்துசில்லறைதாதாக்களை துணைக்கு சேர்த்துகிட்டு தாக்குதல்லே இறங்கினேன். ரெண்டு கோஷ்டிக்குமான சண்டை படுபயங்கரமா வளர்ந்துச்சு. போலீஸ் என்னைத் தேட ஆரம்பிச்சது.

ஒருநாள் இந்திராநகர் பஸ் ஸ்டாண்டிலே நான் க்ரூப்போட உட்கார்ந்து பேசிக்கிட்டிருந்தப்ப ஒரு போலீஸ்காரர் சைக்கிள்ளே வேகமா வந்து என்கிட்ட நிறுத்தினார்! போலீஸைப் பார்த்ததும் என் சீடர்கள் எல்லாரும் சிட்டாப் பறந்துட்டாங்க!நான் ஓடல.' ஓடறதா வேணாமான்னு யோசிச்சிக்கிட்டே இருக்கிறப்ப, அவர் கிட்ட வந்தார். ஒருமாதிரி தில்லா எழுந்து நின்னு அவரைப்பார்த்தேன், கைலியைத் தூக்கிகட்டிக்கிட்டே....!

என் கை காலெல்லாம் சிலிர்த்துச்சு!

போலீஸ்காரரைப் பக்கத்திலே பார்த்ததும்தான் தெரிஞ்சது... என்னை நாடார் கடையிலே உரிச்சு உப்பு கண்டம் போட்டாரே... அதே போலீஸ்காரர். எனக்கு ஆத்திரத்திலே கண்ணெல்லாம் சிவந்தது. கையிலே நடுக்கம். அவர் என்ன நினைச்சாரோ, என்கிட்டே சமாதானமா பேச ஆரம்பிச்சார்.

"சப்இன்ஸ்பெக்டர் உன்னிடம் ஒரு விஷயம் பேசச்சொன்னார். வா, அப்படிப்போய் பேசலாம்!"



பஸ் ஸ்டாண்ட் பக்கத்திலே இருந்த டீக்கடைக்குப் போனோம்.

"சங்கர்...! நீஇப்படி ரௌடியா இருந்து மாமூல் கேட்டு சம்பாதிக்கிறதைவிட, அதிகமா சம்பாதிக்கலாம்... சாராயம் வித்தா! அப்படியே எங்களையும் கவனிச்சுக்கலாமில்ல.. 'அய்யா' இதை உன் காதிலே போடச்சொன்னாரு"

எனக்கு "திக்'குன்னு ஆயிடுச்சு. சாராயம் விற்கிறதா? அதற்கெல்லாம் எவ்வளவு முதலீடு வேணும்? ஆளு பலம் வேணும்?

"யோசிக்காதே சங்கர்! ரௌடித் தொழிலையும் நீ வீட்டுரலாம். வருமானமும் அதிகரிக்கும். இருபத்தஞ்சு ரூபா முதல் இருந்தா போதும்! 19பி பஸ் பிடிச்சு நாவலூர் போ. அங்கே டில்லின்றவர் சாராயம் விற்கிறாரு. அவர் கிட்டே நான் அனுப்பினதா சொல்லு! என் பேரு சுகுமார், டில்லி நல்ல சரக்கா கொடுப்பாரு... எடுத்துக்கிட்டு வந்து வியாபாரம் தொடங்கு. ரிக்ஷாகாரங்க... கூலி வேலை செய்றவங்க எல்லார்கிட்டயும் முதல்லேயே சொல்லிடு. ஜெயந்தி தியேட்டர் பின்பக்கம் முட்புதர்லே வியாபாரத்தைத் தொடங்கு... என்ன சொல்றே....?"

நான் சம்மதம் சொல்லாம இருக்கவும், "சாயங்காலம் நீ ஸ்டேஷன் வந்து அய்யாவைப் பாரு" என்றார்.

சாயங்காலம் 'அய்யா' ரவுண்ட்ஸ் புறப்படத் தயாரா இருந்தார். என்னைப்பார்த்ததும் ஸ்டேஷனுக் குள்ளே தனியா கூட்டிப்போனார்.

"என்ன... பிசினஸ் என்னிக்கு ஸ்டார்ட் பண்ணப்போறே?"

"இ...இல்ல ஸார்! நான் அதெல்லாம் செய்யணுமான்னு யோசிக் கிறேன்"னேன்.

அவருக்கு முகம் இறுகிச்சு.

"சங்கர்! நீ எனக்குத் தோதா இருப் பேன்னு நம்பித்தான் இதுவரைக்கும் உன்னை கைது பண்ணல. புரியுதா? போலீஸ் அடியைப் பார்த்ததில்லையே நீ...!"

"கொஞ்சம் யோசிக்க டயம் கொடுங்க ஸார்."

"இருபத்தஞ்சு ரூபா மட்டும் இன்வெஸ்ட் பண்ணு. குபேரனாயிடலாம்! நீ மாமூல் வாங்கின பணத்திலேருந்து இருபத்தஞ்சு ரூபாய் பணம் கொண்டு வந்துடாதே! உழைச்ச பணமா இருக்கட்டும்."

யோசிச்சுப் பார்த்தேன். தெரிஞ்சோ தெரியாமலோ ரௌடி வேடம் போட்டாச்சு. இனி நீடிச்சுதான் ஆகணும். போலீஸ் மொத்தமும் என்னைப் பழிவாங்கணும்னு கிளம்பினா சமாளிக்க முடியாது. பேச்சை மறுத்தா நிச்சயம் பழிவாங்குவாங்க! இவங்களுக்கு கேஸுக்கு ஆள் கிடைக்காதப்ப எல்லாம் என்னை சந்தேகக்கேஸ்ல கொண்டு வந்துடுவாங்க. வீடு முச்சந்திக்கு வந்துடும். என்கிட்டே எதிர்க்க பலம் இல்லே!

ஜெகதியோட மூக்குத்தியை அடமானம் வச்சு பணம் புரட்டினேன். மூக்குத்தி உழைச்ச பணத்துல வாங்கினது! டில்லிக்கிட்டேயிருந்து சரக்கை வாங்கி வந்தாச்சு. முதல் நாள் விற்பனைக்கு ஆயத்தமானேன். என்னைச்சுற்றிலும் போலீஸ் பட்டாளம்! சப்இன்ஸ்பெக்டர் அவர் கையாலே ஊதுபத்தி ஏத்தி வியாபாரத்தைத் தொடங்கிவச்சார்! **(தொடரும்)**

## சினி விமர்சனம்



# செக்கச்சிவந்த வானம்

மெட்ராஸ் டாக்கீஸ், லைகா தயாரிப்பில் மணிரத்னம் இயக்கத்தில் . விஜய் சேதுபதி, சிம்பு, அருண் விஜய், அரவிந்த் சாமி, ஜோதிகா, ஐஸ்வர்யா ராஜேஷ், அதிதி ராவ், பிரகாஷ் ராஜ், தியாகராஜன், டயானா எரப்பா உள்ளிட்ட ஒரு பெரிய நட்சத்திர பட்டாளமே நடித்திருக்கும் படம் செக்கச் சிவந்த வானம். கேங்ஸ்டர் குடும்பம், காட்ஃபாதராக சேனாபதி(பிரகாஷ் ராஜ்), சேனாபதியையும் அவரது மனைவியையும் கொலை செய்ய முயற்சிக்கிறது மர்ம கும்பல். இருவரும் மருத்துவமனையில் இருக்க அப்பாவின் இடத்திற்கு மூன்று மகன்களுமான வரதராஜன்(அரவிந்த சாமி), தியாகராஜன் (அருண் விஜய்), எத்திராஜ்(சிலம்பரசன்) போட்டியிடுகிறார்கள். போட்டி ஒரு கட்டத்தில் சண்டையாகி பகையாக உருவாகிறது. முடிவு என்ன என்பது பரபர , சேஸிங் கிளைமாக்ஸ். கேரக்டர் அறிமுகம், சேஸிங், செர்பியா, துபாய் ஷேக் என முன்பாதி மாஸ் கிளாஸ் ஸ்பீட் திரைக்கதை. அதிலும் விஜய் சேதுபதி அறிமுகமானதும் படத்தின் டோன் அப்படியே மாறி நக்கல், அசால்ட், கெத்து காட்டுகிறது. மனுஷன் என்னமா நடிக்கிறாரு. 'என் அக்காவைப் பத்தி தப்பா பேசாதடா என் அக்கா சுமாராதான்இருக்கும்னு சொன்னேன் சார் அவன் கேட்கலை.அவ்ளோதான் வீடு முடின்சு' இப்படி படம் நெடுக சீட்டில் நிமிர்ந்து உட்காரச் செய்கிறார். 'நான் வரணுமா', 'என் கிட்ட என்னம்மா இருக்கு, ஒரு மொபைல், அண்ணனோட கள்ளக்காதலி. வேற என்ன இருக்கு' இப்படி விஜய் சேதுபதிக்கு சாவால் விடுகிறார் சிம்பு. படத்தின் மாஸ் ஓபனிங்க் இவர்கள் இருவருக்கும்தான் என அறிந்ததாலோ என்னவோ மணிரத்னம் இருவரின் கேரக்டர்களையும் பார்த்து பார்த்து செதுக்கியிருக்கிறார்.

ஆனால் அதுவே மணிரத்னம் ரசிகர்களை கொஞ்சம் ஏமாற்றலாம். காரணம் ரஜினிகாந்த் , கமல் ஹாசனையே தன்னுடைய படத்தின் பாத்திரத்திற்கு மாற்றிய மணிரத்னம் இதில் ஏன் விஜய் சேதுபதியை அவர் போக்கிலேயே விட்டுவிட்டார் என்ற கேள்வி எழுகிறது, அவர் மீதான நம்பிக்கையா அல்லது மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்ற சந்தேகமா அவருக்கே வெளிச்சம். அரவிந்த் சாமி, அருண் விஜய், பிரகாஷ் ராஜ், ஜோதிகா, ஐஷ்வர்யா ராஜேஷ் , அதிதி ராவ், தியாகராஜன், என ஒவ்வொருவரும் தன் இருப்பை முடிந்தவரை காட்டி ஜொலிக்கிறார்கள்.டத்திற்கு இன்னொரு ஸ்பெஷல் சந்தோஷ் சிவனின் ஒளிப்பதிவு, முக்கியமாக செர்பியா, துபாய் காட்சிகள், பாடல் காட்சிகள் என கண்களுக்கு விருந்து. இசையில் பழைய புயல் இல்லை என்றாலும் ஏ.ஆர்.ரஹ்மானின் ஸ்பெஷல் 'மழை குருவி' 'கள்ளக் களவானி' பாடல்கள் காதில் கீச்சிடுகின்றன. பின்னணி அதிரடி ரகம், சோகக் காட்சிகளில் இரண்டு நிமிட பாடல்களாகவே போட்டு மனதைக் கனமாக்கியிருக்கிறார்.

இரண்டாம் பாதி ஆரம்பிக்கும் போதே துப்பாக்கி சண்டை, சேஸிங், ஓட்டம் என ஆரம்பித்தாலும், இடையில் கொஞ்சம் தொங்கிவிடுகிறது. ஹீரோக்கள் பேசும் வசனங்களும் பெரிதாக எடுபடாமல் நிற்கின்றன. என்னதான் செய்யப் போகிறார்கள் என நினைக்கையில் மாஸ் கிளைமாக்ஸ் நம்மை அதிர்ச்சியில் ஆழ்த்தி பின்மண்டையில் சட்டென அடிக்கிறது. கிளைமாக்ஸ் காட்சியில் நிச்சயம் 'ஓமை காட்', 'ஐய்யயோ' இப்படியான ஆடியன்ஸ் ரியாக்ஷன்களைக் கேட்கலாம். மொத்தத்தில் இத்தனை ஹீரோக்களை வைத்து மணிரத்னம் என்ன செய்யப் போகிறார் என்றக் கேள்விக்காகவே படத்தை பார்க்கலாம். அதற்கேற்ப மாஸ் கிளைமாக்ஸ் காட்டி எண்ட் கார்டு போட்டப்பிறகும் சீட்டில் அமரச் செய்திருக்கிறது செக்கச் சிவந்த வானம்.



நபா நடேஷ்

# சின்னத்திரை

### சின்னத்திரையில் சூரி!



'கலர்ஸ் தமிழ்' சேனலில் வரும் அக்டோபர் 8 முதல் இரவு 10 மணிக்கு ஒளிபரப்பாக இருக்கிற புதிய சீரியல் 'திருமணம்'. வேறு ஒரு பெண்ணைக் காதலித்திருந்த ஹீரோ நிர்ப்பந்தத்தின் பெயரில் ஹீரோயினைக் கைபிடிக்கிறார். அதிர்ச்சியாகிற ஹீரோயினுக்கு அடுத்து வரும் நாள்கள் எப்படி இருக்கும்... கணவன் மனைவியாக இல்வாழ்க்கை சந்தோஷமானதாக மாறுமா... போன்ற ட்விஸ்டுகளுடன் பயணிக்க இருக்கிறது தொடர். 'யாரடி நீ மோகினி', 'குட்டி' ஆகிய படங்களை இயக்கிய மித்ரன் ஜவஹரின் இயக்க மேற்பார்வை செய்ய, 'ரஜினி முருகன்', 'சீமராஜா' உள்ளிட்ட படங்களின் ஒளிப்பதிவாளர் பாலசுப்ரமணியெம் ஒளிப்பதிவு மேற்பார்வை செய்ய, 'மாஸ்டர் சேனல்' நிறுவனம் இந்த சீரியலை தயாரிக்கிறது. மங்களூரைச் சேர்ந்த ஸ்ரேயா அஞ்சன் நாயகியாகவும் டப்ஸ்மாஷ் பிரபலம் சித்து ஹீரோவாகவும் நடிக்கின்றனர். தொடரின் ஆரம்ப எபிசோடுகளில் ஒரு சர்ப்ரைஸாக நடிகர் சூரியும் நடிக்கிறார்.

### நெகிழும் கண்மணி!



ஜீ தமிழ் தொலைக்காட்சியில் "ஒரு ஊருல ஒரு ராஜகுமாரி" தொடரில் சில சமயம் வில்லி, திடீரென பாசமான மருமகள், சில சமயம் காமெடி என நவரசங்களில் அசத்தி வருபவர் ஸ்வேதா. கன்னட சீரியல்களில் நெகடிவ் கதாபாத்திரங்களில் கலக்கியவர். அவரை அங்கிருந்து அள்ளி வந்துள்ளது ஒரு ஊருல ஒரு ராஜகுமாரி ரீம். தமிழ் தெரியாமல் சென்னைக்கு வந்து சீரியலில் கலக்கியதை விட, தமிழ் படித்ததை பெரிய விசயமாக கணவர் பாராட்டுவதாக கூறுகிறார். "கண்மணி என்ற தனது கேரக்டர் பெயரை சொல்லியே வெளியில் ரசிகர்கள் கூப்பிடுகிறார்கள். தமிழ் மக்கள் எனது நடிப்பை ஏற்றுக்கொண்டுள்ளனர். நல்ல வாய்ப்புக்கள் வந்தால் சினிமாவில் நடிக்கவும் தயாராக இருக்கிறேன்" என்கிறார்.

### சினிமாவிற்கு வரும் சங்கீதா



சின்னத்திரை உலகின் இளம் நட்சத்திரம் சங்கீதா. பிஎஸ்சி ஐடி முடித்து விட்டு டிசிஎஸ் நிறுவனத்தில் நல்ல சம்பளத்தில் வேலை செய்து கொண்டிருந்தவருக்கு திடீரென மீடியா ஆசை வர, முன்னணி மியூசிக் தொலைக்காட்சியில் தொகுப்பாளினி ஆனார். அதன்பிறகு சீரியல் நடிகை ஆனார். அழகு தொடரில் முக்கியமான கேரக்டரில் நடிக்கிறார். இந்த தொடரில் ரேவதியின் மூத்த மருமகள் பூர்ணாவாக வில்லித்தனம் காட்டி வருகிறார். இப்போது அடுத்த பாய்ச்சலாக சினிமாவுக்கும் வந்து விட்டார். த்ரிஷா சோலோ ஹீரோயினாக நடிக்கும் பரமபத விளையாட்டு படத்தில் த்ரிஷாவின் தோழியாக நடிக்கிறார். தொடர்ந்து சினிமாவில் ஹீரோயினாக நடிக்கும் ஆசையில் இருக்கிறார்.

### சீரியலுக்கு வரும் சிற்பி!



ராதிகா இரண்டு வேடங்களில் நடிக்க 5 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட வாணி ராணி சீரியல், 1700 எபிசேடுகளைக் கடந்து தற்போது இறுதிக்கட்டத்தை நெருங்கியிருக்கிறது. அதன் படப்பிடிப்பை முடித்துவிட்டு அடுத்ததாக சந்திரகுமாரி என்ற சீரியலில் நடிக்கத் தொடங்கிவிட்டார் ராதிகா. சரித்திரமும், சமூகமும் மாறி மாறிப் பயணிக்கும் வித்தியாசமான சீரியலாக இது உருவாகி வருகிற இந்த சீரியலில், 7 வேடங்களில் நடிக்கிறார் ராதிகா. சென்னை மற்றும் மும்பையில் மிகப்பெரிய செட்டுகள் போட்டு ஷூட்டிங் நடைபெற்று வருகிறது. அரச குடும்பம் சார்ந்த கதையை, பாட்ஷா படத்தின் இயக்குநரான சுரேஷ் கிருஷ்ணா இயக்குகிறார். நிகழ்காலக் காட்சிகளை சி.ஜே.பாஸ்கர் இயக்குகிறார். தாமிரபரணி படத்தில் விஷால் ஜோடியாக நடித்த பானு, இதில் ராதிகாவின் மகளாக நடிக்கிறார். நிரோஷா, உமா ரியாஸ் ஆகியோர் முக்கியக் கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். இந்த சீரியலுக்கு சிற்பி இசையமைக்கிறார்.

# வண்ணத் திரை

## நயன், த்ரிஷாவிற்கு போட்டியாகும் நித்யா!

ஓ காதல் கண்மணி, மெர்சல் படங்களில் நடிப்பதற்கு முன்பே நடிகை ஸ்ரீபிரியா இயக்கிய மாலினி 22 பாளையங்கோட்டை என்ற படத்தில் கதையின் நாயகியாக நடித்தவர் நித்யாமேனன். அதையடுத்து தற்போது பிராணா என்ற படத்தில் நடித்துள்ளார். இந்த படத்தில் நித்யாமேனன் மட்டுமே ஒரேயொரு கேரக்டரில் படம் முழுக்க நடித்துள்ளார். அதைத் தொடர்ந்து தெலுங்கில் என்டிஆரின் வாழ்க்கை வரலாறு படத்தில் சாவித்ரி வேடத்தில் நடித்திருப்பவர், தமிழில் மிஷ்கின் இயக்கி வரும் சைக்கோ படத்திலும் ஒரு பிரதான வேடத்தில் நடிக்கிறார். அதைத் தொடர்ந்து முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் வாழ்க்கை வரலாறு படமான த அயர்ன் லேடி படத்திலும் ஜெயலலிதாவாக நடிக்கிறார் நித்யாமேனன். ஜெயலலிதா வேடத்தில் நித்யாமேனன் நடிப்பதாக செய்திகள் வெளியானதில் இருந்து, இப்போது அதிரடியான கதையின் நாயகிக்கான கதைகள் வைத்திருக்கும் டைரக்டர்களும் நித்யா மேனனை சந்தித்து கதை சொல்லி வருகிறார்களாம். அந்த வகையில், கதையின் நாயகியாக நடித்து வரும் நயன்தாரா, த்ரிஷா போன்ற நடிகைகளுக்கு அதிர்ச்சி கொடுக்கும் வகையில் பரபரப்பான கதையின் நாயகியாகியிருக்கிறார் நித்யா மேனன்.

## ரஜினி, விஜய்- அடுத்தது சூர்யா!

சன் பிக்சர்ஸ் நிறுவனம், கார்த்திக் சுப்பராஜ் இயக்கத்தில் ரஜினி நடித்து வரும் பேட்ட, ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் விஜய் நடித்து வரும் சர்கார் படங்களை தயாரிக்கிறது. பேட்ட படத்தின் வேலைகள் முடிவடைந்ததும், ரஜினி, ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் நடிக்கும் படத்தை தொடங்குகிறார்கள். இந்த படத்தையும் சன் பிக்சர்ஸ் நிறுவனமே தயாரிக்கிறது. அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் படப்பிடிப்பு துவங்குகிறது. எந்திரன், பேட்ட ஆகிய படங்களை தொடர்ந்து சன் பிக்சர்ஸ் நிறுவனம் ரஜினி நடிப்பில் தயாரிக்கும் மூன்றாவது படம் இது. ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கும் இரண்டாவது படம் இது. இந்தப்படத்தை அடுத்து ஹரி இயக்கத்தில் சூர்யா நடிக்கும் படத்தையும் சன் பிக்சர்ஸ் தயாரிக்கிறது.



பாயல்

## பிறந்தநாளில் மனைவியை அறிவிக்கிறார் பிரபாஸ்!

பாகுபலி நாயகன் பிரபாஸ், அந்த ஒரே படத்தில் இந்திய அளவில் பிரபலமான நடிகராகி விட்டார். அந்தபடம் வெளியான நேரத்தில் பிரபாசும், அனுஷ்காவும் காதலிப்பதாகவும் விரைவில் அவர்கள் திருமணம் நடைபெற உள்ளதாகவும் பரபரப்பு செய்திகள் வெளியாகின. பின்னர் அந்த செய்தியை அவர்கள் இருவருமே மறுத்தனர். நாங்கள் நல்ல நண்பர்கள் மட்டுமே, எங்களுக்கிடையே காதல் எதுவும் இல்லை என்று கூறினார்கள். இதையடுத்து, அனுஷ்கா எந்த படத்திலும் கமிட்டாகவில்லை. ஆனால் பிரபாஸ் சாஹோ என்ற படத்தில் நடித்து வருகிறார். இந்த நிலையில், ஒக்டோபர் 23ந் திகதி தனது 39வது பிறந்த நாளை கொண்டாடுகிறார் பிரபாஸ். அன்றைய தினத்தில் அவர், தனது வருங்கால மனைவி குறித்த தகவலையும் வெளியிடுகிறாராம். ஆக, பிரப்ாஸின் வருங்கால மனைவி அனுஷ்காவா இல்லை வேறு பெண்ணா என்பது விரைவில் தெரிந்து விடும்.

## யானையுடன் பழகும் ஆரவ்வின் காதலி!

விஜய் ஆண்டனியின் சைத்தான் படத்தில் ஒரு சிறிய கேரக்டரில் நடித்த ஆரவ், பின்னர் பிக் பாஸ் சீசன் 1 நிகழ்ச்சி மூலம் பிரபலமானவர். அந்நிகழ்ச்சியில் ஆரவ் டைட்டில் வின்னரானார். ஆனாலும் உடனடியாக அவர் ஆசைப்பட்டபடி ஹீரோவாக நடிக்கும் பட வாய்ப்புக்கள் தேடி வரவில்லை. சமீபத்தில் தான் ராஜபீமா என்ற படத்தில் ஹீரோவாக நடிக்க தொடங்கியுள்ளார். சுரபி பிலிம்ஸ் நிறுவனம் தயாரிக்கும் இந்தப்படத்தை நரேஷ் சம்பத் என்ற அறிமுக இயக்குநர் இயக்கி வருகிறார். இந்தப் படத்தில் ஆரவுக்கு ஜோடியாக ஆஷிமா நெர்வால் நடிக்கிறார். ஆஸ்திரேலியா நாட்டில் வாழ்ந்து வரும் ஆஷிமா நெர்வாலின் பூர்வீகம் ஹரியானாவாம். பல அழகி போட்டிகளில் கலந்து கொண்டு கவனம் பெற்றுள்ள ஆஷிமா நெர்வால் ராஜபீமாவில் ஆரவின் காதலியாகவும். வன விலங்குகள் ஆர்வலராகவும் நடிக்கிறார். இந்த படத்தில் யானையும் ஒரு முக்கிய கேரக்டராக வருவதால் அதனுடன் நடிக்க ஆஷிமா இப்போது பயிற்சி எடுத்து வருகிறார்.

## ஜோக்கர் தமன்னா?

நடிகை கங்கனா ரனாவத் இந்தியில் நடித்த படம் குயின். இப்படம் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய 4 மொழிகளில் ரீமேக் ஆகிவருகிறது. தமிழில் காஜல் அகர்வால், தெலுங்கில் தமன்னா, மலையாளத்தில் மஞ்சிமா மோகன், கன்னடத்தில் பருல் யாதவ் நடிக்கின்றனர். ஒரே கதாபாத்திரத்தை 4 ஹீரோயின்களும் ஏற்றிருக்கின்றனர். சமீபத்தில் இப்படத்தில் நடிக்கும் 4 நடிகைகளின் பர்ஸ்ட் லுக் தோற்றங்கள் வெளியிடப்பட்டன. அதில் காஜலுக்கு பாராட்டும் தமன்னாவுக்கு டோஸும் கிடைத்திருக்கிறது. இதுபற்றி ரசிகர்கள் கூறும்போது,'4 ஹீரோயின்களின் தோற்றமும் வெவ்வேறுவிதமாக உள்ளது. காஜல் அகர்வால்தான் மிக அழகான தோற்றத்தில் இருக்கிறார். மஞ்சிமா மோகன் கண்ணியமாகவும், பருல் யாதவ் மென்மையாகவும் உள்ளார். ஆனால் தமன்னாவின் தோற்றம் ஜோக்கர்போல் பார்த்தவுடன் சிரிக்கத் தோன்றும்படியாக உள்ளது. இதுபோன்ற ஒரு தோற்றத்தில் அவரை எதிர்பார்க்கவில்லை' என்று தெரிவித்துள்ளனர்.

## கீர்த்தி சுரேஷின் கேவலமான சிரிப்பு!

சண்டக்கோழி படத்தில் விஷால் ஜோடியாக நடித்திருக்கிறார் கீர்த்தி சுரேஷ். இந்தப் படத்தின் பத்திரிகையாளர் சந்திப்பு கடந்த சில தினங்களுக்கு முன்பு நட்சத்திர ஓட்டல் ஒன்றில் நடந்தது. அப்போது நிருபர்கள் "நடிகை ஸ்ரீரெட்டி தமிழ் படத்தில் நடிக்கிறார். அவருக்கு நீங்கள் ஒத்துழைப்பு கொடுப்பீர்களா?" என்று விஷாலிடம் கேட்டனர். அதற்கு பதில் அளித்த விஷால் "ஸ்ரீரெட்டிக்கு வாய்ப்பு கிடைத்ததில் எனக்கு மகிழ்ச்சி. அவருக்கு நாங்கள் பாதுகாப்பு தர வேண்டியதில்லை. அவரே எல்லா இடத்திலும் கேமரா வைத்து தனது பாதுகாப்பை பார்த்துக் கொள்வார். அதனால் படம் எடுப்பவர்களும் தைரியாக எடுக்கலாம்" என்றார். இந்த பதிலை கேட்ட அனைவரும் சிரித்தனர். விஷால் பக்கத்தில் இருந்த கீர்த்தியும் சிரித்து விட்டார். இந்த சிரிப்பு ஸ்ரீரெட்டிக்கு கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. அதை அவர் தன் பேஸ்புக்கில் கொட்டியிருக்கிறார். அவர் எழுதியிருப்பதாவது: "கீர்த்தி சுரேஷின் சிரிப்பு ரொம்ப கேவலமாக இருந்தது. கவலைப்படாதீர்கள் மேடம். எப்போதுமே நீங்கள் உயர்ந்த இடத்தில் இருக்க முடியாது. ஒரு நாள் போராடுகிறவர்களின் வலியை நீங்கள் புரிந்து கொள்வீர்கள். நீங்கள் சிரித்ததை நான் மறக்க மாட்டேன். நினைவில் வைத்துக் கொள்வேன். இப்போது நீங்கள் மேகத்தில் பறந்து கொண்டிருக்கிறீர்கள்" எழுதியிருக்கிறார்.

## 2.0 நவம்பர் மாதம் 29ம் திகதி வெளியாக உள்ளது.

ஷங்கர் இயக்கத்தில், ரஜினிகாந்த், அக்ஷய்குமார், எமி ஜாக்சன் மற்றும் பலர் நடித்துள்ள 2.0 படம் வரும் நவம்பர் மாதம் 29ம் திகதி தமிழ், தெலுங்கு, ஹிந்தி ஆகிய மொழிகளில் வெளியாக உள்ளது. எந்திரன் படத்தின் இரண்டாம் பாகமாக இந்தப் படம் உருவானாலும், அந்தப் படத்தின் தயாரிப்பு நிறுவனம் இரண்டாவது பாகத்திற்காக என்ஓசி வழங்காததால் படத்திற்கு எந்திரன் என்றும் பெயர் வைக்க முடியவில்லை. அதோடு, இந்த 2.0 படத்தின் கதையையும் புதிதாக உருவாக்கியுள்ளதாகவே தெரிகிறது. எந்திரன் படத்தில் ரஜினிகாந்த் ஜோடியாக ஐஸ்வர்யா ராய் நடித்திருந்தார். இரண்டாவது பாகத்தில் ரஜினிகாந்த் ஜோடியாக எமி ஜாக்சன் நடிக்கிறார். இருப்பினும் எந்திரன் படத்தின் நாயகியான ஐஸ்வர்யா ராய் 2.0 படத்தில் ஒரு கேமியோ தோற்றத்தில் நடித்திருப்பதாகத் தகவல் பரவி வருகிறது. இது குறித்து இதுவரை எந்தவிதமான அறிவிப்பும் வரவில்லை. ஆனால், எந்திரன் படத்துடன் 2.0 படத்தையும் தொடர்புபடுத்த வேண்டும் என்பதற்காக அவருடைய கதாபாத்திரம் பயன் பட்டிருக்கலாம் என்றும் சொல் கிறார்கள்.



ஆதா சர்மா


சிவராசா, சுபா


சுபா - சயனைடு தற்கொலை


கோனைகுண்டே மறைவிட வீடு



ராஜிவ் காந்தி கொலை 49
புலிகள் சிக்கிய கதை

# ஒற்றைக்கண் சிவாராசனை இரகசியமாக சுற்றிவளைத்த கறுப்புபூனைகள்!

கே.ராகோத்தமன்

உடல்நலம் சரியில்லாமல் இருந்த அவரை (மிருதுளாவுக்கு ஆஸ்துமா தொந்தரவு) மருத்துவமனைக்குப் போகக்கூட அனுமதிக்கமாட்டேன் என்று சிவராசன் கூறியிருக்கிறார்.

ரங்கநாத், தாம் பார்த்துக் கொள்வதாகச் சொல்லித்தான் மிருதுளாவை வெளியே அழைத்துச் சென்றிருக்கிறார்.

மருத்துவமனைக்குப் போய்விட்டு அங்கிருந்து புத்தனஹள்ளி வீட்டுக்கு அவர்கள் செல்ல, அதற்குள் மாண்டியா சம்பவம் தெரிந்துவிட்ட படியால் "கோனனகுண்டேவில் வாடகைக்கு எடுத்த புதிய வீட்டுக்குப் போகும்படியானது. நடந்தது இதுதான்.

கர்நாடகக் காவல் அதிகாரிகள் மிருதுளாவிடம், இப்போது சிவராசனும் சுபாவும் எங்கே இருக்கிறார்கள் என்று கேட்டார்கள். 'கோனனகுண்டே வீட்டில்தான் இருக்கிறார்கள். என்னோடு வந்தால் காட்டுகிறேன்!' என்று அவர் சொன்னார்.

அந்த ஓகஸ்ட் 18ம் திகதி இரவை மறக்கவே முடியாது.

ஒரே ஒரு பொலிஸ் காரரை மட்டும் ஒரு வாடகை காரில் அழைத்துக் கொண்டு மிருதுளா கோனனகுண்டேவுக்குச் சென்றார். சிவராசன் பதுங்கியிருந்த வீட்டுக்குப் பக்கத்தில் இருந்த இன்னொரு வீட்டின் பாத்ரூமிலிருந்து அந்த அதிகாரி பார்த்தார்.

மே 21ம் திகதி இரவு தப்பித்துக் காணாமல் போன சிவராசன், சுபா மட்டுமல்லாமல் நேரு என்கிற இன்னொரு விடுதலைப் புலி உறுப்பினர், சுரேஷ் மாஸ்டர், ரங்கன், அம்மன், ஜமுனா ஆகியோரும் அந்த வீட்டில்தான் அப்போது இருந்தார்கள்!

ராஜிவ் கொலை புலன் விசாரணையின்போது நடைபெற்ற சயனைட் மரணங்கள் அனைத்தும் வேகம் மற்றும் விவேகமின்மையால் ஏற்பட்டவை. எங்களிடம் என்.எஸ்.ஜி. கொமாண்டோக்கள் இருந்தார்கள். எந்தவித அபாயகரமான கட்டத்திலும் துணிந்து பாய்ந்து சென்று போரிட வல்லவர்கள்.

புலிகளிடம் சயனைட் இருக்கிறது என்பது நன்கு தெரிந்த பிறகு, வீட்டை முற்றுகையிட்டு, தக்க தருணத்துக்காகக் காத்திருப்பது என்பது எப்பேர்ப்பட்ட அபத்தம்!

இது ஏற்கெனவே பல சமயம் நிரூபணமாகியும் இருக்கிறது.

கோயமுத்தூரில் டிக்சன் சயனைட் சாப்பிட்டு இறந்தபோதே உஷாராகியிருக்கவேண்டும்.

அதன்பிறகு இந்திரா நகர் வீட்டில் இரண்டு பேர். திரும்பவும் மாண்டியாவில் பன்னிரண்டு பேர்.

இத்தனைக்குப் பிறகும் கோனனகுண்டேவில் சிவராசனையும் சுபாவையும் உயிருடன் பிடிக்க முடியாமல் போனதற்கு அதிகாரிகளின் மெத்தனமும் தயக்கமுமே அடிப்படையான காரணம். ஆயிரம் நியாயங்கள் சொல்லி உண்மையை மூடி மறைக்கலாம்.

ஆனால், எதையும் சாதிக்கவல்ல பயிற்சி பெற்ற கொமாண்டோக்களை வைத்துக்கொண்டு, அவர்களுக்கு உத்தரவு கொடுக்காமல் சும்மா வீட்டுக்கு வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க வைத்ததை மன்னிக்கவே முடியாது!

சிவராசனின் மரணம் மட்டும் நிகழாதிருந்திருந்தால் ராஜிவ் படுகொலை பற்றி மட்டுமல்ல, தமிழகத்தில் எல்.டி.டி.ஈயின் முழுமையான நெட் வேர்க் குறித்து சி.பி.ஐக்கு ஏராளமான தகவல்கள் கிடைத்திருக்கும்.

ஒரு மிகப்பெரிய வாய்ப்பு கைநழுவிப் போனது என்கிற வருத்தம் என்னைப் போன்ற புலனாய்வாளர்கள் அத்தனை பேருக்குமே அன்று இருந்தது!

ஆனால் நாங்கள் ஒன்றும் செய்ய இயலாதவர்கள். மேலதிகாரிகள் சொல்வதை மட்டுமே செய்ய வேண்டும். அவர்கள் பேசுவதை அப்படியே கேட்டுக்கொள்ள வேண்டும்.

ராஜிவ் படுகொலைச் சம்பவத்துக்குப் பிறகு சிவராசன் மரணம் வரை சுமார் மூன்று மாத காலம் வீடு, குடும்பம், உறக்கம், ஓய்வு, உணவு என்று எதுவுமில்லாமல் இரவு பகலாகத் தேடுதலும் புலன் விசாரணையும் மட்டுமே வாழ்க்கையாக இருந்தவர்கள் நாங்கள்.

சிவராசன் உயிருடன் அகப்பட்டிருந்தால், அதுதான் எங்கள் பணிக்குமாபெரும் பரிசாக இருந்திருக்க முடியும். பேசிப் பயனில்லை. நடந்தது என்னவென்று உலகுக்குத் தெரியும்!

சிவராசன் குழுவினர் அந்த வீட்டில்தான் இருக்கிறார்கள் என்பது உறுதியானதும் சி.பி.ஐயும் கறுப்புப் பூனைப் படையினரும் கோனனகுண்டேவுக்கு விரைந்தனர்.

டெல்லி மேலிடங்களுக்கும் செய்தி சொல்லப்பட்டது. இதுதான் இடம். இதுதான் இறுதிநாள்.

இன்று, அல்லது என்றுமில்லை! நாங்கள் மிகவும் எச்சரிக்கையாக இருந்தோம்.

முந்தைய தவறுகள் ஏதும் இந்த முயற்சியில் திரும்ப ஏற்படக்கூடாது என்பது ஒருபுறமிருக்க, உள்ளே இருப்பவர்களைக் குறைத்து எடை போட்டுவிடக்கூடாது என்பதிலும் கவனமாக இருந்தோம்.

சிவராசனிடம் ஆயுதங்கள் இருந்தன. அவர் ஏகே 47 வைத்திருந்தார். ஒரு பிஸ்டலும் வைத்திருந்தார். தவிரவும் உடனிருக்கும் மற்றவர்களிடம் வேறு ஆயுதங்கள் இருக்கக்கூடும்.

என்னவென்று நமக்கு முழுமையாகத் தெரியாத போது, மாண்டியாவில் நடந்தது போல அதிரடி நிகழ்த்தி, அவர்கள் சயனைடு சாப்பிடுவார்கள், ஆஸ்பத்திரிக்குத் தூக்கிச் செல்லலாம் என்று மட்டுமே எண்ணிக்கொண்டு போக முடியாது.

சயனைட் அருந்துவதற்கு முன்னால் அவர்களைப் பிடிக்க வேண்டும். பொலிஸ் தரப்பிலும் அவர்கள் தரப்பிலும் சேதாரங்களையும் தவிர்க்க வேண்டும்!

காத்திருந்தோம். எந்தக் கணமும் அதிரடியாக உள்ளே நுழைவதற்கு கறுப்புப் பூனைகளும் தயாராக இருந்தார்கள். ஆனால் அப்படியான அதிரடி முயற்சிகள் ஏதும் வேண்டாம் என்று டெல்லியிலிருந்து தகவல் வந்தது!

எங்களுக்கு அதிர்ச்சியாக இருந்தது. வேறென்ன செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள்?


அன்பாகப் பேசி, வெளியே வரச் சொல்லவா? அல்லது சாகும்வரை காத்திருந்துவிட்டு, பிறகு உள்ளே புகுந்து பிணத்தை எடுத்து வரவா? மிருதுளாவை உள்ளே அனுப்பி முதலில் பரிசோதனை செய்து பார்க்கலாம் என்று ஒரு எண்ணம் தோன்றியது.

ஆனால் வேண்டாம் என்று விட்டுவிட்டோம். (தொடரும்)

# சிவாஜி மரணத்தில் சிரித்த கதை

## ரமேஷ் கண்ணா எழுதும் 'திரையிடாத நினைவுகள் 7'

கலைஞரைப் போலத்தான் சிவாஜி சாரும் எனக்கு... மிகப் பெரிய மனிதர். நான் சினிமாவுக்கு வரும் முன்பு, வீட்டில் பொய் சொல்லிவிட்டு, பள்ளிக்கூடத்தில் இருந்து பாதியில் வெளியே வந்து என சாகசங்கள் செய்து அவரது படங்களை திரையரங்குகளில் பார்ப்பேன். சினிமாவுக்கு வந்த பின்னருமே கூட எனக்கெல்லாம் அவரைப் பார்ப்பது பெரிய விஷயமாகத்தான் இருந்தது. கே.எஸ். ரவிக்குமார் சார் ஆஃபிஸ்ல நாங்க டிஸ்கஸ் பண்ணும்போது, வேலை முடிஞ்சதும் கிளம்பிவிட மாட்டோம். உட்கார்ந்து சிவாஜி பாடல்கள், எம்.ஜி.ஆர் பாடல்கள் எல்லாம் பெரிய ஸ்க்ரீன்ல போட்டுப் பார்ப்போம். அதுதான் எங்கள் ரெஃப்ரெஷ்மெண்ட், எங்கள் உத்வேகம். அப்படி ஒரு பெரிய மனிதரான சிவாஜி சார் கூடயும் பழகும் வாய்ப்பைக் கொடுத்தது சினிமா.



1998ஆம் வருஷம், 'படையப்பா' ஷூட்டிங்... கர்நாடகால மாண்டியா தாண்டி மேல்கோட்டை கோவில்ல படப்பிடிப்பு. அந்த ஏரியாவை சுத்தி பல நாட்கள் எடுத்தோம். சிவாஜி சார், ரஜினி சார்லாம் மைசூர்ல தங்கியிருக்காங்க. நாங்க அஸிஸ்டண்ட்ஸ், ப்ரொடக்ஷன் டீம் ஆளுங்கெள்லாம் வேற எடத்துல தங்கியிருந்தோம். தினமும் காலையில நடிகர்களை அழைத்துப் போகும் பொறுப்பு எங்களோடதுதானே. முதல் நாள், காலையில் ஆறு மணிக்கு ஷூட்டிங். அங்க போகணும்னா அஞ்சு மணிக்கே கிளம்பணும். 'அவர் எங்க அஞ்சுமணிக்குஎந்திரிப்பார்,எப்படியும் லேட் ஆகும்'னு நினைச்சுக்கிட்டே நானும் தேனப்பனும் அஞ்சே முக்கால் போல சிவாஜி சார் தங்கியிருந்த லலிதா பேலஸ்க்கு போனோம். அங்க போனா, பேலஸ் வாசல்ல விக், மேக்அப் எல்லாம் போட்டு பேலஸ் ஓனர் மாதிரி சிவாஜி சார் முன்னாடி ரெடியா நிக்குறாரு.

எனக்கு அவரைப் பார்த்ததும் பக்குன்னு ஆகிடுச்சு. நான் ட்ரைவர்கிட்ட, 'வண்டியை நிறுத்தாம முன்னாடி தள்ளி போ'னு சொல்லிட்டு, தேனப்பனைப் போய் சிவாஜி சாரை கூட்டிட்டு வர சொன்னேன். கொஞ்சம் தள்ளி நின்னு பாக்குறேன். தேனப்பன் அவர்கிட்ட போனதும், அந்த சிம்மக் குரலில் கரகரன்னு கேக்குறார், "ஏன் லேட்டு?". இத்தனைக்கும் லேட் எல்லாம் ஆகல. நாங்க மேல்கோட்டை போய் சேருவதுக்கும் ஷூட்டிங்கில் மற்ற விஷயங்கள் தயாராவதுக்கும் சரியா இருக்கும். இருந்தாலும் அதை ஈஸியா எடுக்காம கேட்டார். இப்போ நினைக்கும்போதும் அவருடைய அந்த சின்சியாரிட்டி ஆச்சரியப்படவைக்குது. ஒன்னு உறுதியா புரியுது, திறமை எவ்வளவு இருந்தாலும் அர்ப்பணிப்பும் சேர்ந்து தான் நம் உயரத்தைத் தீர்மானிக்கிறது. நீங்களே உங்க திறமையையும் அர்ப்பணிப்பையும் கூட்டி, கழிச்சு, பெருக்கி, வகுத்துப் பார்த்து உங்க உயரத்தை கணக்குப் பண்ணிக்கலாம், வாழ்க்கையின் உயரத்தை...

சிவாஜி சாரை ஒரு காரில் ஏத்திக்கிட்டு, நாங்க இன்னொரு காரில் போனோம். மேல்கோட்டைக்குப் போயட்டோம். அங்க கோவிலுக்குப் போக படிப்படியா ஏறிப் போகணும். அவரது உயரத்துக்குஎன்னையெல்லாம் அப்போது அவருக்குத் தெரிய வாய்ப்பே இல்லைன்னு நான் எதுவும் பேசாம வந்தேன். சிவாஜி சாரை முன்னாடி விட்டுட்டு நாங்க பின்னாடி போனோம். ஒரு படி ஏறுவாரு, நின்னு திரும்பி என்னைப் பார்த்து முறைப்பார். 'என்னடா இது, லேட்டா வந்தது இவ்வளவு பெரிய குற்றமா, விட மாட்டேங்குறாரே'னு நான் தலையைக் குனிந்துகொள்வேன். கொஞ்ச தூரம் ஏறுவார், திரும்ப நின்று ஒரு முறை முறைப்பார். நான் முடிவு பண்ணிட்டேன், 'ஸ்பாட்டுக்குப் போனதுக்கு அப்புறம் இவர் கண்லயே படக்கூடாதுடா சாமி'ன்னு. இப்படியே ரெண்டுமூணு முறைப்புகளுக்குப் பிறகு மேலே போயிட்டோம். போனதும் சிவாஜி சார் கே.எஸ்.ரவிக்குமார்கிட்ட போனார். 'போச்சுடா.. லேட்டா வந்ததை அங்கேயும் சொல்லி பிரச்சனை பண்ணப் போறாரோ'னு நினைச்சேன். எனக்கு லைட்டா கோபமும் வந்தது. 'என்னடா இவர் இப்படி பண்ணுறார்'னு தோணுச்சு.



ரவிக்குமார்கிட்ட என்னைக் காட்டி கேட்டார், "இந்தப் பையன் யாரு?" என்று. நான் எது வந்தாலும் பாத்துக்கலாம்னு நினைச்சு நின்றேன். லலிதா பேலஸ்ல எப்படி என் எதிர்பார்ப்பை உடைச்சாரோ அதே மாதிரி இங்கேயும் உடைக்கப் போறார்னு நான் நினைக்கல. "நம்ம கோடைரக்டர்தான் சார். என்ன ஆச்சு?"னு ரவிக்குமார் கேட்டார். "இவன்தான முத்துராமன் பையன் படத்துல நடிச்சவன்?"ன்னு கேட்டார். எனக்கு அதுவரைக்கும் அடிவயிற்றில் இருந்த சூடெல்லாம் அப்படியே ஜில்லுன்னு மாறுச்சு. "ரொம்ப சூப்பரா காமெடி பண்ணியிருக்கான்"னு அவர் சொல்ல, எனக்கு சந்தோஷம் தாங்க முடியல. யார் யார் வீட்டு வாசலில் காத்திருந்தேன், எத்தனை பேர்கிட்ட அவமானப்பட்டிருப்பேன், அடுத்தடுத்து படம் ஆரம்பிச்சு ஆரம்பிச்சு டிராப் ஆயிருக்கு, இது எல்லாமே இந்த ஒரு தருணத்துக்காகத்தானோனு தோணுச்சு. சிவாஜி சார் என்னை கவனிச்சிருக்கார். எனக்கு கஷ்டம் இருந்தப்போ கடவுள் மேல கோபப்பட்டுருக்கேன், இந்த கிஃப்டுக்காகத்தான் என்னை அந்த அடி அடிச்சுருக்காருன்னு நினைச்சுக்கிட்டேன்.

சிவாஜி சார் அதோட நிக்கலை. ரஜினி சார் வந்ததும் அவர்கிட்டயும், "இவன் யார் தெரியுமா?ன்னு கேட்டார். "தெரியுமே, நம்ம ரமேஷ்கண்ணா"னு சொன்னார் அவர். "முத்துராமன் பையன் கூட இவன் நடிச்ச படம் பாரு. சூப்பரா நடிச்சிருக்கான்"னு சொன்னார். ரஜினி சார் என்கிட்டே சொன்னார், "யோவ்...முப்பது வருஷமா நடிக்கிறேன்யா நான். என்னைப் பத்தி இவர் யார்கிட்டயும் சொன்னதே இல்லய்யா. உன் டைம் ஓர்க்அவுட் ஆகிடுச்சுய்யா"னு. அடுத்து மணிவண்ணன் சார் வந்தார். அவர்கிட்டயும் சிவாஜி சார் என்னைப் பற்றி சொன்னார். மணிவண்ணன் சார் என்னிடம் சொன்னார், "டேய் என்னடா சிவாஜி சார் உனக்கு பி.ஆர்.ஓ (பிஸிளி மக்கள் தொடர்பு அலுவலர்) வேலை பாக்குறார். ரொம்பப் பெரிய விஷயம்டா இதெல்லாம்" என்று. உண்மைதான் எனக்கு அதெல்லாம் அப்போ ரொம்பப் பெரிய விஷயம். இப்போவும் எனக்கு அது ரொம்பப் பெரிய விஷயம்.

இப்படி சிவாஜி சாரோட அந்த அன்பினாலும் பண்பினாலும் எனக்கு அவர் மேல இருந்த பிரமிப்பு போய் மரியாதையும் பாசமும் அதிகமாச்சு. முடிந்த பொழுதெல்லாம் போய் பார்ப்பேன் அவரை. அவர் இறந்தபொழுது என்னால் அதைத் தாங்கிக்கவே முடியல. அன்னை இல்லத்தில்

தொடர்ச்சி 18-ம் பக்கம்...




# சொல்லித் தெரிவதே மன்மதக் கலை!

டி.நாராயண ரெட்டி,
செக்ஸாலஜிஸ்ட்

தாம்பத்ய வாழ்க்கையில் கருத்தடைச் சாதனங்கள் அவசியமானவை. உலகத்தின் பெரும் பிரச்னைகளுள் ஒன்று, மக்கள் தொகை அதிகரிப்பு. அதற்கு கருத்தடைச் சாதனங்கள்தான் தீர்வு. 'உலகளவில் ஆசிய, ஆபிரிக்க நாடுகளில்தான் கருத்தடைச் சாதனங்கள் குறைவாகப் பயன்படுத்தப்படுகின்றன' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கான காரணம்பற்றி ஆராய்ந்தபோது, ஆணுறை பயன்படுத்தும்போது அது சிதைந்துவிடுவதாக பலர் கூறியிருக்கிறார்கள்.

ஆணுறை சரியில்லாமல் போவதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. ஒன்று சரியாகப் பயன்படுத்தாதது, இன்னொன்று ஆணுறையில் இருக்கும் தயாரிப்புக் குறைபாடுகள். ஆணுறையில் நுண்ணிய துளைகள் இருக்க வாய்ப்புண்டு.

தாம்பத்யத்தின்போது ஏற்படும் அதிக அழுத்தம் காரணமாக ஆணுறை கிழிந்துபோக வாய்ப்புள்ளது. அப்படிப்பட்ட சூழலில் ஆணுறை சிதைந்து போவதை கவனிக்க முடியாமல் போகும். இத்தகையச் சூழலில் பெண் கர்ப்பமாக அதிக வாய்ப்பு உள்ளது.

'ஆணுறை பயன்படுத்துவதால் முழுமையான தாம்பத்யத்தை அனுபவிக்க முடியவில்லை' என்பது போன்ற சில காரணங்கள் சொல்லப்படுகின்றன. ஆனால், சந்தைகளில் விற்கப்படும் ஆணுறைகள் மிகவும் மெலிதாக, அதிக வழவழப்புத் தன்மையுடன்தான் இருக்கின்றன. இத்தகைய ஆணுறைகளால் தாம்பத்யம் சிறக்கவில்லை என்று சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது.

பொதுவாக, தொடர் தூண்டுதல் இருந்தால்தான் தாம்பத்யம் இனிக்கும். தம்பதிகளுக்கிடையிலான ஸ்பரிசம் குறைந்தால் அது ஆணுக்குச் சலிப்பை ஏற்படுத்திவிடும். நேரடியாகத் தாம்பத்யம் வைத்துக்கொள்ளாமல் வேறு சில வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். அப்போது பெண்ணின் ஒத்துழைப்பு பல வகைகளில் தேவைப்படும். ஆணுறையைப் பயன்படுத்தும்போது, அதன் முனைப் பகுதியை அழுத்திப் பிடித்துக் கொள்வது அவசியம். இப்படிச் செய்வது, அதிலிருக்கும் காற்றை வெளியேற்றிவிடும். தாம்பத்யத்தின் போது ஆணுறை கிழிந்து போகாமலிருக்க உதவும். ஆணுறையில் சிறு துளைகள் ஏதும் இருக்கின்றனவா என்பதைக் கண்டறிய அதில் காற்றை ஊதிப் பரிசோதிக்கலாம்.

ஆணுறை பயன்படுத்தும்போது, அதை மிக கவனமாகக் கையாள வேண்டும். கூர்மையான நகம் அதில்பட்டுகிழிந்துவிட வாய்ப்புள்ளது. அதேபோல், வழவழப்புக்காகக் கடைகளில் விற்கப்படும் பெட்ரோலியம் க்ரீம்களைப் பயன்படுத்தினால், வேதியியல் மாற்றம் ஏற்பட்டு ஆணுறை சேதமடைய வாய்ப்புள்ளது.

தாம்பத்யத்தின்போது இறுதி நிலையை எட்டியதும், மிகக் கவனமாக ஆணுறையின் மேல் பகுதியில் இருக்கும் வளையத்தைப் பிடித்துக் கொண்டு மெதுவாக அகற்ற வேண்டும். தரமான ஆணுறை பயன்படுத்தினால், தாம்பத்யத்தின்போது இன்பம் அதிகரிக்குமே தவிர குறையாது. கருத்தடைச் சாதனங்களை சரியாகவும் முறையாகவும் பயன்படுத்தினால் தாம்பத்யம் ஓர் எல்லையில்லா இன்பமே.

**(இன்னும் கற்றுத் தருகிறேன்...)**


---

17-ம் பக்க தொடர்ச்சி...

நாங்க எல்லோரும் இருக்கோம். என்னை டிவி செய்தியாளர்கள் வந்து சிவாஜி சார் பற்றி கேக்குறாங்க. பேசிக்கொண்டிருக்கும்போதே தாங்கமுடியாமல் அழுதுட்டேன். பேச்சு குழறியது. சுற்றி இருந்தவங்க பயந்துட்டாங்க. என்னை இழுத்து உக்கார வச்சுட்டாங்க. அப்படி ஒரு மனநிலை, சோகம் அப்போது. பின்னாடி பிரபு சாரே சொன்னார், "எங்க குடும்பத்துல இருக்கவங்க எப்படி கலங்கிப் போனாங்களோ, அந்த அளவுக்கு கலங்கிட்டாரு ரமேஷ்கண்ணா"னு.


அவ்வளவு சோகத்துல சிவாஜி சார் உடலை பெசன்ட்நகர் மயானத்துக்குக் கொண்டு போறோம். ரஜினி, கமல்... இப்படி முக்கியமானவர்கள் நெருக்கமானவர்கள் எல்லோரும் சிவாஜி சார் இருந்த வண்டியில் வர்றாங்க. மீதி நடிகர்கள் எல்லோரும் ஒரு லாரி, நடிகைகள் எல்லோரும் ஒரு லாரி. நான், சேரன், வடிவேலு இப்படி பல நடிகர்கள் லாரியில் இருந்தோம். லாரி மெல்ல நகர்ந்துச்சு. லாரிக்குப் பின்னாடியே ஒருத்தர் வந்தார். லாரியை விட அவர் அதிகமா அசைஞ்சு குலுங்கி வந்தார். சிவாஜி சார் மரணம் அவரையும் பாதிச்சுருக்கும்போல... ஃபுல்லா குடிச்சிருந்தார்.





எங்க லாரிக்குப் பின்னாடியே வந்தவர் திடீர்னு எங்களைப் பார்த்து, "டேய்... உங்களுக்கெல்லாம் வெக்கமாவே இல்லையா?"னு கேட்டார். எங்களுக்கு ஒன்னும் புரியல. "நீங்கெல்லாம் நடிகனாடா டேய், அவரு நடிகருடா" என்றார். அவர் பேசிய தோரணை, போட்ட ஆட்டம்லாம் பார்த்து சிரிப்பு வந்தாலும் 'உண்மையதான சொல்றாரு'ன்னு அமைதியா இருந்தோம். அந்த ஆள் விடல. பின்னாடியேவந்து, "ஏண்டா அப்பேர்ப்பட்ட நடிகரே போய்ட்டாரு, நீங்கெல்லாம் எதுக்குடா. நீயெல்லாம் நடிகனாடா டேய்..."ன்னு விடாம கேட்டுகிட்டே வராரு. பொதுமக்களும் பாக்குறாங்க, எங்களுக்கு சிரிப்பை அடக்க முடியல, சிரிக்க ஆரம்பிச்சுட்டோம்.

அந்த ஆள் விடாம பெசன்ட் நகர் வரைக்கும் கூடவே வர்ராரு. எங்களை டிவியில் வேற காட்டுறாங்க. அதைப் பார்த்தவங்க ஃபோன் பண்ணி திட்டுனாங்க, "என்னடா சிவாஜி சார் சாவுல அப்படி சிரிக்கிறீங்க?"ன்னு. அவுங்களுக்கு என்ன தெரியும், அங்க நடந்த கூத்து? எல்லோருக்கும் சோகம்தான் சோதனையா வரும். எங்களுக்குப் பாருங்க, சிரிப்பே சோதனையா வந்துச்சு. என்ன ஒரு வேடிக்கை? அதுமாதிரி, அதுக்கு கொஞ்சம் முன்னாடிதான் நான் அதீத சோகத்துல அழுதுக்கிட்டு இருந்தேன், வாழ்க்கை கொஞ்ச நேரத்துலயே, கொஞ்சமும் எதிர்பார்க்காத ஒருவர் மூலமா என்னை சிரிக்கவச்சது. இதுதான் வாழ்க்கை... இல்ல? இப்போ அழுதா அதுவே நிரந்தரம்ன்னு நினைக்காதீங்க, அடுத்த நொடியே கூட வாழ்க்கை உங்களை சிரிக்கவைக்கலாம். (தொடரும்)




சி.சரவணன்

ஆயிரம் வரிகளில் சொல்ல நினைக்கும் விஷயத்தை அரை நிமிடத்தில் நமக்குப் புரிய வைத்துவிடுபவைதான் விளம்பரங்கள். அப்படியொரு அருமையான விளம்பரத்தை சில ஆண்டுகளுக்கு முன்பு வெளியிட்டது பிர்லா சன் லைஃப் மியூச்சுவல் ஃபண்ட் நிறுவனம்.

அந்த விளம்பரத்தில், பிஸ்னஸ்காரர் ஒருவர் தன்னுடைய அலுவலகத்தில் இருந்து குறட்டைச் சத்தம் வருவதைக் கேட்பார். அலுவலகத்தில் யாரும் தூங்காதபோது எப்படி அந்த குறட்டைச் சத்தம் வருகிறது என்று தேடித் தேடிப் பார்ப்பார். கடைசியில், அந்த குறட்டைச் சத்தம் இரும்புப் பெட்டியில் இருந்து வருவதைக் கண்டுபிடித்து, அதன் கதவைத் திறக்க, இரும்புப் பெட்டிக்குள் கட்டுக் கட்டாக பணம் தூங்கிக் கொண்டிருக்கும். தூங்கும் அந்தப் பணத்தைத் தொட்டவுடன் குறட்டைச் சத்தம் அடங்கிவிடும். 'பயன்படுத்தப் படாமல் பீரோவுக்குள் தூங்கும் பணத்தினால் எந்தப் பயனும் இல்லை. எனவே, அந்தப் பணத்தை எடுத்து பயன்படுத்துங்கள்' என்கிற கருத்தைச் சொல்லவே இந்த விளம்பரம்.

நம் வீடுகளில்கூட இது மாதிரியான குறட்டைச் சத்தம் வந்து கொண்டிருக்கும். ஆட்சியாளர்களிற்குத்தான் கேட்காது. காரணம் திறைசேரியில் பணமில்லையென்று அவ்ர்களே கூறிவிட்டார்கள். சரி, வீட்டில் குறட்டை விட்டு தூங்கிக் கொண்டிருக்கும் பணத்தையும், எதிர்காலத்திலும் தொடர்ந்தும் தூங்கத்தான் செய்யப் போகிறோமா?

நிச்சயம் கூடாது என்பதைச் சொல்லவே இந்தத் தொடர். பணம் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதற்காக பீரோவில் பூட்டி வைப்பதைவிட, அதை எப்படி புத்திசாலித்தனமாக நிர்வாகம் செய்யலாம் என்பதைச் சொல்லவே இந்தத் தொடர்.

பணத்தை எப்படி நிர்வாகம் செய்வது என்று நமக்கு சரியாகத் தெரியாததால்தான், அதைக் கண்டபடி செலவு செய்கிறோம். பாதுகாப்பு என்று நினைத்து எஃப்.டியில் அடைத்து வைக்கிறோம். டபுள் ஆகும், ட்ரிபிள் ஆகும் என்று நம்பி, மோசடித் திட்டங்களில் போட்டு, மோசம் போகிறோம். பங்குச் சந்தையின் அடிப்படைகளை புரிந்துகொள்ளாமல், அதில் பணத்தைப் போட்டு விட்டு, பிற்பாடு அது ஒரு சூதாட்டம் என்று புலம்புகிறோம். தவறை நம்மிடம் வைத்துக்கொண்டு, பிறரைப் பழி சொல்லி என்ன பிரயோஜனம்?

நல்லூரைச் சேர்ந்தவர் செந்தூரன். நண்பரின் ஆலோசனையின் பேரில், பங்கு ஒன்றில் ரூ.10 லட்சம் முதலீடு செய்தார். அவர் முதலீடு செய்த நேரம், சர்வதேச சூழ்நிலை காரணமாக சந்தை இறங்கியது. அவர் முதலீடு செய்த தொகையும் குறைந்தது. 'அய்யய்யோ, பணம் போச்சே!' என்று பதறிப் போய் அத்தனை பங்குகளையும் விற்றார். சில மாதங்களில் சந்தை உயர்ந்து, அவர் முதலீடு செய்ததைவிட 20% லாபம் கிடைத்தது. பங்கு முதலீடு நீண்ட காலத்துக்கானது. குறுகிய காலத்தில் அதில் அதிக ஏற்ற இறக்கம் இருக்கும் என்பதை அவர் அறியாததால் வந்த நஷ்டம்தானே இது?

வேலைக்குச் சேர்ந்த புதிதில் மியூச்சுவல் ஃபண்டில் முதலீடு செய்ய விரும்பினார் சுமதி. தன் உயர் அதிகாரி ஜெனிபர் முதலீடு செய்திருந்த ஃபண்ட் ஒன்றில் முதலீடு செய்தார். ஓராண்டு கழித்து அவசரத் தேவைக்கு அந்த ஃபண்ட் யூனிட்களை விற்கப் போனால், 'மூன்று ஆண்டுகள் விற்க முடியாது' என்றார்கள். அது வருமான வரிச் சலுகை அளிக்கும் ஃபண்ட் என்பது அப்போதுதான் சுமதிக்கு புரிந்தது. அவரின் உயர் அதிகாரிக்கு வருமானம் அதிகம். அவர் வரிச்சலுகை பெற அந்த ஃபண்டில் முதலீடு செய்திருந்தார். ஆனால், சுமதிக்கு சம்பளம் குறைவு. அவர் அந்த ஃபண்டில் முதலீடு செய்ய வேண்டிய அவசியமே இல்லை.

வட்டுக்கோட்டையை சேர்ந்த சேர்ந்த சரவணன் இன்ஷூரன்ஸ் பொலிசி ஒன்றை எடுத்தார். பொலிசி எடுத்து, ஐந்தாறு ஆண்டுகள் கழித்து, திடீரென அவர் இறந்ததால், 5 லட்ச ரூபாய் அவர் குடும்பத்துக்கு இழப்பீடாகக் கிடைத்தது. அதை வங்கி எஃப்.டியில் போட்டு, அதன் மூலம் வட்டியாகக் கிடைத்த ரூ.5 ஆயிரத்தை வைத்து, சரவணனின் மனைவி வீட்டு செலவை பார்ப்பாரா?, குழந்தைகளைப் படிக்க வைப்பாரா?


நம்மில்பலர் கஷ்டப்பட்டு உழைத்தும் போதிய பலனை அனுபவிக்க முடியாமல் போகக் காரணம், பணத்தை எப்படி நிர்வாகம் செய்வது என்பது நமக்குத் தெரியாமல் போனதே. அதனால்தான் நாம் ஏழைகளாகவே இருக்கிறோம். பணத்தை நாம் சரியாக நிர்வாகம் செய்யத் தெரிந்துகொண்டு விட்டால், நம் வளர்ச்சிக்காக நாம் மட்டும் உழைக்கத் தேவையில்லை; நம் பணமும் நம் வளர்ச்சிக்காக உழைக்கும். நம் பணத்தை நமக்காக எப்படி உழைக்க வைப்பது என்பதற்கான சூட்சமங்களை இனி பார்ப்போம்.

*(பணம் பெருகும்)*




▶ மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்குடா தேர்தல் தொகுதிக்கான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பெண்கள் அமைப்பு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பெண்கள் அமைப்பு செயலாளர் சந்திரிகா டி சொய்சா, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கொழும்பு மாநகர சபை உறுப்பினரும் மேல் மாகாண முதலமைச்சரின் ஒருங்கிணைப்புச் செயலாளருமான உமாச்சந்திரா பிரகாஷ், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் சதீஷ், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி கல்குடா தொகுதி அமைப்பாளர் டி எம் சந்திரபால மற்றும் பெருந்திரளான பெண்கள் கலந்து கொண்டனர்.

# எண்ணெய் விலை உயர்வைச் சாடும் டிரம்ப்



ஒரு பக்கம் அமெரிக்கா உலகின் வெவ்வேறு நாடுகள் மீது விதித்துவரும் வர்த்தக வரிகளும், இன்னொரு பக்கம் ஈரானின் பெற்றோலை எவரும் கொள்வனவு செய்யலாகாது என்று அமெரிக்கா இட்டிருக்கும் கட்டுப்பாடும் சேர்ந்து சமீப மாதங்களில் எண்ணெய் விலையைச் சர்வதேசச் சந்தையில் உயரவைத்திருக்கின்றன. இதன் காரணம் சவூதி அரேபியா ஒபெக் அமைப்பு நாடுகளைத் தேவையான அளவு எண்ணெய் உறிஞ்சத் தடைகள் போட்டு வருவதே என்று சாடுகிறார் டொனால்ட் டிரம்ப்.

"சவூதி அரேபியா, ஜப்பான், தென் கொரியா போன்ற நாடுகளின் இராணுவங்களுக்கு அமெரிக்கா

## உலக யன்னல்

தேசமித்ரன்

மான்யங்கள் கொடுத்து வருகிறோம். சவூதி அரேபியாவோ எங்களுடைய அத்தியாவசியத் தேவையான எண்ணெயைத் தேவையான அளவு சர்வதேசச் சந்தைக்கு வரவிடாமல் தடுத்து விலையை உயரவைத்துக்கொண்டிருக்கிறது," என்று . பகிரங்கமாகக் குற்றஞ் சாட்டியிருக்கும் டிரம்ப் அதைப் பற்றி சவூதிய அரசன் சல்மானுடன் தொலைபேசியில் கதைத்ததாகவும், ஒபெக் நாடுகளின் எண்ணெய் உறிஞ்சலை அதிகரித்து உலகத் தேவைக்கான எண்ணெயைச் சந்தையில் கொண்டுவந்து விலையைக் குறைக்கும்படி டிரம்ப் வலியுறுத்தியதாகவும் சவூதியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

"எங்கள் உதவிகளைப் பெறும் நாடுகள் எங்களுக்கு அதற்கான செலவைக் கொடுக்கவேண்டும். இவை பணக்கார நாடுகளாகவும் இருக்கின்றன. ஆனால், அதைப் பற்றிய கேள்விகளை எவரும் எடுக்காததால் பல ஆண்டுகளாகவே இந்த நிலை தொடர்கிறது," என்று அமெரிக்காவின் இராணுவ உதவிகளைப் . பெறும் நாடுகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார் டிரம்ப்.

ஜப்பானிலும், தென் கொரியாவிலும் பத்தாயிரக்கணக்கான அமெரிக்க இராணுவத்தினர் தளங்களில் இருக்கிறார்கள். ஜப்பான், சவூதி அரேபியா ஆகிய நாடுகளுக்கான இராணுவத் தளபாடங்களை அமெரிக்காவே விற்பனை செய்கிறது. அத்துடன் அந்த நாடுகளுக்காகக் கண்காணிப்புகளையும் செய்து வருகிறது. தென் கொரியாவின் 60 விகிதமான இராணுவச் செலவை அமெரிக்காவே கொடுக்கிறது என்கிறார் டிரம்ப்.

நாட்டோ அமைப்புக்கான பெரு மளவு செலவையும் ஐரோப்பிய இராணுவப் பாதுகாப்புக்கான பெரு மளவு செலவையும் கூட அமெரிக்காவேதான் நீண்ட காலமாகச் செய்து வருகிறது என்று டிரம்ப் ஏற்கனவே ஐரோப்பிய ஒன்றியத்துடன் கோபத்தைக் காட்டியிருக்கிறார். அதனால், ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் சமீப காலத்தில் தங்களது பாதுகாப்புக்காக ஒரு ஐரோப்பிய பாதுகாப்பு அமைப்பைத் தங்கள் பொறுப்பிலேயே உருவாக்குவது பற்றிய திட்டத்தில் தீவிரமாக இறங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

# துருக்கிய லிராவும் சுற்றுலாப் பயணிகளும்

அமெரிக்க பாதிரியார் ஒருவரைத் தேசத் துரோகக் குற்றத்தில் ஈடுபட்டதாகக் குற்றஞ் சாட்டித் துருக்கிய அரசு வீட்டுப் பாதுகாப்பில் வைத்திருப்பதன் விளைவாக அமெரிக்காவுக்கும் துருக்கிக்கும் ஏற்பட்டிருக்கும் அரசியல் இழுபறியினால் துருக்கியின் லிரா இவ்வருட ஆரம்பத்திலிருந்து சுமார் 40 விகித மதிப்பை இழந்திருப்பது தெரிந்ததே.

மலிவான துருக்கிய லிரா வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதால் துருக்கியில் தங்களது விடுமுறையை அனுபவிக்கப் பல நாட்டினரும் வருவது வெகுவாக அதிகரித்திருக்கிறது. இவ்வருட ஆரம்பத்திலிருந்து எட்டு மாதங்களில் சுமார் 27 மில்லியன் வெளிநாட்டுப் பயணிகள் துருக்கிக்கு வந்திருப்பதாக நாட்டின் சுற்றுலா, கலாச்சாரத் திணைக்களம் தெரிவிக்கிறது. 2016 ம் ஆண்டு முழுவது துருக்கிக்கு வந்த வெளிநாட்டுப் பயணிகள் தொகை 25.3 மில்லியன் பேர்களாகும்.

கடந்த ஆண்டு இதே காலப் பகுதியில் துருக்கிக்கு வந்த சுற்றுலாப் பயணிகளுடன் ஒப்பிடும்போது இத்தொகை சுமார் 23 விகிதத்தால் அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. 4.18 மில்லியன் பேர்களால், அவர்களில் முதலிடத்தை வகிப்பவர்கள் ரஷ்யர்கள்.. அதையடுத்து ஜேர்மனியினரும், பிரிட்டர்களும் முக்கிய பயணிகளாக இருக்கிறார்கள்.

அதே சமயம் துருக்கிய லிராவின் மதிப்பு வீழ்ச்சியின் இன்னொரு பக்க விளைவாக துருக்கிய ஹோட்டல்கள் பலவும் தங்கள் வாடகைகளை எவ்ரோவில் நிர்ணயம் செய்கின்றன. அதற்கு ஏதுவாக 80 விகிதமான தங்கள் ஹோட்டல் அறைகளை வெளிநாட்டுச் சுற்றுப் பிரயாணிகளுக்கு ஒதுக்கிவிடுகின்றன. இதுவரை சுமார் 30 35 விகிதமான அறைகள் துருக்கர்களுக்காக ஒதுக்கப்பட்டு வந்தது.

ஸ்திரமில்லாத துருக்கிய லிராவுடன் வரும் உள்நாட்டுச் சுற்றுலாப் , பயணிகளைத் தவிர்க்க ஹோட்டல்கள் செய்திருக்கும் இந்த நடவடிக்கையினால் துருக்கர்கள் 40 விகிதம் அதிக விலையிலேயே அறைகளைப் பெற முடிகிறது என்று துருக்கியச் சுற்றுலா நிர்வாகிகளின் அமைப்புத் தெரிவிக்கிறது. 2019 ம் ஆண்டிலும் இதே நிலையே தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




# செல்வந்தர்களைக் கவர்ந்திழுக்கும் எமிரேட்ஸ்

கோடீஸ்வரர்கள் என்ற பதத்தைத் விட High net worth individual அதாவது "நிகர மதிப்புள்ள சொத்துக்களை அதிகம் கொண்டவர்" (HNWI)என்ற சொல் உலகச் செல்வந்தர்களில் தங்கள் சொத்துக்களை அதிகளவில் எப்போதும் பாவிக்கக்கூடிய நிலையில் கொண்டவர்களை குறிப்பிடப் பாவிக்கப்படுகிறது. இப்படியான செல்வந்தர்களின் சொத்துக்கள் எந்த முதலீடுகளிலும் தங்கியிராமல் நிகர மதிப்பாக இருக்கின்றன.

உலகில் இப்படியான செல்வந்தர்களை அதிகம் கொண்ட நாடாக் இருப்பது ஐக்கிய அமெரிக்கா. சுமார் 5.30 மில்லியன் பேர் இப்படியான நிகர சொத்துக்களை அதிகமாகக் கொண்டவர்கள் வசிக்கிறார்கள். அதையடுத்து ஜப்பான், ஜேர்மனி, சீனா ஆகிய நாடுகளில் அமெரிக்காவை அடுத்ததாக இப்படியான நிகரச் சொத்துச் செல்வந்தர்கள் இருக்கிறார்கள். வெகு வேகமாக அந்த வழியில் செல்வந்தர்களாகிக் கொண்டிருப்பவர்கள் இந்தியர்கள் என்று குறிப்பிடப்படுகிறது. அங்கே தங்கள் சொத்துக்களின் நிகர மதிப்பை அதிகரித்துக்கொண்டிருப்பவர்களின் தொகை கடந்த வருடத்தில் 20 விகிதத்தால் அதிகரித்திருக்கிறது.

இவ்வரிசையில் குறிப்பிடக்கூடிய இன்னொரு நாடு எமிரேட்ஸ். மத்திய கிழக்கு நாடுகளில் மிக அதிகமான நிகர சொத்துக்களின் மதிப்பில் செல்வந்தர்கள் எமிரேட்ஸில் வாழ்கிறார்கள். இப்படியான 88, 700 செல்வந்தர்களைக் கொண்ட எமிரேட்ஸ் உலக ரீதியில் 26 வது இடத்தை எட்டியிருக்கிறது. சுமார் 470 பில்லியன் டொலர்களைத் தங்கள் நிகரச் சொத்தாகச் சேர்த்து வைத்திருக்கும் அவர்கள் எமிரேட்ஸ் நாட்டில் வாழுபவர்களில் 50 விகிதமான நிகரச் சொத்து மதிப்பை விட அதிக செல்வத்தைக் கொண்டிருக்கிறார்கள்.

எமிரேட்ஸில் வாழ்பவர்களின் நிகரச் சொத்துக்களின் மதிப்பு சுமார் 925 பில்லியன் டொலர்கள் என்று மதிப்பிடப்படுகிறது. இதனால் நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, இஸ்ராயேல், துருக்கி மற்றும் போர்த்துக்கல் நாடுகளை விட எமிரேட்ஸ் நாட்டினர் அதிக நிகர மதிப்புள்ள சொத்துக்களைக் கொண்டவர்களாகியிருக்கிறார்கள்.

எமிரேட்ஸ் நாட்டில் வாழ்பவர்கள் இப்படியாக அதிக நிகர சொத்துக்களின் சொந்தக்காரர்களாக மாறியிருப்பதன் காரணம் வெளிநாட்டிலிருக்கும் பெரும் செல்வந்தர்களைக் குடிமக்களாக்கிக் கொள்ள எமிரேட்ஸ் எடுத்துவரும் முயற்சிகளே ஆகும். கடந்த 20 வருடங்களில் இந்தியா, சவூதி அரேபியா, துருக்கி, எகிப்து, லெபனான், நைஜீரியா, ஈரான் போன்ற நாடுகளிலிருக்கும் மிகவும் பணக்காரர்களை எமிரேட்ஸ் ஈர்த்துத் தங்களது குடிமக்களாக்கியிருக்கிறது.



# தேசவழமையின் கீழ் பெண்கள்

இன்று பலர் மனைவியரை, மனைவி என்று அழைப்பதை விடுத்து, துணைவி, இணையர் என்றே கூறுகின்றனர். காரணம், மனைவி என்பது மனையை ஆளுபவள் என்றே பொருள். ஆனால் ஒரு மனையை மட்டும் ஆளுவதில்லை பெண்.

சியா

இலங்கை ஒரு கலப்பு சட்ட முறைமையை கொண்ட நாடாகும். இங்கு பொதுச்சட்டத்தையும் கடந்து தேசவழமை சட்டம், கண்டிய சட்டம், முஸ்லிம் சட்டம் என்று மூன்று பிரிவுகள் உள்ளன. இந்த மூன்று சட்டங்களுமே அந்தந்த சமூகங்களுக்கே ஏற்ற பிரத்தியேக உரிமைகளை கொண்டமைந்தவையாகும்.

அந்தவகையில், தேசவழமை சட்டம் என்பது வடக்கு மாநில மக்களை ஆளுகின்ற சட்டமுறைமை ஆகும்.

இது குறிப்பாக மலபார் வழிவந்த யாழ்ப்பாணத்துவாசிகளின் மரபுகள், தேவைகளுக்கு ஏற்ப அமைக்கப்பட்ட சட்டமாகும்.

இந்த தேசவழமையானது மன்னர் காலம் முதலே யாழ்பாணம் உள்ளிட்ட வட பகுதிகளில் பேணப்பட்டு வந்த மரபுகள், கலாசாரங்கள் மற்றும் நடைமுறைகளை பின்பற்றி அமையப்பெற்ற சட்டமாகும்.

எனவே தான் தேசவழமை மன்னர் ஆட்சி காலம் தொட்டு இருந்து வரும் சட்டம் என கூறிக் கொள்கிறோம்.

இலங்கையை டச்சுக்காரர் ஆட்சி செய்த காலமான 1704 இல், யாழ்ப்பாணத்தில்வாழ்ந்ததமிழர்களின் வழக்காறுகள் பற்றி விசாரணை செய்து அவற்றை தொகுக்குமாறு, அப்போதைய டச்சு ஆளுநராக இருந்த சைமன்ஸ் என்பவர் யாழ்ப்பாணத்து பட்டினத்தின் திசாவையாக இருந்த கிளாஸ் ஐசாக்ஸ் என்பவருரிடம் கட்டளையிடுகின்றார்.

இதையடுத்து கிளாஸ் ஐசாக்ஸ என்பவர் அனைத்து வழக்காறுகளையும் ஒன்று திரட்டி ஒரு ஆவணமாக சமர்ப்பித்தார். இவ்வாறு தொகுக்கப்பட்ட ஆவணம் பின்னர் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.

எனினும் குறித்த ஆவணத்தில் அனைத்து விடயங்களும் சரியாக உள்ளனவா என்பதை அறிவதற்காக அவை யாழ்ப்பாணத்தின் 12 முதலியார்மாரிடம் ஒப்படைக்கப் படுகிறது. ஆவணங்கள் சரியாக உள்ளன என்று முதலியார்மார் ஒப்புக் கொள்ள, அவை 1708 ஆம் ஆண்டில் சட்டமாக்கப்பட்டது.

இதேபோன்று, யாழ்ப்பாண மக்களின் வழக்காறுகள் தேசவழமையில் முழுவலுவில் இருப்பதாக கருதப்பட வேண்டும் என்று, 1806 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க ஒழுக்க விதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு மக்களின் எல்லா பிரச்சினைகளும் தேசவழமையில் சொல்லப் பட்ட வழக்காறுகழுக்கு இணங்கவே தீர்க்கப்பட வேண்டுமென்றும் இந்த ஒழுங்குவிதியில் கூறப்பட்டுள்ளது.

மேலும் இத் தேசவழமை சட்டமானது 1814 ஆம் ஆண்டில் அப்போதைய பிரதம நீதியசராக இருந்த அலெக்சாண்டர் ஜோன்சன் என்பவரால் ஆங்கிலத்திற்கு மொழி பெயர்க்கப்படுட்டது. எனவே முதன் முதலில் டச்சு மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட தேசவழமை சட்டமானது பின்னர் தமிழ் மொழியிலும் அதன் பின்னர் ஆங்கில மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டு இன்றும் யாழ்ப்பாண மக்களை ஆளும் சட்டமாக திகழ்கிறது.

எனினும் தேசவழமை சட்டமானது கடந்த 1869 மற்றும 1911, 1941 ஆகிய காலப்பகுதிகளில் சில திருத்தங்களுக்கு உள்ளானது என்பதும் குறிப்பிட வேண்டிய விடயம்.

இவ்வாறு மலபார் எனப்படும் யாழ்ப்பாண மக்களை ஆளும் தேசவழமை சட்டமானது பெண்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவம் குறித்து அலசுவதே இந்த கட்டுரையின் நோக்கம்.

தேசவழமையை பொறுத்தமட்டில் சொத்துடமை என்பது மிக முக்கியமான பகுதி.

இந்த சொத்துடமை மூன்று பிரிவுகளாக உள்ளது. அவையாவன முதுசம், சீதனம், தேடிய தோட்டம் என்பதாகும்.

இதில் முதுசம் எனப்படுவது கணவர் வழி வந்த சொத்துக்கள். அதாவது ஒரு திருமணம் செய்யும் ஆணுக்கு அவருடைய குடும்பம் சார்பில் (தாய், தந்தை, சகோதரர்கள், உறவுகள்) வழங்கப்படும் சொத்துக்கள் என்பதாகும்.

அதே போன்று சீதனம் எனப்படுவது தாய் வழி வந்த (திருமணத்தின் போது பெண்வீட்டாரால் வழங்கப்படுவது) சொத்துக்களாகும்.

இவ்வாறே தேடிய தோட்டம் எனப்படுவது கணவர் மற்றும் மனைவி ஆகிய இருவரும் சேர்ந்து தமது திருமண வாழ்வியல் காலத்தில் தேடிக்கொள்ளும் சொத்துக்கள் ஆகும்.

இதில் கணவர் தேடுபவை அவருடைய சொத்தாகவும் மனைவி தேடியவை அவருக்கே உரிய சொத்தாகவும் பிரிவு படுத்தியே பார்க்கப்படுகிறது.

இவ்வாறுஇருக்கும்சொத்துப்பிரிவில் ஒரு குடும்பத்தின் புதல்வி சீதன சொத்துக்களையும் புதல்வன் முதுசன சொத்துக்களையும் அனுபவிக்க முடியும்.

இவ்விடத்தில் தேடிய தோட்டம் என்பது இரு சார் பிள்ளைகளுக்கும் (ஆண் பெண் பிள்ளைகள்) பிரித்து கொடுக்கப்பட வேண்டும்.

இந்நிலையில் கணவரை இழந்து பெண் (விதவை) மறுமணம் செய்யுமிடத்து அவருடைய சீதன சொத்துக்கள், இரு திருமண வாழ்விலும் புதல்வியர் இருப்பின் அவர்களுக்கே பிரித்து கொடுக்கப்பட வேண்டும்.

இதேவேளை, மனைவியை இழந்த கணவர் மறுமணம் செய்யும் போது, தன் இறந்த மனைவியின் சீதன சொத்தை அம் மனைவியின் பெண் பிள்ளைகளுக்கும், தன் முதுசன சொத்தை அம் மனைவியின் ஆண் பிள்ளைகளுக்கும் வழங்குவதோடு, தேடிய தோட்டத்தை அம் மனைவியின் எல்லா பிள்ளைகளுக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும்.

இப்படியான நிலையில், ஒரு தம்பதிகளுக்கிடையில் விவாகரத்து ஏற்படுகின்றதெனில் பெண் வீட்டாரால் வழங்கப்பட்ட சீதன சொத்துக்கள் அனைத்தும் பெண்ணிற்கே உரிமை ஆகின்றது.

அதேபோன்று, தேடிய தோட்டத்தில் 50 வீதமானவற்றை குறித்த ஆண் பெண்ணிற்கு வழங்க வேண்டும்.

அவ்வாறே பெண்ணின் சீதனத்தில் ஆண் செலவு செய்திருப்பின் அந்த தொகையும் பெண்ணிற்கு வழங்கப்பட வேண்டும்.

இப்படிப்பட்ட நிலையில் தேசவழமை சட்டமானது பெண்களுக்கு முழு பாதுகாப்பையும் வழங்குகிறது, இந்த சட்டம் பெண்களின் சமத்துவத்தையும், அவர்களின் முழு உரித்துக்களையும் பேணுகிறது என நினைத்தால் அது தவறு.

தேசவழமை சட்டமானது, பெண்கள் சுயமாக செயற்படுவதில் சில முட்டுக்கட்டைகளை போடாமலும் இல்லை.

கணவனால் உழைத்துச் சேர்க்கப் பட்டதாகக் கருதப்படும் சொத்தில் மனையாளின் உழைப்பையும் அடையாளம் கண்டு அங்கீகாரம் வழங்கிய இச்சட்டம், பெண்களுக்கு தமக்கெனத் தனியாகச் சொத்தை பேண வேண்டும், அவர்கள் தனிமைப்படுத்தும் போது அவர்களது சீதனம் அவர்களுக்குப் பாதுகாப்பளிக்குமென ஏற்றுக் கொண்ட இச்சட்டம், பெண்களாலும் சரியான தீர்மானங்களையும் சரியாக முதலீடுகளையும் செய்வதற்கான திறமை உண்டென்பதை உதாசீனப் படுத்தியுள்ளதாகவே காணமுடிகிறது.

சீதனச் சொத்தானது மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்படும். பணம், நகை, காணி வீடு என்பனவாகும்.

பணம், நகை என்பவற்றைப் பிரயோகிக்கவோ, விற்கவோ அடகு வைக்கவோ பெண்ணுக்கு எல்லா உரிமையும் உண்டு.

ஆனால் வீட்டையோ காணியையோ விற்கவோ அடகு வைக்கவோ

தொடர்ச்சி 24-ம் பக்கம்...

# காரைநகரில் ஒரு சிக்கல்!

எஸ்.நிதர்சன்

காரைநகரில் நட்சத்திர விடுதியொன்றை அமைப்பதற்கு அனுமதி வழங்கியிருக்கின்ற பிரதேசசபை அதற்கு அருகாமையில் சிவன் சிலையை அமைப்பதற்கு அனுமதியை வழங்காததால் காரைநகரில் பெரும் சர்ச்சையொன்று ஏற்பட்டுள்ளது.

மேற்படி விடுதி அமைப்பதற்கு பிரதேசசபை சுற்றுலா மையம், உள்ளிட்ட உரிய சில தரப்புக்கள் அனுமதி வழங்கியுள்ள நிலையில் சுகாதார வைத்திய அதிகாரி அனுமதி வழங்குவதற்கு மறுப்புத் தெரிவித்திருக்கிறார். எனினும் பிரதேசசபைத் தவிசாளரின் தற்துணிவான அனுமதியுடன் விடுதி அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

இதேவேளை அந்த விடுதிக்கு நேர் எதிர்த் திசையில் இருக்கின்ற இடமொன்றில் சிவன் சிலையை அமைப்பதற்கு கடந்த 2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட வேலைகள் மீண்டும் தொடங்கப்பட்ட நிலையில் பிரதேசசபை அந்த வேலைகளைத் தடுத்து நிறுத்தியுள்ளது.





இதனடிப்படையில் குறித்த காணியில் சிவன் சிலையை அமைப்பதற்கு; கடந்த 2016 ஆம் ஆண்டு காரைநகர் பிரதேச சபையிடம் அனுமதி கோரியதாக சைவமகா சபை கூறுகின்றது. அந்த விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்ட காரைநகர் பிரதேசசபைச் செயலாளர் அதற்கான அனுமதியை வழங்குவதாக கூறிய உறுதிமொழியையடுத்து அதற்கான அடிக்கல் நாட்டப்பட்டதாக சைவமகாசபை தெரிவிக்கின்றது.

ஆயினும் சில வாரங்களின் அதற்கான அனுமதியை வழங்க பிரதேச சபை மறுப்புத் தெரிவித்திருந்தது. ஆனாலும் அதற்கான அனுமதியை வழங்குமாறு சைவ மகாசபை தொடர்ச்சியாக கோரிக்கையை முன்வைத்து வந்தது. இந் நிலையில் இந்த மாத ஆரம்பத்தில் குறித்த சிவன் சிலை அமைப்பதற்கு எதிர்ப் பக்கமாக புதிய விடுதியொன்றை அமைப்பதற்கு அந்தப் பிரதேசத்தைச் சேரந்த ஒருவர் முயற்சிகளை முன்னெடுத்திருந்தார்.

இதேவேளை சுகாதார வை;திய அதிகாரியின் அனுமதியின்றி விடுதி அமைப்பதற்கான வேலைகள் முன்னெடுக்கப்படுகின்ற அதே வேளையில் காரைநகர் சைவ மகாசபையினரும் சிவன் சிலையை ஆரம்பிப்தற்கான முயற்சிகளில் ஈடுட்டு அதற்கான வேலைகளையும் ஆரம்பித்திருந்தனர். குறிப்பாக கனரக இயந்திரம் மூலம் அந்த சிலை அமைக்கும் இடம் துப்பரவு செய்யப்பட்டது.

இதன் போது அந்த இடத்திற்குச் சென்ற காரைநகர் பிரதேச சபையின் உப தவிசாளர் அங்கிருந்த காரைநகர் பிரதேசசபை உறுப்பினர் ஒருவரிடமும் அங்கிருந்த வேலையாட்களிடமும் இந்தப் பணிகளை முன்னெடுக்க வேண்டாம் என்றும் அதனை உடனடியாக நிறுத்துமாறும் கூறியிருந்தார். அதற்கு அங்கு நின்றிருந்தவர்கள் என்ன காரணமென்று கோரிய போது அனுமதி பெறப்படாமல் வேலைகள் நடைபெறுவதால் அதனைத் தொடர்ந்தும் முன்னெடுக்க முடியாதென்றும் ஆகவே உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் கூறியிருந்தார்.

இதே வேளை கடந்த சில தினங்களிற்கு முன்னர் காரைநகரில் ஜனாதிபதியின் உத்தியோகபுர்வ மக்கள் சேவையை ஆரம்பித்து வைப்பதற்காக வருகை தந்த உள்ளாநட்டலுவல்கள் அமைச்சர் அபேயவர்த்தன மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களையும் அரச அதிகாரிகளையும் குறித்த விடுதி அமைக்கும் இடத்திற்கு பிரதேச சபையினரும் அந்த விடுதியை அமைக்கின்றவர்களும் அழைத்துச் சென்றுள்ளனர்.

அங்கு அவர்களுக்கு மாலை அணிவித்து விடுதி அமையவுள்ள இடத்தையும் காண்பித்துள்ளனர். இந்த நடவடிக்கையானது விடுதிக்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்கான முயற்சியாக இருக்குமென்றும் அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் அந்த இடத்தில் கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் குறித்த இடத்தில் விடுதி அமைக்கப்படுமாயின் இங்குள்ள மக்களின் கருத்துக்களைக் கேட்டு அதன் பின்னரே அமைக்கப்பட வேண்டுமென்று கூறியிருந்தார்.

இந்த இரு விடயங்களும் பிரதேசசபையால் நேர் எதிர்த் திசையில் பார்க்கப்பட்டதால் காரைநகரில் பெரும் சர்ச்சையொன்று ஏற்பட்டிருக்கின்றது. குறித்த சிவன் சிலை அமைப்பதற்கு 2016 ஆம் ஆண்டு மார்கழி மாதம் அடிக்கல் நாட்டப்பட்டதாக காரைநகர் சைவ மகாசபை தெரிவித்திருக்கின்றது.

நூற்றாண்டு காலம் பழமைவாய்ந்த காரைநகர் சைவமகாசபை காரைநகர் நுழைவாயிலில் சிவன் சிலையொன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்திருந்தது. இதற்கு காரைநகரிலுள்ள செல்வந்தர்கள் மற்றுமுவர்த்தகர்கள் உட்பட பல தரப்புக்களுடனும் சந்திப்புக்களை ஏற்படுத்தி இந்தச் சிவன் சிலையை அமைக்க நடவடிக்கை எடுத்தது.

அந்த முயற்சிகளின் தொடராக விடுதி ஆரம்ப வேலைகளில் ஈடுபட்டிருந்தார். ஆனால் அந்த விடுதி அமைப்பதற்கு அவர் சில தரப்புக்களிடம் அனுமதியைப் பெற்றிருந்தாலும் சுகாதார வைத்திய அதிகாரிடம் அனுமதியைப் பெறவில்லை. மதுபானத்துடன் கூடிய விடுதி வருமாயின் காரைநகரினுடைய பண்பாடு கலாச்சாரம் போன்றவற்றில் பாதிப்பை ஏற்படுத்துமெனக் கூறி சுகாதார வைத்திய அதிகாரி அந்த அனுமதியை வழங்காது மறுத்திருந்தார்.

கழிவகற்றல் பொறிமுறை மற்றும் நீர்வழங்கல் ஆகிய பொறிமுறைகளுக்கு உரிய இடம் வழங்கப்படாததால் அதற்கு அனுமதியை வழங்க முடியாது என்றும்கூறி அதற்கான அனுமதியை நிராகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையும் மீறி இந்தச் சிலை அமைக்கும் வேலைகளை முன்னெடுதால் பொலிஸாரைக் கொண்டு நடவடிக்கை எடுப்பதாகவும் எச்சரிக்கையும் விடுத்திருந்தார். இந் நிலையில் தொடர்ந்தும் வேலைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த போது பிரதேச சபைத் தவிசாளரால் பொலிஸார் வரவழைக்கப்பட்டு அந்த வேலைகள் உடனடியாக நிறுத்தப்பட்டன.

இவ்வாறு சிவன் சிலை அமைப்பதற்கான பணிகள் நிறுத்தப்பட்டதால் காரைநகரில் மிகப் பெரும் சர்ச்சையொன்று ஏற்பட்டுள்ளது.. குறிப்பாக அங்கு விடுத்கு அனுமதியை வழங்கியுள்ள பிரதேச சபை சிவன் சிலையை அமைப்பதற்கு தடுப்பதாலேயே இந்தச் சர்ச்சசை மேலும் அதிகமாகியிருந்தது. இந்தப் பகுதியில் பிரசித்தி பெற்ற பல்வேறு ஆலயங்கள் இருக்கின்றன.

இவ்வாறான நிலையில் சிவன் சிலையை அமைப்பதற்கு பிரதேச சபை தடுத்துள்ளமை பலருக்கும் சந்தேகத்தையும் விசனத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது. இதனால் இவ்விடயம் சர்ச்சையாக மாறியுள்ளது. குறிப்பாக சமூக வலைத் தளங்களிலும் பரவலாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டும் வருகின்றன.

மேலும் வருமானம் மற்றும் பொருளாதாரம் என்பதற்கு அப்பால் மக்களுடைய கலை கலாச்சாரப் பாரம்பரிய பண்பாடுகளுக்குத் தான் முன்னுரிமை அளிக்க வேண்டும். மக்களுடைய விருப்பத்திற்கு மாறாக எதனையும் செய்யாது மக்களுடைய விருப்பத்தைப் பெற்று உரிய அனுமதிகளையம் பெற்றே விடுதியை அமைக்க வேண்டுமென்றும் கூறியிருக்கின்றார்.

இதனையடுத்து வழிப்படைந்த மக்கள் தமது நிலைப்பாடுகளை வெளிப்படுத்தி வருகின்றனர். அதாவது காரைநகர் பிரதேசத்தின் பண்பாட்டு விழுமியங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.இங்குமதுபான சாலையுடன் கூடிய விடுதி அமையுமானால் அது இங்குள்ள மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்மென்று சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

மேலும் இந்த விடுதி அமைப்பதற்கு அனுமதியை கொடுத்த பிரதேச சபை சிவன் சிலையை அமைப்பதன் நோக்கம் என்ன என்ற கேள்விகளையம் அப்பகுதி மக்கள் எழுப்பியுள்ளனர். இதனையடுத்து பல போராட்டங்களையம் முன்னெடுப்பதற்குரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

---

**கிருஸ்ணபிள்ளை பாலச்சந்திரன்**
உப தவிசாளர்
காரைநகர் பிரதேசசபை

எமது பகுதியில் விடுதி கட்டுவதற்கு பல தரப்பின் அனுமதியைப் பெற்று வந்த பின்னரே நாமும் அனுமதியைக் கொடுத்திருக்கின்றோம். அதே நேரம் அப் பகுதியில் சிவன் சிலையை அமைப்பதற்கு சைவமகா சபையினர் எம்மிடம் அனுமதியைப் பெற்றுக் கொள்ளாமல் சிலையை அமைப்பதாலேயே அதனைத் தடுத்து நிறுத்தியிருக்கின்றோம்.

அங்கு அனுமதி பெறப்படாமல் சிலை அமைப்பது தொடர்பாக தவிசாளருக்கு அப்பகுதி மக்கள் முறைப்பாடு செய்திருந்ததன் அடிப்படையில் அதனைத் தடுத்து நிறுத்துமாறு தவிசாளர் எனக்கு கூறியதற்கமையவே நான் நடவடிக்கை எடுத்திருந்தேன். ஆகவே அங்கு விடுதி அமைப்பழிதுலீ அல்லது சிவனள் சிலை அமைப்பதோ எமக்குப் பிரச்சனையல்ல. ஆனால் அதற்க அனுமதி பெறப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு ஆகும்.

# கடற்படையின் சந்தேகத்தை கிளப்பிய படகு புலிகளுடையதா?

பீஷ்மர்



ஆனந்தபுரம் BOX இற்கு சற்று முன்னை காலகட்டமான புதுக்குடியிருப்பு களமுனையில் நடந்த சம்பவங்களை கடந்த சில வாரங்களாக குறிப்பிட்டு வந்தோம். ஆனந்தபுரம் BOX உருவாகும் தருணம் நெருங்கிக் கொண்டிருப்பதால், அதிகம் நீட்டி முழக்கிக் கொண்டிருக்காமல், இந்தவாரம் அதற்குள் நுழையலாமென்று திட்டமிட்டிருந்தோம். ஆனால், அதற்குள் இடையீடாக சில விசயங்களை குறிப்பிட வேண்டியுள்ளது.

கடந்த சில வார தொடர்களை படித்த பல வாசகர்கள், பல கேள்விகளுடன் எம்மை நேரிலும், தொலைபேசியிலும் தொடர்பு கொண்டனர். அவர்கள் ஏராளம் கேள்விகளையும், சந்தேகங்களையும் குறிப்பிட்டு அவற்றிற்கும் பதில் தர வேண்டுமென கேட்டுக் கொண்டனர்.




அந்த வாசகர்களின் சில குழப்பங்களை இந்தவாரம் தீர்க்கலாமென நினைக்கிறோம். அடுத்த வாரத்தில் இருந்து, ஆனந்தபுரத்திற்குள் நுழையலாம்.

விடுதலைப்புலிகளின் இறுதி நாட்களில் ஆட்லறி செல் தட்டுப்பாட்டை எதிர்கொண்டிருந்தார்கள், அதனால் தளபதிகள் கேட்டும் ஆட்லறி உதவியை புலிகளால் வழங்க முடியவில்லையென்று குறிப்பிட்டிருந்தோம்.

இந்த இடத்தில் சில வாசகர்கள் குழப்பமடைந்திருந்தனர். புலிகளிற்கு அமெரிக்காவில் இருந்து உதவிக் கப்பல் வந்தது, அவுஸ்திரேலியாவிலிருந்து கப்பல் வந்தது என்ற கதைகள் எல்லாம் அப்போது அடிபட்டது. சும்மா வெறும் கப்பல்களா வந்து சென்றது, தமக்கு தேவையான ஆயுதங்களை புலிகள் சேமித்து வைத்திருக்காமல் விட்டிருப்பார்களா? என சில வாசகர்கள் கேட்டிருந்தார்கள்.

உண்மைதான்.

தமக்கு தேவையான ஆயுதங்களை புலிகள் எப்படியாவது சேகரிக்க முயற்சித்தார்கள்தான். ஆனால் அது அமெரிக்காவிலிருந்தோ, அவுஸ்திரேலியாவிலிருந்தோ வந்த கப்பல்களில் இருந்து வந்த ஆயுதங்கள் அல்ல. ஏனெனில், நம்மவர்கள் மத்தியில் அடிபடும் அமெரிக்கா, அவுஸ்திரேலிய கப்பல்கள் எல்லாம் சும்மா கதைகள்.

தீபத்தின் இந்த தொடரில் சில மாதங்களின் முன் புலிகளின் ஆயுத கடத்தல் விவகாரங்கள் பற்றி விலாவாரியாக எழுதியிருந்தோம். புலிகளின் அயுதக்கடத்தல் நெற்வேர்க் எப்படி இயங்கியது, உலக நாடுகளின் துணையுடன் எப்படி அது உடைக்கப்பட்டது என்பதையெல்லாம் ஓரளவு விலாவாரியாக எழுதியிருந்தோம். அதை படித்தவர்களிற்கு இப்படியான சந்தேகம் வராது.

விடுதலைப்புலிகளின் சர்வதேச ஆயுத கடத்தல் நெற்வேர்க் 2002 ஆம் ஆண்டிலிருந்தே உடைக்கப்பட தொடங்கி விட்டது. கே.பி சர்வதேச பொறுப்பாளர் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டு, புதிய முகங்கள் ஐரோப்பாவில் கால் பதிக்க ஆரம்பித்ததும், கே.பியின் ஆட்கள் அதிருப்தியுடன் ஒதுங்கி விட்டனர். அல்லது ஒதுக்கப்பட்டு விட்டனர். இவர்களை குறிவைத்த வெளிநாட்டு உளவுப்பிரிவுகள், சிலரை இரகசியமாக கைது செய்தது. சிலருடன் டீல் செய்து கைக்குள் போட்டுக் கொண்டது. இதன்மூலம் அக்குவேறு ஆணிவேறாக புலிகளின் வெளிநாட்டு நெற்வேர்க் தகவல்கள் வெளிநாட்டு புலனாய்வு அமைப்புக்களிற்கு சென்று, அவர்கள் மூலம் "தேவையான" இடங்கள் அனைத்திற்கும் சென்றது.

ஒரு கட்டத்தில் புலிகளின் கப்பல்கள் இலங்கையை நோக்கி பயணித்தாலே, சர்வதேச கடல் எல்லைக்குள் வைத்தே தாக்கியழிக்கப்பட்டன. தென்கிழக்காசிய நாடுகளில் பதிவு செய்யப்பட்ட கப்பல் நிறுவனங்கள், தென்கிழக்காசிய துறைமுகங்களில் தரித்து நின்றுவிட்டு, நிக்கோபர் தீவுக்கூட்டங்களிற்கிடையில் மறைந்து தங்கியிருந்து, கடற்புலிகளின் விநியோக படகுகள் சர்வதேச கடல் எல்லைக்கு அருகில் வரும் சமயத்தில், மறைந்து தங்கியிருக்கும் ஆயுதக்கப்பல்களும் அந்த ஸ்பொட்டிற்கு சென்று ஆயுதங்களை பரிமாறிக் கொள்ளும்.

நிக்கோபர் தீவுக்கூட்டம்தான் புலிகளின் ஆயுதக்கப்பல்களின் மறைவிடம் என்ற விசயம் சில வெளிநாட்டு உளவு அமைப்புக்களின் ஊடாக இலங்கைக்கும் தெரிய வந்தது. யுத்த காலத்தில் கல்முனை கடற்பரப்பிற்கு அப்பால் புலிகளின் ஆயுதக்கப்பல்கள் தாக்கியழிக்கப்பட்டன என இலங்கை கடற்படை அடிக்கடி அறிவித்தது வாசகர்களிற்கு நினைவிருக்கலாம். கிழக்கு கடலோரமாக கல்முனை கடற்பரப்பையும், நிக்கோபர் கடற்பரப்பையும் குறுகிய சர்வதேச 'கடற்பரப்பு பிரிக்கிறது. நிக்கோபர் கடற்பரப்பில் மறைந்திருக்கும் புலிகளின் ஆயுதக்கப்பல்கள், திடீரென புறப்பட்டு வந்து, புலிகளின் கப்பல்களிற்கு ஆயுதங்களை பரிமாறும் புள்ளி கண்டுபிடிக்கப்பட்டதும், புலிகளின் ஆயுத பரிவர்த்தனை முற்றாக இல்லாமல் போனது. இதற்கு பின்னர் புலிகள் இன்னொரு மார்க்கத்தை கண்டுபிடித்தனர்.


அது, மன்னார் கடற்பரப்பிற்குள்ளால் தென்னிந்திய மார்க்கங்களில் இருந்து சிறிய றோலர் படகுகளில் ஆயுதங்களை கொண்டு வருவது. மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து கப்பல்களில் ஆயுதங்களை நிரப்பி, எப்படியோ புலிகளின் றோலர்களில் ஏற்றிவிடுவார்கள்.

றோலர் படகுகளை பற்றி வாசகர்கள் அறிந்திருப்பார்கள். அவை சிறியவை. பெரியளவில் ஆயுதங்களை ஏற்ற முடியாது. கொஞ்சம் கொஞ்சமாக எறும்பு சேகரிப்பதை போலத்தான் ஆயுதங்களை சேகரிக்க முடியும். ஆனாலும், சர்வதேச கடலில் புலிகளின் ஆயுதக்கப்பல்கள் வரிசையாக தாக்கியழிப்பட்டுக் கொண்டிருந்த நிலைமையில், புலிகளிற்கு இதைவிட வேறு தெரிவுகள் இருக்கவில்லை.

அத்தியாவசியமான ஆயுதங்களை இந்த வழியில் கொண்டு வந்து கொண்டிருந்தார்கள். ஆனால் புலிகளின் துரதிஷ்டம். அந்த மார்க்கமும் நீண்ட நாள் நீடிக்கவில்லை.

ஒருமுறை மன்னார் கடற்பரப்பில் ரோந்து சென்று கொண்டிருந்த கடற்படையினருக்கு ஒரு றோலரை பார்த்தபோது சந்தேகம் எழுந்தது. மீன்பிடியில் ஈடுபடுவதை போல பாவனை பண்ணித்தான் இந்த ஆயுதக்கடத்தல் நடந்தது.

ஒருறோலர் கடலிற்குள் பெரும்பகுதி அமிழ்ந்த நிலையில் பயணித்துக் கொண்டிருந்தது. றோலர் முழுவதும் நிரப்பப்பட்டிருந்தால்தான் இப்படி கடலிற்குள் அமிழ்ந்து பயணிக்கும். மீன்பிடியில் ஈடுபடும் றோலர்கள் அப்படி கடலுக்குள் அமிழாது. காரணம், அவ்வளவு மீன் எந்த றோலருக்கும் கிட்ட வாய்ப்பேயில்லை.



(தொடரும்)




# சொல்லேர் உழவு

## ஆங்கிலத்திலேயே இத்தனையென்றால் தமிழில் இதற்கு பஞ்சமா? 4

கவிஞர் மகுடேசுவரன்

பொருள் தரத்தக்க ஒரு சொல், வேர்த்தன்மையும் பொருளும் நிறைந்த ஒரு சொற்பகுதி... முன் பின்னாக ஒட்டிக்கொண்டு பத்திருபது சொற்களைத் தோற்றுவித்துவிடும். பெரும்பாலான மொழிகளின் சொல் தோற்றுவாய் முறைமை அவ்வகையிலேயே அமைந்திருக்கிறது. தமிழுக்குள் நுழைவதற்கு முன்பாக ஆங்கிலத்திலேயே ஒரு நல்லெடுத்துக் காட்டின்வழி இத்தன்மையை விளக்குவது இன்னும் எளிமையாக இருக்கும். ஆங்கிலச் சொற்களின் தோற்றத்திற்கு அவற்றின் முன்னும் பின்னுமாக ஒட்டும் ஒரேயொரு சொல்லுருபு எப்படிப் பொருள் தருகிறது என்பதைப் பார்க்கலாம். ஆங்கிலத்தின் வழியாக வந்தால்தான் இன்றைய தலைமுறையினர்க்கு எதுவும் எளிதில் விளங்குகிறதாயிற்றே...!



Cent என்னும் இலத்தீனத்து மொழிச்சொல் ஒன்று இருக்கிறது. அச்சொல் ஆங்கிலத்துக்கு ஏற்றுமதியாகிறது. Cent என்றால் 'நூறு' என்னும் எண்ணிக்கைப் பொருள். Centi என்றால் 'நூற்றின் ஒரு பகுதியான' என்று பொருள். இந்த Cent என்னும் இலத்தீனச் சொல்லுருபை வேராக வைத்துக்கொண்டு ஆங்கிலத்தில் கைக்கொள்ள முடியாத அளவுக்குச் சொற்களை உருவாக்குகிறார்கள். ஒரேயொரு சொல்லுருபு பத்து, இருபது, முப்பது என்று சொற்களை உருவாக்கிக்கொண்டே செல்கிறது. எப்படி என்று பார்ப்போம்.

Cent என்று முன்னும் பின்னுமாக ஒட்டித் தோன்றும் ஆங்கிலச் சொற்களை நினைவுபடுத்திப் பாருங்கள். Percent என்றால் 'நூற்றுக்கு இவ்வளவு' என்பது பொருள். அதைத்தான் நாம் 'விழுக்காடு' என்கிறோம். Century என்ற சொல் 'ஆண்டுகளின் நூற்றுத் தொகுதி'யைக் குறிக்கிறது. நூற்றாண்டு. மட்டைப் பந்தாட்டத்தில் எடுக்கப்பட்ட நூறு ஓட்டங்களுக்கும் அதுவே பெயர். Centurian என்றால் நூற்றினை அடைந்தவர். நூறாம் அகவை வரை வாழ்ந்தவர் என்றாலும், நூறு ஓட்டங்களை அடைந்தவர் என்றாலும் அவர் அவ்வாறு அழைக்கப்படுகிறார். நூற்றுக்கால் பூச்சியினங்களை 'Centipede' என்று அழைக்கிறார்கள். அமெரிக்க நாணயம் டொலர். ஒரு டொலரின் நூற்றில் ஒரு பங்கு 'Cent' என்றே அழைக்கப்படுகிறது. தேர்வில் நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெற்ற மாணவனை 'Centum எடுத்திருக்கான்ஞ்' என்று பாராட்டுகிறோம். ஒரு மீட்டர் நீளத்தை நூறு பங்காகப் பிரித்தால் ஒவ்வொரு பங்கும் Centimetre. ஒரு இலிட்டரில் நூற்றில் ஒரு பங்கு Centilitre. ஒரு கிராம் நிறுத்தல் அளவையில் நூற்றில் ஒரு பங்கு Centigram.

ஒரேயொரு வேரிலிருந்து எப்படியெல்லாம் பற்பல கிளைச்சொற்கள் தோன்றுகின்றன என்பது இப்போது விளங்குகிறதா? Centi என்பதற்கு நூற்றில் ஒரு பங்கு என்னும் பொருள் விளக்கம் தெரிந்திருந்தால் ஒரு மீட்டர்க்கு நூறு சென்டிமீட்டரா, ஆயிரம் சென்டிமீட்டரா என்னும் குழப்பமே வராதில்லையா? ஆங்கிலத்தைக் கற்பிக்கின்ற மேலை நாட்டுப் புலவர் பெருமக்கள் அம்மொழியின் சொல் வேர்த்தன்மையைக் கற்பித்துத்தான் மொழிப்புலமையை ஊட்டுகிறார்கள்.

ஆங்கிலத்திலேயே இத்தன்மை இருக்கையில் அம்மொழியைவிடவும் தொன்மையான தமிழில் வேர்ச் சொற்களுக்கும் சொல்லுருப்புகளுக்கும் பஞ்சமா என்ன? நம் மொழியிலும் கணக்கிலடங்காத வேர்ச் சொற்கள் இருக்கின்றன. ஒரு சொல் எவ்வாறெல்லாம் தோற்றுவிக்கப்படலாம் என்பதற்கும் வரையறுப்புகள் இருக்கின்றன. அவற்றை முறையாக அறிந்துகொண்டால் நம் நினைவெங்கும் ஆயிரக்கணக்கான சொற்கள் மணிமணியாக நிரம்பிவிடும். பேசுவதற்கும் எழுதுவதற்கும் சொல் தட்டுப்பாடே தோன்றாது. ஒன்றைக் கூற விரும்பினால் பொருத்தப்பான்மை மிக்க நற்சொற்களைப் பயன்படுத்திக் கூறும் ஆற்றல் கைவந்துவிடும். நமக்குத் தெரியாத அருஞ்சொற்களின் எண்ணிக்கை மடமடவெனச் சரியும். நாமே புதிதாய் ஒரு சொல்லை உருவாக்கிக் காட்டலாம். அவ்வாறு நாம் உருவாக்கும் சொற்கள் மொழியை வளப்படுத்தும். நாம் சொற்களை உருவாக்குகிறோமோ இல்லையோ, மொழிப்புலத்தில் இருண்மையாகவே இருக்கின்ற இந்தத் தன்மைகள் நமக்குப் பிடிபட்டுவிடும். **தொடரும்...**

---

21-ம் பக்க தொடர்ச்சி...

கணவனிடம் எழுத்தில் அனுமதி பெற வேண்டும்.

அத்தோடு தனியாக வாழும் பெண்ணாகில் அவருடைய தந்தைக்கோ, சகோதரனுக்கோ அவருடைய சொத்துக்களை முகாமைத்துவம் செய்யும் அங்கீகாரம் வழங்கப்படுகின்றது.

அப்படிப் பார்க்கையில் திருமணம் என்பது ஒரு பெண்ணுக்கு தந்தையின் பாதுகாவலிலிருந்து கணவனின் பாதுகாவலுக்கு மாற்றம் பெறுவது போல் பொருள் கொள்ளலாம்.

இதன் நகைச்சுவையான விடயம் என்னவெனில், இக்காலத்தில் தேர்ச்சி பெற்ற முகாமையாளரகள், அதிகாரிகளாக செயற்படும் பெண்கள், அலுவலகங்களில் அனைத்தையும் ஆளும் பெண்கள், தங்களது வாடிக்கையாளர்களது கோடிக்கணக்கான சொத்துக்களை முகாமைத்துவம் செய்வதற்கு அங்கீகாரம் பெற்ற பெண்கள், தமது சொந்தச் சீதனக் காணியையும், வீட்டையும் முகாமையிட உரிமையில்லாதவர்களாகின்றனர்.

தற்போது வடக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில், விதவைகளுக்கும், வறுமைக்கோட்டின் கீழ் உள்ள பெண்களுக்கும், சுய தொழில் செய்ய பெண்களுக்கான வங்கி கடன்கள் வழங்கப்படுகிறது.

கடன் வழங்குவது என்னமோ பெண்கள் சுயதொழிலிற்காகவே.. ஆனால் ஒரு குடும்ப தலைவனின் அல்லது குடும்பத்தில் உள்ள ஒரு ஆணின் கையெழுத்து இல்லையேல், அந்த வங்கி கடன் கிடைப்பது மிக சிரமம் ஆகிவிடுகிது.

இதுவொரு ஒரு உதாரணம் மட்டுமே இதை போன்று பல இடங்களில் பெண்கள் சுயமாக இயங் முடியாமல் இருப்பது கவலைக்குரிய விடயம்.

இன்று பலர் மனைவியரை, மனைவி என்று அழைப்பதை விடுத்து, துணைவி, இணையர் என்றே கூறுகின்றனர். காரணம், மனைவி என்பது மனையை ஆளுபவள் என்றே பொருள். ஆனால் ஒரு மனையை மட்டும் ஆளுவதில்லை பெண்.

மனையென்பது ஆண் பெண் இணைந்து ஆளுவது (சமைத்தல் தொடங்கி பிள்ளைகளை பராமரித்தல் வரை இருவர் பங்குள்ளது) என்பது பொருள். பெண் மனையாளாக இல்லை. அவளுக்கென தனி வாழ்வுண்டு. சமூகத்தில் அந்தஸ்த்துள்ளவளாக சுயமாக வாழும் தகுதி உண்டு.

எனினும் என்ன தான் துணைவி என்றாலும், இணையென்றாலும், தேசவழமை சட்டத்தை பொறுத்தவரை யாழ்ப்பான பெண்கள் அனைவரும் மனைவியரே.

காரணம், மனைவி என்ற வரைவிலக்கணத்திற்கு ஏற்ப, ஒரு ஆணின் அனுமதியின்றி பல விடயங்கள் பெண்களை கட்டிப் போட்டிருக்கின்றது.

எனவே அனைத்து பாதுகாப்பையும் உரிமகளையும் கொடுத்த தேசவழமை, சுயமாக செயற்படும் அந்தஸ்த்தை பறித்துள்ளது.

குறித்த சட்டமானது முன்னைய காலத்தில் ஊதியமின்றி உழைக்கும் பெண்களாக இருந்தவர்களுக்கு ஏற்புடையதாகலாம். ஆனால் இன்று பெண்களின் ஆளுமை விரிவடைந்தே செல்கின்ற நிலையில், சட்டத்திலும் மாற்றம் தேவையென்பதே உண்மை.


இதனைவிட முரண்பாடான விடயம் யாதெனில், கணவன் தனது முதுச சொத்துக்களையோ, தேடிய தேட்டத்திலான சொத்துக்களையோ, விற்கவோ, அடகு வைக்கவோ முற்படுகையில், மனைவியின் அனுமதியோ, ஆலோசனையோ அவசியமற்றதாகின்றது.

எனவே இச்சட்டம் மாற்றியமைக்கப்பட நேரம் கனிந்துவிட்டது. இருப்பினும் மாற்றமானது சட்ட விதிமுறைகளுக்கமையவே ஏற்படுத்தப்பட வேண்டும்.

தேச வழமைச் சட்டமானது இலங்கையின் சட்ட முறைமையினுள் பின்னிபிணைந்துள்ளது. அது இன்றும் யாழ். குடா நாட்டில் பெரும்பாலரது வாழ்க்கை முறையாகத்தான் இருக்கிறது. யாழ்ப்பாணத்துக்குப் பல வருடங்களாகச் செல்லாதிருப்பினும் அவர்களுக்கு இச்சட்டம் பொருந்தும்.

எனவே, இலங்கைச் சட்டங்களுடன் முரண்படாது இணைந்துள்ள இந்தச் தேசவழமை சட்டத்தை மீள்பரிசீலித்து, மீளமைப்பது அவசியமாகின்றது.


பால்நிலைச் சமத்துவத்தைக் கோரும் அரசும், நீதித்துறையும், ஆண்களும் இதற்கு ஆதரவளித்து முற்போக்கான சிந்தனையுடன் பெண்களை நம்பும் விதமாக, அவர்கள் சுயாதீனமாக செயற்பட அனமதி வழங்கி, இப்பிரச்சினையை அணுக வேண்டும் என்பதே பெரும்பாலானோர் விருப்பம்.





www.vikatan.com

# புதிர் விளையாட்டு


ஸ்வேதாவும் ஸ்நேகாவும் ட்வின்ஸ். ஸ்கூல் டான்ஸ் புரோகிராமில் ஒரே மாதிரி டிரெஸ்ஸில் ஆடினார்கள். ஆனாலும், அவர்களுக்குள் 10 வித்தியாசங்கள் இருக்கிறது. அதை, 10 எண்றதுக்குள்ளே கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்!




தனித்தனியாக இருக்கும் படத் துண்டுகளை வெட்டி, சரியான இடத்தில் ஒட்டுங்க... 'நண்பேன்டா' என வரும் பப்பியைக் கொஞ்சுங்க!




தனி ஒருவனாக கண்களை மூடித் தூங்குவது யாரு?
1 முதல் 87 வரை எண்களை இணைத்துப் பாரு!




கூட்டல், கழித்தலில் கிடைக்கும் விடை எண்களுக்கு ஏற்ற வண்ணத்தைத் தீட்டுங்க... கறுப்பு வெள்ளையில் இருக்கும் வண்ணத்துப்பூச்சியை, கலர்ஃபுல்லா மாற்றுங்க!




மொத்தம் எத்தனை முதலைகள் இருக்கின்றன?



நம்ம ஃப்ரெண்டு மாரி, வீட்டுச் சாவியைத் தொலைச்சுட்டாரு. புத்தகத்தில் உள்ள படம்தான் சரியான சாவி. அது, இங்கே இருக்கும் சாவிகளில் எங்கே இருக்கு? வட்டம் போட்டுக் காட்டுங்க!






விடைகள்:

10 எண்றதுக்குள்ளே...



முதலைக் கூட்டம்!

9

மாரி... சாவி!



றெஜிபோம் வடிவமைப்புத் துறையில் 10 வருடங்கள் கடந்து... அதியுச்ச வடிவமைப்புடன்

# சித்தா றெஜிபோம்

- இன்றைய நவீன உலகில் புதுப்புது வடிவங்களும் மாற்றங்களும் அறிமுகமாகிக் கொண்டே இருக்கின்றன. இன்றைக்கு சிறிய விழாவானாலும், பெரிய பெரிய விழாக்களானாலும் விழா மண்டபங்களையும், இல்லங்களையும் றெஜிபோம் வடிவங்கள் ஆக்கிரமித்துக் கொண்டு இருக்கிறது யாவரும் அறிந்த விடயம்.
- அந்த வகையில் கடந்த பத்து வருடங்களாக இந்திய தொழினுட்பத்துடன் ஏற்ப (டெக்னோலோஜி) (3D,2D,Cake Cutting) தரமான டஸ்ற் கொண்டு H.D Quality றெஜிபோமில் அதிநவீன டிசைன்களுடன் கொக்குவில் அச்சுக்கூட வீதியில் பத்மநாதன் திருவருட்செல்வன் என்பவரால் சித்தா றெஜிபோம் என்னும் நிறுவனம் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே உங்கள் இல்லங்களில் நடைபெறும் விஷேட நிகழ்வுகளுக்கு ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்.
- இந்த நிறுவனத்திற்கு விஜயம் செய்ய சந்தர்ப்பம் எமக்கு கிடைத்தது. பூக்களை கொண்டு அலங்கரித்தது போல் றெஜிபோம் வடிவமைப்புக்கள் கண்ணுக்கு குளிர்ச்சி தரக்கூடிய வகையில் அங்கே இருந்ததை அவதானிக்க முடிந்தது. இவ்வடிவமைப்புக்கள் றெஜிபோமிலோ அல்லது சீமெந்து போன்ற கலவைகளால் செய்யப்பட்டதா என்ற ஆச்சரியமும் சந்தேகமும் எழும் வகையில் இருந்தது.
- மேலும் எமது சந்தேகத்தினை வடிவமைப்பாளரிடம் கேட்ட போது அவர் சிரித்துக் கொண்டே இது றெஜிபோம் வடிவமைப்புக்கள் என்பதை உறுதிப்படுத்தினார். அந்தளவுக்கு அதன் வடிவமைப்பு, நேர்த்தி என்பன சரியாக கையாளப்பட்டதை எம்மால் அவதானிக்க முடிந்தது. மேலும் பத்துப் பேருக்கு மேற்பட்ட பணியாளர்கள் ஒரு குடும்பமாக பல பல வடிவங்களை விரைவாக செய்து கொண்டிருந்தமையும் பார்க்க முடிந்தது.
- இதன் உரிமையாளர் திரு பத்மநாதன் திருவருட்செல்வன் அவர்களுடன் உரையாட சந்தர்ப்பம் கிடைத்தது. நாம் இத்துறையைப் பற்றி அவரிடம் கேட்கும் போது எனக்கு சிறு வயதிலிருந்தே கலை, இலக்கிய சம்பந்தமான விடயங்களில் அதிக ஆர்வம் இருந்தது. அந்த வகையில் றெஜிபோம் வடிவமைப்புத் துறையில் மிகவும் ஆர்வம் இருந்தது. எனவே இத் துறையை தொழிலாகக் கொண்டு வருகிறேன்.
- இத் தொழில் பற்றி மேலும் கேட்ட போது நானும் இங்குள்ள பணியாளர் களும் ஒரு குடும்பமாக செயற்பட்டு வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப வடிவமைத்துக் கொண்டிருக்கிறோம். எமது வடிவமைப்புக்கள் இங்கு மட்டுமல்ல வெளிநாடுகளில் எம் தமிழர்கள் வாழும் இடங்களிலுள்ள வீடுகள் ஆலயங்கள் , மண்டபங்கள் எமது வடிவமைப்புகள் காட்சிப்படுத்திக் கொண்டிருக்கிறது. எனவே இனிவரும் காலங்களில்றெஜிபோம் வடிவமைப்பு துறையே உலகை ஆளும் என்பதில் ஐயமில்லை எனத் தெரிவித்தார்.
- எமக்கு அன்றைய மாலை விஜயம் ஒரு சிற்பக்கலைக் கூடத்திற்குள் சென்ற உணர்வுடன் அலுவலகம் திரும்பினோம்.




NO 65A. அச்சுக்கூடவீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 0755445901, வைபர் :- 0750394357

# பிரகபி கிராபிக் டிசைனர்ஸ்

Braghapy Graphic Designers

அச்சு கூடங்களுக்கான அனைத்து வடிவமைப்புக்களையும் (Designes) online (viber, whatsup, mail) மூலமாக தரமாகவும், நேர்த்தியாகவும்குறிப்பிட்ட நேரத்தில் டிசைனிங் செய்து கொடுக்கப்படும்.

- ✓ பனர் பிறிண்டிங்
- ✓ அல்பம் டிசைனிங்
- ✓ லெட்டர் ஹெட்
- ✓ பில் புத்தகங்கள்
- ✓ விசிற்றிங் காட்
- ✓ திருமண அழைப்பிதழ்கள்
- ✓ சுவரொட்டிகள்
- ✓ கப் பிறிண்டிங்
- ✓ போட்டோ பிரேமிங்
- ✓ போட்டோக் கொப்பி
- ✓ கலர் பிறிண்டிங்



No.1219, பூநாரி மடம்,
கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
0212227776, 0717939246



வடிவமைப்பிற்கான தனித்துவமான ஒரே நிறுவனம்.





இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்றட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 07.10.2018 அன்று வெளியிடப்பட்டது.